Registered at the G. P. O. as a Newspaper விலைசதம் 20

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 இதழ் 156

பராபவ ஆனி 32 ரபி:அவ் 26 (16-7-66) சனிக்கிழமை

மில்க் வைற்
நீல சோப்
10 சதம் கட்டி
வாங்கி அதிக லாபம்
அடையுங்கள்

பாலக்காடு
ஆர். வி. ஜி.
பீடிகளை உபயோகியுங்கள்
தயாரிப்பாளர்கள்:
வ. ல. இராமசாமிப்பிள்ளை
அன் சன்ஸ்,
47, பீச்ரோட், யாழ்ப்பாணம்.

அரசாங்க

# கூட்டுத்தாபன ஊழியர் வேலைநிறுத்தம் செய்வர்?

## ஜவுளி கூட்டுத்தாபன ஊழியர் 26வது நாளாக வேலை நிறுத்தம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்க கார்ப்பரேஷன்களைச் சேர்ந்த ஊழியர்கள் எந்த நேரத்திலும் வேலை நிறுத்தம் செய்யலாமெனக் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

வியாங்கொடை தேசிய ஜவுளிக் கார்ப்பரேஷன் ஊழியர்கள் கடந்த 25 தினங்களாக நடத்திவரும் வேலை நிறுத்தத்துக்கு அனுதாபம் தெரிவிக்கு முகமாக எந்த நேரத்திலும் தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தயாராய் இருக்குமாறு சகல அரசாங்க கார்ப்பரேஷன்களையும் சேர்ந்த ஊழியர்களையும் அரசாங்க கார்ப்பரேஷன்கள் ஊழியர் சங்கம் கேட்டுள்ளது.

வியாங்கொடை ஜவுளி ஆலையில் 1200 தொழிற்சாலைத் தொழிலாளரும், 175 தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்களும், எழுதுவினைஞர்களும் கடந்த 25 தினங்களாக வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

## பிரதமருடன் வங்கி ஊழியர் பிரதிநிதிகள் பேச்சு

கொழும்பு, வெள்ளி

இலங்கை வங்கி ஊழியர் சங்க பிரதிநிதிகள், பிரதமர் டட்லியைச் சந்தித்து வேலை நிறுத்தம் சம்பந்தமான தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

தொழில் மந்திரியின் சிபார்சுகளில் குறிப்பிட்ட சில அம்சத்தையே தாங்கள் ஆட்சேபித்ததாயும், றோயல் கமிஷனை தாங்கள் ஏற்பதாயும் ஆனால் பிரச்னையில் சம்பந்தப்பட்ட மூவரின் பதவி உயர்வுபற்றிய விஷயமும் கமிஷனிடம் விடவேண்டுமென்றும் அவர்கள் கூறினர். பிரதமருடன் ஒன்றரை மணி நேரம் பேச்சு நடைபெற்றது

சில தினங்களில் கமிஷனின் அலுவல்பற்றி வரையறுக்கப்படும் என பிரதமர் வாக்குறுதியளித்தார்.

வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்துக்கு தீர்வு காணுவதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய்வதற்கு, பிரதமர் உட்பட உயர்தர அரசாங்க அதிகாரிகள் மகாநாடொன்றைக் கூட்டுமாறு வங்கி ஊழியர் சங்கம் தொழில் அமைச்சரிடம் முன்னர் கோரியிருந்தது.

பதவி உயர்வுபற்றிப் பொது விசாரணை நடத்தப்படுவது நல்ல காரியமேயானாலும் வங்கி ஊழியர் வேலை நிறுத்தத்துக்குக் காரணமான கிறிண்ட்லேய்ஸ் வங்கி ஊழியரின் பதவி உயர்வுபற்றி விசேஷமாக விசாரணை நடத்த றோயல் கமிஷனுக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டியது அவசியம் என ஊழியர் சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

நகைகளுக்கு
யப்பான்
ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 516. தந்தி: 'யப்பான்'

ஆனையிறவுக்கு அப்பால்

## தெற்கையும் கிழக்கையும் வளம்படுத்துவீர் வாலிபரே!

### வடபகுதி இளைஞர்களுக்கு மட்டக்களப்பு எம். பியின் அழைப்பு

குரும்பசிட்டி, சனி

''எந்த நாட்டு வாலிபர்கள் வலிவோடு சமூக பொருளாதார. கலை, அரசியல் துறைகளில் கவனம் எடுத்து சரியான வழியில் உழைக்கின்றார்களோ அந்த நாடு உலகத்தில் சுதந்திரமும் சுபீட்சமும் மிகுந்த நாடாக விளங்கும். இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் தமது மொழி உரிமைப் போராட்டத்தை நடாத்தியபோது தமிழ் வாலிபர்கள் செய்த தியாகங்கள் மகத்தானவை. தமிழரசுக் கட்சியின் போராட்டத்தைத் தீவிரமாகவும் வீரத்துடனும் வாலிபர்கள் நடாத்தி வைத்துள்ளனர். நிகழ் கால வாலிபர்களே வருங்காலத்தின் தலைவர்கள் அவர்கள் காலம் உணர்ந்து ஆற்றும் பணி அவர்களை மட்டுமல்லாது தமது சமூகத்தவரையுமே என் நாட்டினையுமே உயர்த்தி ஏற்றுகிறது. உலக வரலாற்றில் ஒடுக்கப்பட்ட இனத்தின் உரிமைகளைப் பெறுவதிலும் அடிமைப் படுத்தப்பட்ட நாட்டின் சுதந்திரத்தைப் பெறுவதிலும் வாலிபர்களே முக்கிய பங்கு எடுத்துள்ளனர்.''

நெல்லியடி தமிழரசு வாலிப முன்னணியின் முதலாவது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்து தலைமை உரையாற்றுகையில் மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு தெரிவித்தார். கடந்த இரவு நடைபெற்ற இவ்விழாவில் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவேற்பு உபசாரமும் அளிக்கப்பட்டது.

(6-ம் பக்கம் பார்க்க)

வடபகுதியில்

## சட்டவிரோத குடியேற்ற தடுப்பு நடவடிக்கைகள்

### நேரில் ஆராய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் யாழ் விஜயம்

குரும்பசிட்டி, வெள்ளி

வடபகுதிக் கரையோரங்களில் அதிகரித்துவரும் சட்டவிரோதக் குடியேற்றத்தை தடைசெய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அறிவதற்கு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு ஈ எல் அபயகுணவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவிருக்கிறார் இவருடன் சில உயர்தர அரசாங்க அதிகாரிகளும் வருவார்கள் என்றும் அநேகமாக இம் மாதம் 21-ம் திகதி இவர்கள் யாழ்ப்பாணம் விஜயம் செய்வார்கள் எனவும் தெரிய வருகிறது.

காங்கேசன் துறையில் அமைக்கப்பட்டுள்ள சட்ட

(6-ம் பக்கம் பார்க்க)

## தமிழரசுக் கட்சியின் செயற் குழு இன்று யாழ்ப்பாணத்தில் கூடுகிறது

யாழ்ப்பாணம், சனி

இன்று காலையில் நடைபெறும் தமிழரசுக்கட்சியின் செயற்கமிட்டிக் கூட்டத்தில், அண்மையில் கல்முனை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை அமுல் செய்வது குறித்து ஆலோசிக்கப்படும். யாழ்ப்பாணத்திலுள்ள தமிழரசுக்கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் எம். திருச்செல்வமும் தமிழரசுக்கட்சி எம். பி.க்களும் கலந்து கொள்வார்கள்.

கல்முனையில் நடைபெற்ற கட்சியின் பதினாவதுதேசிய மகாநாட்டுக்குப் பின்னர் நடைபெறும் இம்முதலாவது கூட்டத்தில் அரசாங்கத்தின் உடனடியான கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டிய தீர்மானங்கள் விரிவாக ஆராயப்படலாமெனத் தெரியவருகிறது. கல்முனை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விரைவாக அமுல் செய்வதில் அரசாங்கத்துடன் எவ்விதமாக அணுகுவதென்பது பற்றியும் பரிசிலனை செய்யப்படும் என்று நம்பப்படுகிறது.

இக்கூட்டம் தமிழரசுக் கட்சித் தலைவர் டாக்டர் ஈ எம். வி. நாகநாதன் தலைமையில் நடைபெறும்.

### நகரமண்டபத்தில் வரவேற்பு

இன்று மாலை யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஸ்தலஸ்தாபன மந்திரிக்கும் தமிழரசுக்கட்சி எம். பி.க்களுக்கும் மக்கள் முன்னேற்றச்சங்க ஆதரவில் ஒரு பொதுவரவேற்பு அளிக்கப்படும்.

இம்மாதம் 23-ம் திகதி தமிழரசுக்கட்சித் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணியின் பொதுக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவிருக்கின்றன (குநி)

### வாலிப முன்னணி மகாநாடு

வாலிப முன்னணியின் மகாநாட்டை எங்கு நடத்தவேண்டுமென்பதில் கருத்துவேற்றுமை நிலவிய போதிலும் அநேகமாக காங்கேசன்துறையிலேயே மகாநாடு கூட்டப்படலாமென்று நம்பப்படுகிறது.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 98-வது இலக்க தேசி. லொத்தர் சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதற் பரிசு
05 J 0455—ரூ. 41,430

இரண்டாம பரிசு
13 C 0501—ரூ. 16,572

மூன்றும பரிசு
20 V 0533—ரூ. 4,143

தலா ரூ. 207-15 ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

04 D 0240 19 F 0062
17 R 0060 06 L 0241

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டட்லி - ஜே. ஆர். பிளவு உண்மையா?

## புதிய பல்கலைக்கழகம் பற்றி அரசாங்கம் ஆலோசனை

(அரசியல் நிருபர்)

பிரதமர் டட்லிக்கும் ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்குமிடையே பிளவு ஏற்பட்டிருப்பதாக சில எதிர்க்கட்சியினரும், அவர் சார்பான பத்திரிகைகளும் பிரசாரம் செய்து வருகின்றன. இதில் எவ்வளவுதூரம் உண்மை இருக்கிறது என்பது தெரியவில்லை. ஆனால் "இத்தகைய பிரசாரம் வெறும் கற்பனை என்றும் பிரதமருக்கும் தமக்குமிடையே இதுவரை அபிப்பிராயபேதம் இருந்ததில்லை-இனியும் இருக்காது" என்றும் ஜே. ஆர். சமீபத்தில் தமது கண்டிய விஜயத்தின்போது திட்டவட்டமாகக் கூறினார்.

மாறாக, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி-லங்கா சமசமாஜக்கட்சி--கம்யூனிஸ்ட்கட்சி கூட்டணியில் ஏழு பிளவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. சிறிமாவோ, டாக்டர் என். எம். பெரேரா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா ஆகியோர் முதலாவது கோஷ்டியிலும் என். எம். கோஷ்டியை எதிர்க்கும் பீலிக்ஸ், ஆர். எஸ். பெரேரா, எஸ். கே. சூரியாராச்சி ஆகியோர் இரண்டாம் கோஷ்டியிலும், என். எம்., பீலிக்ஸ் ஆகியோரை எதிர்க்கும் ஆர். ஜி. சேனநாயக்கா, திவுலப்பிட்டி எம். பி. திரு. லக்ஷ்மன் ஜயக்கொடி ஆகியோர் மூன்றும் கோஷ்டியிலும் இருக்கிறார்களாம்.

மைத்திரிபால சேனநாயக்கா, எல். பி. டி. இலங்கசிறிவர்த்தன ஆகியோர் நாலாம் கோஷ்டி என்றும் இவர்கள் ஆர். ஜி.யை எதிர்ப்பதாயும் கூறப்படுகிறது.

திருவாளர்கள் பி. பி. ஜி. கலுகல்லை, டி. பி. தென்னக்கோன், டபிள்யு. பி. ஜி. ஆரியதாஸ ஆகியோர் ஐந்தாவது கோஷ்டி என்றும், லெஸ்லி, பேர்னாட் சொய்ஸா, கொல்வின் ஆர். டி' சில்வா ஆகியோர் ஆறுவது கோஷ்டி என்றும், மார்க்ஸிய விரோதிகள் ஏழாவது கோஷ்டி என்றும் மேலும் கூறப்படுகிறது. இவைகள் எல்லாம் உண்மையாய் இருந்தாலும் அதில் ஆச்சரியமிருக்க முடியாது. பிளவுகள் எங்குதான் இல்லை? அரசாங்கத்துக்குள்ளும், சொந்தக் கட்சிகளுக்குள்ளும் பிளவு இருப்பது இயல்பேயாயினும், கட்சியின் நலனுக்காகக் கட்சியும், தேசிய நலனுக்காக அரசாங்கமும் கருத்துவேற்றுமைகளை வெளியில் காட்டாமல் ஒன்றாகத்தான் வேலை செய்ய வேண்டும்.

ஜோன்ஸன் -- ரஸ்க் பிளவு, மாஸேதுங்-குஎன்லாய் பிளவு, நேரு-படேல் பிளவு, காமராஜ்-இந்திரா பிளவு என உலகில் பல வதந்திகள் உலவின. ஆனால் வெளிப்படையாக அவை ஒன்றும் செயல்படவில்லை.

ஐக்கியதேசியக் கட்சிக்குள்ளேயே டட்லி ஆதரவாளர்களும் ஜே. ஆர். ஆதரவாளர்களும் இருக்கக்கூடும். ஆனால் ஆளும் கட்சி என்ற முறையில் பிளவின் அடிப்படையில் கருமமாற்ற முடியாது. ஜே. ஆர். பிரதமரின் வேலைகளைச் செய்ய முயல்வதாயும், அரசாங்கத்திலும் கட்சியிலும் அவரது



செல்வாக்கையும் அதிகாரத்தையும் குறைக்க சில மந்திரிகளும், எம். பி.க்களும் வேலைசெய்துவருவதாயும் சில பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. சமீபத்தில் அமெரிக்கசுதந்திரதினக் கொண்டாட்டத்தில் பிரதமருக்குப் பதிலாக ஜே. ஆர். பங்குபற்றியது குறித்தும் பல வதந்திகள் கிளம்பின. அமெரிக்காவில் வெற்றிகரமாக நிதிஉதவி பேச்சுக்களை முடித்துக்கொண்டு திரும்பிய பிரதமர், ஏன் இந்த வைபவத்தில் கலக்கவில்லை; ஏன் அரசாங்கசார்பாக ஜே. ஆர். கலந்துகொண்டார் எனக்கேட்கப்பட்டது.

பிளவுபட்டிருப்பவர்களும், பிளவை விரும்புபவர்களும்தான், எதிரிகளிடையே பிளவு இருப்பதாகக் கூறுவார்கள். இதை வெறும் கட்டுக்கதை அல்லது அரசியல் ஸ்டண்ட் என்று ஒதுக்கிவிடுவதே நல்லது. ஏனெனில் இத்தகைய பிரசாரங்கள் நவீன ஜனநாயகத்தில் சகஜம்.

### வேலைநிறுத்த அலைகள்

அடிக்கடி அலை அலையாக ஏற்பட்டுவரும் வேலைநிறுத்தங்களைத்தீர்த்துவைக்க சுயேச்சையான சபை ஒன்றைநியமிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது முதலாளி தொழிலாளி அரசாங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் அடங்கியிருப்பார்கள்.

எனினும்வர்த்தகத்தின் ஜீவநாடியாக விளங்கும் வங்கிகளின் வேலைநிறுத்தமும், அந்நியச் செலாவணியின் முக்கிய ஜீவநாடியான தோட்டத்தொழிலாளர் வேலைநிறுத்தமும் நாட்டை இன்னும் பயமுறுத்திவருகின்றன. திருமலை மாவட்ட கூட்டுறவு வங்கி ஊழியர் பிரச்சினை தீர்க்கப்பட்டதைத்தொடர்ந்து வங்கிகளின் பொது வேலைநிறுத்தம் முடிவடைய வழி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த 4-ம் திகதி தெரிவிக்கப்பட்ட, உண்மையறியும் ஒருவர் கமிஷனை கவர்னர் ஜெனரல் நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையை வங்கி ஊழியர் சங்கம் ஏற்றிருக்கிறது. நிர்வாகிகள் சம்மதம் கிடைத்தவுடன் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பமாகலாம் எனத் தெரிகிறது.

இதற்கிடையில் தேசிய ஜவுளி கார்ப்பரேஷனில் 1375 ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. அதேசமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி லங்கா சமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றைச்சேர்ந்த 11 தொழிற்சங்கங்கள் தங்கள் 15 நிபந்தனைகளுக்காக அகில இலங்கை வேலைநிறுத்தத்தை மேற்கொள்ளப்போவதாகப் பயமுறுத்தியிருக்கின்றன

நிலைமை மோசமடையுமுன் தோட்டத்தொழிலாளர்வேலைநிறுத்தத்தை தீர்க்க முதலாளிமார், தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைக்கொண்ட வட்டமேசை மகாநாடு ஒன்றைக்கூட்ட வேண்டும் என தொழிலா



ளர் தேசிய யூனியன் காரியதரிசி பிரதமரைக் கேட்டிருக்கிறார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிலிருந்து பிரிந்து சென்ற பிரிவுதான் தொழிலாளர் தேசிய யூனியன்.

### சதிவழக்கு

அரசாங்கத்துக்கெதிரான இலங்கையின் இரண்டாவது பெரிய சதிவழக்கில் 28 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது ஞானசிகதேரோ முதல் எதிரி. உடுகம 4-ம் எதிரி.

ராணுவத்திலும் பொலிசிலும், எல்லா அரசாங்க இலாகாக்களிலும் அரசியல்வாதிகள் புகுந்துகொண்டிருக்கிறார்கள் என்றும், பல்வேறு குழுக்களாகவும், ஆதிக்கக் கோஷ்டிகளாகவும் இவர்கள் விளங்குவதாகவும் [illegible].

இவ்விஷயமாக அரசாங்க இலாகாக்களில் துப்பறியும் முயற்சியைப் பொலிஸ் தலைவர் திரு. ஜோன் அட்டிகலை மேற்கொண்டிருப்பதாக தெரிகிறது. எல்லா இலாகாக்களிலும் உளவறியும் நபர்களைச் சிருஷ்டிப்பது திரு. அட்டிகலையின் திட்டம்.

### ஆர். ஜி. விஷம்

ஒற்றுமையை, ஐக்கியத்தைப் பற்றிப் பேசும்



அரசாங்கம் தமிழ்ப்பகுதிகளுக்கு மாவட்டசபைகளை அமைக்கப்போவதாகக் கூறுவது நாட்டைப் பிளவுபடுத்தவே வழி செய்யுமென திரு. ஆர். ஜி. சேனநாயக்கா மீண்டும் விஷத்தைக் கக்கியிருக்கிறார்.

ஆனால்ஆர். ஜி.யின்சுபாவத்தை அறிந்த தமிழ்த்தலைவர்கள் இதைப் பொருட்படுத்தவில்லை. சிம்மாசனப் பிரசங்கத்தில் மாவட்டசபைகளை அமைக்கும் யோசனையை வரவேற்றிருக்கிறார்கள். ஆனால் தமிழ்ப்பல்கலைக் கழகம் பற்றிய யோசனை அதில் இல்லாதிருப்பது குறித்தே சில தலைவர்கள் கவலைதெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப்பல்கலைக் கழகம் வேண்டுமா அல்லது ஹிந்துப் பல்கலைக்கழகம் வேண்டுமா என்னும் விஷயத்தில் அபிப்பிராயபேதம் இருப்பதே சிம்மாசனப் பிரசங்கத்தில் அது இடம்பெறாததற்குக் காரணமெனச் சில வட்டாரங்கள் கூறுகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டுமா அல்லது ஹிந்துப் பல்கலைக்கழகம் வேண்டுமா என்பது குறித்து தமிழ்த்தலைவர்கள் துரிதமான ஒரு முடிவுக்கு வராவிட்டால் அது துரதிருஷ்டமாகவே இருக்கும். இன அடிப்படையில், சிங்களவர்களுக்குச் சிங்களப் பல்கலைக்கழகம் ஒன்று இல்லை. மத அடிப்படையில் பௌத்த பல்கலைக்கழகம் தான் இருக்கிறது. அதேபோல் இன அடிப்படையிலன்றி, மத அடிப்படையில் தான் உத்தேச பல்கலைக்கழகம் அமையவேண்டுமெனசில தலைவர்கள் கூறிவருகிறார்கள். சமீப விஜயத்தின்போது தமிழ்க் காங்கிரஸ்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஹிந்து பல்கலைக்கழ



கத்தை வலியுறுத்தி பல கூட்டங்களில் உரையாற்றினார்.

இவ்விஷயமாகப் பிரதமரைப் பேட்டியளிக்குமாறு ஒரு தூதுகோஷ்டியினர் கேட்டதற்கு இவ்விஷயம் இப்போது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்துவருவதாயும் கல்வியமைச்சரைக் காண்பது நல்லதென்றும் பிரதமர் பதில் அனுப்பியுள்ளதாயும், கல்வியமைச்சரிடம் இதைப் பற்றி விளக்க ஏற்பாடுகள் நடப்பதாகவும் தெரிகிறது.

### பௌத்த இணைப்பு

இரு பெரிய சிங்கள-பௌத்த கட்சிகளான யு. என். பி.யும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஒன்றாக இணையவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள 'டட்லி ஆதரவாளர்கள்' கூறுகிறார்களாம். பௌத்த மதத்தையும், சிங்கள இனத்தையும் காப்பாற்ற இந்தஇணைப்பு அவசியமென்பது அவர்கள் கருத்து என்கிறது எதிர்க்கட்சி சார்பான ஒரு பத்திரிகை. தனக்குக் கஷ்டம் ஏற்படும்போதெல்லாம் பிரதமருக்குப் புதிய ஞானோதயம் ஏற்படுவது வழக்கமென அது மேலும் கிண்டல்செய்கிறது.

பார்லிமெண்டில் டட்லிக்கு 66 ஸ்தானங்கள் உண்டு. இது 76ஸ்தானங்களாக இருந்தால் தேசிய ஐக்கியம் என்ற ஞானோதயம் அவருக்கு ஏற்பட்டிருக்குமா எனவும் அது கேட்கிறது.

தேசிய ஐக்கியம் ஓர் இடையூறாக இருப்பதால் தான் சிங்கள-பௌத்த ஐக்கியம் பற்றிய எண்ணம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறதென்றும்தேசிய ஐக்கியம் சரியா அல்லது சிங்கள-பௌத்த ஐக்கியம் சரியா என்றும் அது மேலும் வினவுகிறது.

### அரசாங்கஅதிபர் கூட்டும் மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா யாழ். மாவட்டத்திலுள்ள கிராமமுன்னேற்றச் சங்கங்களினதும் பஞ்சாயத்து சபைகளினதும் தொண்டர் படைகளினதும் மகாநாடொன்றினைக் கூட்ட ஒழுங்குகள் செய்து வருகிறார். யாழ். மத்திய கல்லூரிமண்டபத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக் கூட்டத்திற்கு உயர் நீதிமன்ற நீதியரசர், ஜெரவின் கப்பிரின்டன் ஆகியோர் பிரதம பேச்சாளர்களாகக் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதானத்துக்கு இந்திய-ரஷ்ய ஒத்துழைப்பு

## வியட்னும் நெருக்கடியின் பேரபாயம்: இந்திரா எச்சரிக்கை

மாஸ்கோ, ஜூலை 15

இந்திய-சோவியத் உறவு அபிவிருத்திகள் குறித்தும் உலக சமாதானத்துக்கு இரு நாடுகளும் ஒத்துழைத்து ஆற்றக்கூடிய தொண்டுகள் பற்றியும் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் ரஷ்யப் பிரதமர் திரு. கோஸிஜினும் மாஸ்கோவிலுள்ள கிரெம்ளின் மண்டபத்தில் நேற்று பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுக்களின் போது ஆசியபிரச்னைகள் பற்றியும் குறிப்பாக வியட்னும்நெருக்கடி பற்றியும் டாஷ்கண்ட் பிரகடனம் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டன.

உலகில் நிரந்தரமானசமாதானம் நிலவுவதற்கு ஒரு முன்னோடியாக உலகம் முழுவதிலும் பொருளாதார அபிவிருத்திக்கு உதவவேண்டுமென்று இருதலைவர்களும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

### இந்திரா பேச்சு

இதற்குப் பின்னர் சோவியத்-இந்திய நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் மாஸ்கோவில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்ட மொன்றில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பேசுகையில், இந்திய-சோவியத் உறவுகள் இப்பொழுது வலுப்பெற்றுவருகிறதென்றும் இரு நாடுகளும் உலக சமாதானத்துக்கு கூட்டாகஒத்துழைக்குமென்றும் கூறினார்.

### வியட்னும்

தமது பேச்சில் திருமதி இந்திராகாந்தி வியட்னும் நெருக்கடி பற்றியும் குறிப்பிட்டிருந்தார்.

''வியட்னும் நெருக்கடியினுல் இப்பொழுது பெரியதொரு அபாயம் உருவாகிக் கொண்டுவருகிறது. அங்கு சமாதானம் நிலைக்காவிட்டால் முழு உலகுக்குமே ஆபத்துநேர்ந்துவிடும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் மட்டுமே வியட்னும் நெருக்கடியைத் தணிக்க முடியும். இதற்கானவழியை எந்தவல்லரசும் தடுத்துவிட முடியாது. மீண்டுமொரு தடவை ஜெனிவாமகாநாட்டைக் கூட்டி வியட்னும் நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு எல்லாநாடுகளும் முன் வர வேண்டும்'' என்றும் பிரதமர் இந்திரா தெரிவித்தார்.

## 'பாகிஸ்தானுடன் பேச்சுநடத்த எப்பொழுதும் தயார்''

இந்திய-பாகிஸ்தான் உறவுகள் பற்றிபிரதமர்திருமதி இந்திராகாந்தி குறிப்பிடுகையில், பாகிஸ்தானுடன்எந்த மட்டத்திலும் பேச்சுக்கள் நடத்த இந்தியா, தயாராகவிருக்கிறதென்று தெரிவித்தார்.

''எமது கௌரவத்துக்கேற்ற முறையில் பேச்சுக்கள் அமைய வேண்டுமென்பதையே நாம் பெரிதும்விரும்புகின்ருேம், பாகிஸ்தானுடனுன சகல பிரச்னைகளுக்கும் தீர்வுகாண வேண்டுமென்பதே இந்தியாவின் முழு நோக்கமாகும். இதனை வற்புறுத்தியே நாம் பாகிஸ்தானிடம் நட்புக்கரம்நீட்டியுள்ளோம். எந்தப் பிரச்னையையும் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துவைக்கமுடியுமென்பதே இந்தியாவின் கொள்கை'' என்றும்திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

## ''அமெரிக்காவின் செயல் அரக்கத்தனமானது' —கொஸிஜின்

இக்கூட்டத்தில் ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின் பேசுகையில், வியட்னும் நெருக்கடி பற்றியும் டாஷ்கண்ட் பிரகடனம்குறித்தும் தெரிவித்தார்.

'வியட்னுமில் அமெரிக்காவின் செயல் அரக்கத்தனமானது'' என்று திரு. கொஜிஜின் கண்டித்தார்.

''வியட்னும் நெருக்கடி விரைவாகத் தீர்க்கப்பட வேண்டுமென்பதே ரஷ்யாவின் நோக்கமாகும். ஆனுல் மிருகத்தனமான அமெரிக்காவின் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்'' என்றும்பிரதமர் கொஸிஜின் குறிப்பிட்டார்.

### இந்திய-பாக் உறவுகள்

இந்திய-பாகிஸ்தான் உறவுகள் குறித்து பிரதமர் கொஜிஸின் தெரிவிக்கையில் வெளியாரின் தலையீடின்றி இருநாட்டு நெருக்கடிகளும் தீர்க்கப்பட வேண்டுமென்ருர்.

''டாஷ்கண்ட் பிரகடனம் இருநாடுகளினது உறவுகளையும் சீர்படுத்தும். இவ்வழியில் இந்தியா, பாகிஸ்தான் செல்லுமென்றே உலகம் எதிர்பார்க்கிறது'' என்றும் பிரதமர கொஸிஜின் நம்பிக்கை தெரிவித்தார்.

## பிரிஜெட் பாடட்டுக்கு திருமணம்!

லாவேகஸ், ஜூலை 15

பிரபல பிரெஞ்சு நடிகை பிரிஜெபாடட் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரை நேற்று திருமணம் செய்துகொண்டார்.

பிரிஜெட்டுக்கு வயது 31. ஜெர்மன் செல்வந்தரான சாச்சஸுக்கு வயது 33.

## ஹோவின் யானைக்குட்டி

ஹாநோய், ஜூலை 15

பெர்லினில் பழைய அரண்மனைத்தோட்டத்தில்1955ல் 400 மிருகங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட மிருகக்காட்சிச் சாலைக்கு இதுவரை 1 கோடி 80 லட்சம் பேர் விஜயம் செய்துள்ளனர்

இப்போது 5000 மிருகங்கள் இதிலிருக்கின்றன.

சோவியத்தலைவர் ரெஸ்னெல், ஜனதிபதி கோஸிஜின்வானவெளிவீரர்களான யூரி கெகரின், திருமதி வெலெண்டீனு முதலியோர் இந்த மிருகக்காட்சிச்சாலைக்கு மிருகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர். ஜனதிபதி ஹோசிமின் ஒரு வியட்னும் யானைக்குட்டியைக் கொடுத்திருக்கிருர். விலைமதிப்புள்ள மிருகங்களை வாங்க பெர்லின்மக்கள் நிதி வழங்கியுள்ளனர். சிரமதானத்தின் மூலமே அரண்மனை தோட்டம் மிருகக்காட்சிச் சாலையாக மாறியுள்ளது.

## கோப்பிச் செய்கை ஆராய்ச்சி

ஹாநோய், ஜூலை 15

வடவியட்னுமில் கோப்பி உற்பத்தியைப் பெருக்குவதற்காக உதவி செய்யும் நோக்கத்துடன் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் விவசாயக் கல்லூரியில் விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளை நடத்தினர். கோப்பித் தோட்டங்கள் விஸ்தரித்தல் வடவியட்னும் பொருளாதாரத் திட்டத்தின் ஒரு அம்சமாதலின், இந்த ஆராய்ச்சிகள் பெரிதும் பயன்பட்டுள்ளன. கோப்பிச் செய்கை பற்றி இதற்கு முன்பு இத்தகைய ஆராய்ச்சிகள் நடைபெறவில்லை.

ஜெர்மன் நிபுணர்கள் உதவியுடன் கோப்பிச் செய்கை ஆராய்ச்சி நிலையமொன்றும் வடவியட்னுமில் நிறுவப்பட்டுள்ளது.

## சீன வாழ்த்து

பீகிங், ஜூலை 15

பிரான்ஸின் தேசிய தினத்தை முன்னிட்டு சீனத் தலைவர் திரு. லியூ-ஷாவோ-ஷீ நேற்று பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டி' கோலுக்கு வாழ்த்துச்செய்தி அனுப்பினுர். (பி. டி. ஸி)

## சென்னையில் பலத்த மழை

சென்னை, ஜூலை 15

சென்னையிலும் பம்பாயிலும் நேற்றுக் கடுமையான மழை பெய்தது.

## ஸிரியா மீது இஸ்ரேல் விமான தாக்குதல்கள்

பக்தாத், ஜூலை 15

ஸிரியா மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல்கள் நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸிரியாவிலுள்ள சில தொழிற்சாலைகள் மீதும் என்ஜினியரிங் நிறுவனங்கள் மீதும் இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியிருப்பதாக ஸிரியா அறிவித்துள்ளது.

இத்தாக்குதலின்போது இரண்டு இஸ்ரேல் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பி. பி ஸி. யின்

## உலக சிறுகதைப் போட்டி

### இலங்கையும் கலந்து கொள்ளலாம்

லண்டன், ஜூலை 15

100 பவுண்டுகளை முதற்பரிசாகக்கொண்ட சிறுகதைப்போட்டி ஒன்றை பிரிட்டிஷ் ஒலிபரபுக் கார்ப்பரேஷன் (பி. பி. சி.) நடத்தவிருக்கிறது. இலங்கை உட்பட வெளிநாடுகளில் உள்ள பி. பி. சி. நேயர்கள் இதில் கலந்துகொள்ளலாம்.

போட்டிக்கான கதைகள் ஆங்கிலத்தில் 1800க்கும் 2000க்கும் இடையிலான சொற்களைக் கொண்டதாக இருக்கவேண்டும். அக்டோபர் 31ந் தேதிக்கு முன்னதாகக் கதைகள் பி. பி. சி. உலக சேவைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் கதை ஜனவரியில் பி. பி. சி. உலக சேவையில் ஒலிபரப்பப்படும். அடுத்தபடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கதைகள் ஒவ்வொன்றிற்கும் 20 பவுண் பரிசுகள் வழங்கப்படுவதுடன் பி. பி. சி. உலக சேவையிலும் அவை ஒலிபரப்பப்படும்.

கதை சிறந்த ஒரு கருவைக் கொண்டிருக்கிறதா என்பதனையும், கதாசிரியன் தனது கலானுபவத்தைச் சர்வதேச ரீதியில் உணர்த்தும் வெளியீட்டாற்றல் பெற்றிருக்கிருரு என்பதனையுமே போட்டியாளர்கள் கவனிப்பார்கள். இரு பிரபல எழுத்தாளர்களையும், ஒரு பி. பி. சி. தயாரிப்பாளரையும்கொண்ட மூன்று மத்தியஸ்தர்கள் கதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்.

ஹநோயிலிருந்து

## தினசரி 10,000 மக்கள் வெளியேறுகின்றனர்

ஹாநோய், ஜூலை 15

வடக்கு வியட்னும் தலைநகர் ஹநோயிலிருந்து மக்களின் வெளியேற்றம் இப்பொழுதுஇறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. அநேகமாக ஓரிரு தினங்களில் மக்கள் எல்லோரும் இங்கிருந்து வெளியேறி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

தினசரி பத்தாயிரம் மக்கள் வீதம் இங்கிருந்து வெளியேறிவருகின்றனர்.

இங்குள்ள சில தொழிற்சாலைகளும் அமைச்சலாமென்றும் வேறு பல நிறுவனங்களும் ஹாநோயிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.

## இந்திரா யோசனைக்கு அதிபர் ஜோன்ஸன் வரவேற்பு

வாஷிங்டன், ஜூலை 15

வியட்னும் நெருக்கடி குறித்து இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி வெளியிட்டிருந்த சில யோசனைகளை அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸனும் ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. ஹோல்ட்டும் வரவேற்றுள்ளனர்.

1954ம் ஆண்டு ஜெனிவா மகாநாட்டை மீண்டும் கூட்டவேண்டுமென்று பிரதமர் இந்திரா தெரிவித்த யோசனைக்கு அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இங்கு விஜயஞ்செய்த ஆஸ்திரேலியப் பிரதமர், அமெரிக்க அதிபருடன் நடத்திய பேச்சுக்களின் பின்னர் நேற்று வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் தான் இந்திரா யோசனையை இரு தலைவர்களும் வரவேற்றுள்ளனர்.

## உலகபட்டினி பிரச்னை பற்றிய மகாநாடு

லண்டன், ஜூலை 15

உலகப் பட்டினிப் பிரச்னை பற்றி வாஷங்டனில் அடுத்த வாரம் மகாநாடு ஒன்று நடைபெற இருக்கிறது. பெருகிவரும் மனித சமுதாயத்திற்கு உணவளிப்பது, முன்னேறிவரும் விவசாய நாடுகளின் உற்பத்தியை விருத்திசெய்வது போன்ற முக்கிய பிரச்னைகள் இம் மகாநாட்டில் ஆராயப் படும்.

ஜூலை 20, 21ந் தேதிகளில் யு. எஸ். ராஜாங்க இலாகா மண்டபத்தில் இம் மகாநாடு நடைபெறும். அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் பிரிட்டன் சார்பாக பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திரு. அந்தனி கிறின்வுட் இம்மகாநாட்டில் கலந்துகொள்வார்.

## மிருக நோய் கருத்தரங்கு

பெர்லின், ஜூலை 15

மிருகக்காட்சிச்சாலைகளில மிருகங்களுக்கு ஏற்படும் நோய் பற்றிய ஒரு சர்வதேச கருத்தரங்கு லயிப்ஸிக்கில் (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு) நடைபெற்றது. 20 நாடுகளைச் சேர்ந்த மிருகக்காட்சிச்சாலைகளின் அதிபர்களும் மிருக வைத்தியர்களும், மிருகக்காட்சிச்சாலை நிபுணர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டனர். மூன்று தினங்களாக நடைபெற்ற இக்கருத்தரங்கம் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் விஞ்ஞான அகடெமியால் ஒழுங்குசெய்யப்பட்டதாகும்.

## எண்ணெய் ஏற்றுமதி

டுனிஸ், ஜூலை 15

எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் டுனிஷியாவும் இப்பொழுது ஒன்ருகிவிட்டது நேற்று 48,000 தொன் எண்ணெயை முதற் தடவையாக டுனிஷியா இத்தாலிக்கு ஏற்றுமதி செய்தது.

(பி.டி.ஸி)

## புதிய டைரக்டர்

கொழும்பு, வெள்ளி

விதவைகள், அனுதைகள் பென்ஷன் சபையின் டைரக்டராக திரு. ஆர். எல். திருச்செல்வம் கவர்னர் ஜெனரலினுல் நியமிக்கப்பட்டுள்ளார்,

திரு. திருச்செல்வம் சமூக சேவைகள் பகுதி டைரக்டராக முன்னர் கடமையாற்றினுர்.

திரு. டி. சி. எல். அமரசிங்காவின் ராஜினமாவைத் தொடர்ந்தே திரு. திருச்செல்வம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிப் பகுதி பஸ் சேவை சீர்கேடு

## எம். பி, முகாமையாளர் ஆராய்ந்தனர்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் வட பிரதேச இ. போ. சபை முகாமையாளர். உபமுகாமையாளர் ஆகியோர் கிளிநொச்சித் தொகுதி பஸ் சேவை சீர்கேடுகள்பற்றியும் குறைகள்பற்றியும் ஆராயும் பொருட்டு சுற்றுப்பயணமொன்று மேற்கொண்டனர்.

பூநகரி கிராமசபைத் தலைவர் திரு. செல்லத்துரையும் பொதுமக்கள் பலரும் எம். பி. யையும், வடபிரதேச முகாமையாளர்களையும் பூநகரியில் சந்தித்து பஸ் சேவை ஒழுங்காக நடைபெறாத குறைகளை எடுத்துக் கூறினர்.

வடபிரதேச முகாமையாளர் பூநகரியில் இருந்து சங்குப்பிட்டி, பல்லவராயன்கட்டு, நல்லூர் ஆகிய இடங்களுக்கு தனி பஸ்சேவை ஒன்று ஒழுங்கு செய்வதாக அவர்களுக்கு உறுதி கூறினார்.

பின்னர் இக்கோஷ்டியினர் பூநகரியிலிருந்து பல்லவராயன்கட்டு, வேரவில், கிரஞ்சி, பொன்னவெளி ஆகிய கிராமங்களுக்குச் சென்று வீதிகளைப் பார்வையிட்டனர். பல்லவராயன்கட்டு-முழங்காவில் வீதிகளையும் பார்வையிட்ட பின்னர் பல்லவராயன்கட்டு பாடசாலையின் புதிய கட்டிடம் ஒன்றை எம். பி. திறந்து வைத்தார்.

பின்னர் இக்கோஷ்டியினர் கரியாலை-நாகபடுவான் குடியேற்றத்திட்ட மக்களையும் குளக்கட்டு வேலைகளையும் பார்வையிட்டனர்.

முடிவில் கிளிநொச்சியை வந்தடைந்ததும் கிளிநொச்சி இ. போ. ச. உபடிப்போவைப் பார்வையிட்டனர். அங்குள்ள பஸ் சேவை ஒன்றும் நேரத்துக்கு நடைபெறுவதில்லையென்பதை எம். பி. யிடமும், முகாமையாளரிடமும் பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

இக்குறைகளை கூடிய விரைவில் நீக்குவதெனவும் அதிவிரைவில் கிளிநொச்சி-பரந்தன் நகர பஸ்சேவை ஒன்று ஆரம்பிப்பதாகவும் முகாமையாளர்கள் உறுதி கூறினர்.

## ஆங்கில ஆசிரியரில்லை!

சங்கானை, வெள்ளி

சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் ஆங்கில ஆசிரியர்கள் இல்லாமையால் தற்சமயம் மாணவர்கள் ஆங்கிலம் படிக்க முடியாத கஷ்ட நிலையிலுள்ளனர்.

இங்கு ஆங்கில பாடங்கள் கற்பித்த ஆசிரியர்கள் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெற்று சென்றுவிட்டதைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடங்களை நிரப்புவதற்கு, மூன்று மாதங்களாகியும் கல்வி இலாகா எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் பெற்றோர், மாணவர்கள் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## கடிதம் திருப்பி அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி

உடுப்பிட்டிக் கிராமசபையின் அங்கத்தவரான திரு. ஈஸ்வரலிங்கப் பெருமாள் தமக்கு உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட ஓர் ஆங்கிலக் கடிதத்தை ஆட்சேபித்து, அதைத் தமிழில் எழுதி அனுப்பும்படி வேண்டி ஆணையாளருக்கே திருப்பி அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் அவர் தெரிவித்திருப்பதாவது:

"தங்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதம் கிடைத்தது. தமிழ் மொழியே அன்றி வேறொரு மொழியும் தெரியாத எமக்கு நீங்கள் ஆங்கிலத்தில் அனுப்பியுள்ள கடிதத்தில் அடங்கியுள்ள விடயத்தைத் தெரிந்துகொள்ளவும் அதன்படி நடக்கவும் முடியாதவனாக இருக்கின்றேன். எனவே தாங்கள் அனுப்பிய கடிதத்தை இத்துடன் திருப்பி அனுப்புகிறேன். நயவு செய்து உடனே நான் விளங்கிக் கொள்ளக்கூடிய எனது தாய்ப் பாஷையாகிய தமிழில் தங்கள் கடிதத்தைத் திருப்பி அனுப்பவும்.

## உற்சவம்

உருத்திரபுரம். வெள்ளி

உருத்திரபுரம் கதிர்காமம் ஏழுமலை மாணிக்கப்பிள்ளையார் கோவில் அலங்கார உற்சவம் இம்மாதம் 18-ந் திகதி ஆரம்பமாகி ஆகஸ்ட் முதலாந் திகதிவரை நடைபெறும்


சலக்கழிச்சல்

தோல்சம்பந்தமான சொறி, சிரங்கு, தேமல், கரப்பன் முதலியன குணப்படுத்த உத்தரவாதம்.

**சச்சிதானந்தா வைத்தியசாலை**

மித்திரன் அம்பாள் கோவிலடி, துன்னாலை வடக்கு, கரவெட்டி P. O.





## கொழும்பு

### சனி. 16-7-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-15 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-45 தமிழோடிசைபாடல், 8-00 பௌத்த வாசகம், 8-15 ஞானஞ்சலி, 8-30 முத்திநெறி-சைவசஞ்சிகை, 9-30 தேர்ந்தஇசை, 11 30 சிறுவர்மலர்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 நேயர் விருப்பம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்-ஆர். முத்துசாமி, 7-15 செய்திச் சுருள், 7-30 குங்குமம்-மாதர் நிகழ்ச்சி, 9-15 உரைச் சித்திரம், 9-45 எங்கள் விருப்பம். 10-00 நேயர் விருப்பம்.

## முருகதாஸ் சுவாமி பஜனை

கொழும்பு, வெள்ளி

கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகளின் சங்கீதகீர்த்தன பஜனை நாளை சனிக்கிழமை மாலை 6-30 மணி தொடக்கம் நடைபெறவிருக்கிறது.

## புகைவண்டி ஊழியர் சங்கம

### புதுவருட உத்தியோகத்தர்

கொழும்பு, வெள்ளி

புகைவண்டி ஊழியர் சங்கத்தின் ஆண்டுப்பொதுக் கூட்டம் தர்மபாலா மாவத்தையிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட புதுவருட உத்தியோகத்தர் வருமாறு:

தலைவர்: திரு. வே. குணரத்தினம். துணைத்தலைவர்கள்: திரு. பொன். வாதவூரன், பிரம்மஸ்ரீ சிவா. சோமசர்மா. பொதுச்செயலாளர்: திரு. வை. சி. வடிவேல். துணைச்செயலாளர்: திரு. வே. செல்வவிநாயகம். கௌரவபொருளாளர்: திரு. சு. தியாகராசா. துணைப் பொருளாளர்: திரு. க. பரமேஸ்வரம். கணக்காளர்: திரு. கா. ஞானதிக்கம்.

எட்டுப்பேர் கொண்ட செயற் குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஒருவர் கைதானார்!

### அராலி திருட்டின் எதிரொலி

சங்கானை, வெள்ளி

சுன்னாகத்தைச் சேர்ந்தவரான யோகநாதன் பேர்ன்பநாயகம் பெர்னாண்டோ என்பவர் அராலி, கொட்டைக்காடு என்னுமிடத்தில் சில நாட்களுக்குமுன் வீடு உடைத்து நடைபெற்ற திருட்டுச் சம்பந்தமாக, சங்கானைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

1520 ரூபாய் பெறுமதியான தங்க நகைகளும், ரொக்கப்பணமும் இந்த வீட்டில் திருட்டுப்போயிருந்தது.

## வீதி நிலை பற்றி எம். பி. வருத்தம்

கிளிநொச்சி, வெள்ளி

பல்லவராயன்கட்டு அரசினர் சைவத் தமிழ்ப்பாடசாலைப் புதுக்கட்டிடம் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்தால் திறந்து வைக்கப்பட்டது.

திரு. இரத்தினம் தமது பேச்சில், பொன்னவெளி, வேரவில்லுக்கு பஸ் சேவையில் ஈடுபடுத்துவது சம்பந்தமாகவும், பூநகரி மன்னார் பஸ் சேவையைச்சீர்திருத்துமுகமாகவும் இ. போ. ச. அதிகாரிகளைத் தாம் அழைத்துவந்ததாயும், ஆனால் வீதிநிலைமை பெரும்மோசமான நிலையிலிருப்பது தமக்கு வருத்தத்தைக்கொடுப்பதாகவும் கூறினார். விரைவில் பஸ் சேவையில் ஈடுபட வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாவும் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது

சாம்பல்தீவு

## கி. மு. தலைவர் மாஜிஸ்திரேட் முன் ஆஜர்

திருக்கோணமலை, வெள்ளி

மீன்பிடி இலாகா ஊழியரொருவரை கடமை செய்யவிடாது தடுத்ததாக சாம்பல்தீவு கிராமசபைத்தலைவர் திரு. இ. தங்கராசாவை உப்புவெளி பொலிசார் கைது செய்து திருமலை மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்தனர்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபரை 1000 ரூபா பிணையில் விடுதலை செய்து மேல்விசாரணையை 19-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.





ப்ரோட்டீன இல்லாவிடில் உங்கள் உடம்பு தன்னைத்தானே எரித்துக்கொள்ளும். இதன்காரணமாக நீங்கள் ஊக்கமிழந்து, சோர்வுற்று களைப்பாகவே இருப்பீர்கள்.

உஷ்ணத்தையும் சக்தியையும் உண்டுபண்ணவும், உடல் இழையங்களை உண்டாக்கவும், உடல் கலங்களை பழுது பார்க்கவும் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு விநாடியிலும் ப்ரோட்டீன் எரிக்கப்படுகிறது.




உடம்பினால் ப்ரோட்டீனை சேமித்து வைக்க முடியாது. ஆதலால் தினசரி தேவைப்படும் சக்திக்கும் வலிமைக்கும், தினமும் ப்ரோட்டீன் அவசியமாகும்.

தினசரி தேவைப்படும் ப்ரோட்டீனுக்கு தினமும் ப்ராண்ட்ஸ் எஸன்ஸ் ஒப் சிக்கன் உட்கொள்ளுங்கள்

**ப்ராண்ட்ஸ்**

எஸன்ஸ் ஒப் சிக்கன்

சக்தியளிக்கும் சத்து




534



விற்பனையாகின்றது!

**அன்பு வெளியீடு**

- க. பொ. த. (உயர்தர) ஜி. ஏ. கியூ ஆகிய உயர் வகுப்பு மாணவர்களுக்கு அவசியமான புவியியல் நூல்.
- வரைப்படங்களின் வகை, தெளிவு, அட்டவணைகள், உதாரணங்கள், நூற்றுக்கணக்கான விளக்கப் படங்கள் அடங்கிய நூல்.

படவரை கலையில் வரைப்படங்கள் (DIAGRAMS)

ஆக்கியோன்: க. குணராஜா B. A. (Hons) புவியியல் விரிவுரையாளர், இலங்கைப்பல்கலைக்கழகம், கொழும்பு.

விலை ரூபா 8-40 வி. பி. பி. கவனிக்கப்படும்.

விற்பனையாளர்:

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
வாரமலர்

# சிந்திக்கும் மனிதன் சமய நெறியிலும் முன்னேற வேண்டும்

— திருமுருக கிருபானந்தவாரியார் —

அகில உலகங்களிலும் உள்ள எல்லாப்பொருள்களை யும் மூன்று பிரிவில் அடக்கி விடலாம். ஒன்று தானே அறி கின்ற பொருள்; மற்றொன்று அறிவித்தால் அறிகின்ற பொருள்; அறிவித்தாலும் அறியாதபொருள் மற் றொன்று. இவற்றை பதி, பசு, பாசம் என்று நம் சைவசமய ஞான நூல்கள் கூறுகின்றன

பதி: தானே அறிகின்ற பொருள்—

பசு: அறிவித்தால் அறி கின்ற பொருள்—

பாசம்: அறிவித்தாலும் அறியமாட்டாதபொருள்—

இறைவனும் அநாதி; ஆன் மாக்களும் அநாதி; ''பதி யினைப்போல் பசு, பாசம் அநாதி'' என்கின்றார் - திரு மூலர்.

ஆனால் இறைவன் இன்ப வடிவினன்; ஆன்மாக்கள் ஆணவத்துடன் கூடித் துன் பத்தை நுகர்கின்றன.

''சதாபார தாதுக்கபவான் தீனபந்தோ'' என்று சுப்பிர மண்யபுஜங்கத்தில் சங்கர ரும் கூறுகின்றார்.

ஆன்மாக்களின் துன்பத் தை நீக்குதற்குத் திருவுளங் கொண்ட இறைவன் அருள் திருமேனிதாங்கி, ஆன்மாக் களுக்கு உடம்பையும், கரு விகரணங்களையும் உலகங்க ளையும் படைத்துக்கொடுத் தருளினார்.

அவ்வாறு படைத்த எழு வகைப் பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது.

'அரிது அரிது மானிடரா தல் அரிது'—ஔவையார்.

எண்ணரிய பிறவிதனில்
மானிடப் பிறவிதான்
யாதினும்அரிதரிதுகாண்''
என்றார்—தாயுமானர்

எண்ணில்லாத உலகங்க ளில் எண்ணில்லாத உடம்பு களை எடுத்து, எண்ணில்லாத காலமாமாகப் பிறந்து இறந்து மாறிமாறி வந்து இளைப்புற்றேன் என்கின்றார் -மாணிக்கவாசக

ஏழு கடற்கரைகளின் மணல்களை எண்ணி அள விட்டு இத்துணை என்று அறு தியிட்டுக் கூறினும் கூறிவிட லாம். ஆனால் நாம் பிறந்த பிறப்பைக் எண்ணி அளவி டமுடியாது என்கின்றார்— அருணகிரிநாதர்.

ஏழுகடல் மணலை அளவிடி
னதிகம்
எனதிடர் பிறவி அவ
தாரம்''
—திருப்புகழ்

ஒவ்வொரு பிறவியிலும் நாம் பருகிய தாய்ப்பால் அனைத்தும் ஒருங்கு கூட்டி னால் பாற்கடல் சிறிதாகிவி டும் என்கின்றார் - குருநமசி வாயர்.

எடுத்தபிறப் பெல்லாம்
எனக்குவந்த தாய்மார்
கொடுத்த முலைப்பாலனைத்
துங் கூட்டின்-அடுத்து
வரும்
பன்னு கணைத்து யி லும்
பாலாழி யுஞ்சிறிதாம்
மன்னு சிதம்பரதேவா
— சிதம்பரவெண்பா

இத்தகைய பிறவிகளில் மனிதப் பிறப்பு உயர்ந்தது என்கிறோம்.

மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொ ருள்.

மன் என்றபகுதியடியாகப் பிறந்தசொல்மனிதன்அவன் நினைக்கின்றகருவிமனம். அது இன்றியமையாதஒன்று. மற் றப் பிராணிகட்கு மனம் இல்லை. தமிழில் மனிதன். வடமொழியில் மநுகா; ஆங் கிலத்தில் மேன்: இச்சொற் கள்யாவும் மன்என்றபெயர் சொல்லிலிருந்து தோன்றி யவை.

மனம் என்ற கருவியில்லா மையால் விலங்குகளின் வாழ்வு ஒன்றுபோல் அமைந் திருக்கின்றது. மாடு அன்று உண்டபுல்லைத்தான் இன்றும் உண்ணுகின்றது; மனிதன் உணவைப் பல்வேறு வகை யாகப்பக்குவஞ்செய்து உண் ணுகின்றான்.

குருவி அன்று கூடுகட்டி யதுபோல்தான் இன்றும் கட்டுகின்றது. மனிதன் வீடு கட்டும் முறை கணத்துக்கு கணம் பல்வேறு விதமாக முன்னேற்றம் அடைந்திருக் கிறது.

உணவினாலே உடையி னாலே, நடையினாலே பேச் சாலே, எழுத்தாலே, வாக னங்களினாலே மனிதன் முன் னேற்றமடைகின்றான்.

இதனை இதனைஇப்படி இப் படிச்செய்யவேண்டும் என்று சிந்திக்கின்றான்

இவ்வாறு சிந்திக்கின்ற மனிதன் சமயநெறியிலும் முன்னேறவேண்டும்.

நான் யார்? இந்த உடம்பு எப்படி வந்தது? உடம்பு தானே வந்ததா? ஒருவன் தந்து வந்ததா? தந்தவன் தன்பொருட்டுத் தந்தானா? எவ்பொருட்டுத் தந்தானா? உடம்பு எடுக்குமுன் எப்படி நான் இருந்தேன்? எதற் காக உடம்பு தரப்பட்டது? நான் எங்கிருந்து வந்தேன்? எதன்பொருட்டு வந்தேன்? எங்கேபோகவேண்டும்? நான் எங்கே போய்க்கொண்டிருக் கிறேன்? என்று பலவாறு சிந்தனைகள் சிந்திக்க வேண் டும், இந்தச் சிந்தனைகள் தாம் சிந்திக்கத்தக்கவை, இவைகளைச் சிந்திக்கிறவன் உண்மையில்மனிதனாகிறான், இந்தச் சிந்தனையில்லாதவர் களைச் சிந்தித்துப் பரமகுரு நாதராகிய அருணகிரிநாதர் பாடுகின்றார்!

சிந்திக்கிலேன் நின்று
சேவிக்கின்றிலேன் தண்
டைச் சிற்றடியை
வந்திக்கிலேன் ஒன்றும்
வாழ்த்துகிலேன் மயில்
வாகனனைச்
சந்திக்கிலேன் பொய்யை
நிந்திக்கிலேன் உண்மை
சாதிக்கிலேன்
புந்திக்கிலேசமும் காயக்கி
லேசமும் போக்குதற்கே

ஏனைய சிந்தனைகள் பிறவியைத்தரும். அச்சிந்த னைகள் அற ஐந்தெழுத்தைச் சிந்திக்க வேண்டும்

பஞ்சாக்கரத்தில் பல
பிரிவுகள் உண்டு

'ஐம்பத்தொன் றிலெட்
டாறில் மூன்றினில்
ஐந்தில் தங்கும் அப்பாலை
வான்பொருள்''

என்பது திருவகுப்பு

மூன்று என்பது திரியட்ச ரம் இதை பரம ஞானிகள் ஓதுவார்கள்

''சிவாய எனும் நாமம்
ஒருகாலும் நினையாத
திமிராக ரனைவாவென்
றழையாதே''
—திருப்புகழ்

ஆவியீரைந்தை அபரத்தே
வைத் தோதில்
ஆவியீ ரைந்தை அகற்ற
லாம்-ஆவியீர்
ஐந்தறலாம்ஆவியீர் ஐந்து
றலாம் ஆவியீர்
ஐந்திடலாம் ஓரிரண்டோ
டாய்ந்து

ந—திரோதான மலம்
ம—ஆணவமலம்
சி—சிவம்
வ— திருவருள்
ய—ஆன்மா

ஆன்மா எழுத்து ய ஈரைந்து பத்து

தமிழ்க்கணக்கில் பத்து ய இந்த யகரத்தை அபரம்-பின்சிகரத்துக்கும்வகரத்துக் கும் பின்வைத்துசிவயஎன்று ஓதுவார்களானால்

''ஆவியீரைந்தை அகற்றலாம்''

ஈரைந்து—பத்து; பத்து என்றசொல்லை ஆவி என்ற எழுத்துக்களுடன் சேர்க்க வேண்டும்

ஆ என்ற எழுத்துடன் பத்து சொல்லைச் சேர்க்க— ஆபத்து

வி என்ற எழுத்துடன் பத்து என்ற சொலலைச்சேர் க்க—விபத்து

ஆபத்து—உடலுக்கு வருந் துயர்

விபத்து—உயிருக்கு வருந் துயர்

உடலுக்கு வருந்துயர்கள் பசி, பிணி முதலியன உயி ருக்கு! வருந்துயர் பிறப்பு, இறப்பு என்பன

இந்த ஆபத்து விபத்து என்ற இருவகைத் துயரங்க ளும் சிவாய என்று ஓது வார்க்கு உண்டாகமாட்டா

ஆவியீர் ஐந்து அறலாம்

ஆணவம், கன்மம், மாயை திரோதம், மாயோயம் என்ற பஞ்ச மலங்களும் அறும்

ஆவியீர் ஐந்து உறலாம்

ஆவியீர் விளி, உயிர்போன் றவர்களே; நிவிர்த்திக்கலை பிரதிஷ்டாகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியாதிதகலை என்ற பஞ்சகலாமயமும் உண்டாகும்.

ஆவியீர் ஐந்திடலாம்

ஓரிரண்டோடாய்ந்து:-

ஆவி-பிராணவாயு

ஈரைந்தோடு ஓரிரண்டு ஆய்ந்து இடலாம்- வெளியே அவமேகழிகின்ற பன்னிரு அங்குலம் பிராணவாயு அவ் வாறு கழியாது உள்ளே மீளும்.

இன்னும் ஒருமுறை அப் பாடலைச் சிந்திப்போம்.

(12-ம் பக்கம் பார்க்க)

# கேரள ஆதிவாசிகள் வழங்கும் பழமொழிகள்

— பிலோ இருதயநாத் —

மலைகளிலும் காடுகளி லும் வாழும் ஆதிவாசிகள் சொல்லும் பழமொழிகளைக் கொண்டு பண்டைக்கால உண்மை வரலாறுகளை ஓரள வுக்கு அறிந்துகொள்ளலாம். அந்தப் பழமொழிகள் பெரு ம்பாலும் பகை மன்னர்கள் போர் வீரர்களின் வீரத் தைப்பற்றிய பழமொழிக ளாக வழங்கப்படுகின்றன.

நாடோடிப் பழமொழிகள் ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தாலும் அவற்றை அலசி ஆராய்ந்து பார்க்கும்பொழுது ஒற்று மையான பல செய்திகள் அவற்றிலிருந்து தெரியவரு கின்றன. அத்தகைய பழ மொழிகளுள் கேரள நாட்டு பழங்குடி மக்களிடமிருந்து திரட்டியவை குறிப்பிடத் தக்கவை. அவற்றில் சில அடியிற் தரப்பட்டிருப்ப துடன் தமிழ் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

1 'மின்னுன்ன தெல்லாம் பொன்னல்ல'

தமிழ்: மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

2. 'வேலி தன்னே விள தின்னகத'

தமிழ்: வேலியே பயிரை மேய்ந்த கதை.

3. 'எல்லுமுறியே பணி எடுத்தால் பல்லு முறியே தின்னும்'

தமிழ்: எலும்பொடியும் அளவு வேலை செய்தால் பல் லுடையும் அளவுக்குச் சாப் பிடலாம்.

4. 'மூத்தவர் சொல்லும் முது நெல்லிக்காயும் முன்பே கைக்கும் பின்னே மதுரிக் கும்'

தமிழ்: மூத்தோர் சொல் லும், முதிர்ந்த நெல்லிக் காயும், முதலில் கசக்கும்; பின்பு இனிக்கும்.

5. 'வேண்டாத மருமகள் தொட்டதொக் கைக்குற் றம்'

தமிழ்: ஆகாத மருமகள் தொடுவதெல்லாம் குற்றம்.

6. 'உண்ணியே கண்டால் அறியாம் ஊரிலே பஞ்சம்'

விளக்கம்; குழந்தையைப் பார்த்தால் தெரியும் ஊரிலே பஞ்சம்.

7. 'அரியும் தின்னு ஆசா ரிச்சியேயும் கடிச்ச ... யும் நாய் மெக்கபட்டு'

விளக்கம்: அரிசியையும் தின்று ஆசாரிப் பெண்ணை யும் கடித்த பிறகும் நாய் விடுவதாக இல்லை.

தமிழில்: அவனுடைய சொத்தையும் மோசம் செய்து அவனுடைய குடி யையும் கெடுத்துக் கடைசி யில் அவனுடைய உயிருக் கும் உலை வைத்துவிட்டான் என்று தமிழில் சிலரது தீய செயலைப்பற்றி விவரிப்பர்.

8. ஒரு கண்ணில் வெண்ண (வெண்ணெய்) ஒரு கண் ணில் கண்ணும்பு

விளக்கம்: எதையும் எவ ரையும் சரிசமானமாக நட த்தவேண்டும். ஒருவரை ஒரு மாதிரியாகவும் மற்றொ ருவரை மற்றொருமாதிரியா கவும் நடத்தக் கூடாது.

9. 'எலிக்கு ப்ராணவேத-பூச்சைக்கு வீணவாயன்'

விளக்கம்: பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.

'ஒருவரை மற்றொருவரி டம் காட்டிக் கொடுத்து அவர்கள் ... கண்டு கொண்டாட்டம் போடுவதும் இக்காலத்தில் மனித சமூகத்தில் இருக்கி றது.

'ஏட்டிலே பசு புல்லு தின் னில'

விளக்கம்: ஏட்டிலே பசு புல் தின்னாது.

'படத்தில் இருக்கும் பசு புல்லைத் தின்னாது'

'ஏட்டுச் சுரைக்காய் கறி க்கு உதவாது' என்பதாம்.

தற்காலத்தில் அனுபவ மில்லாதவர்கள் செய்யும் பணியால் எவ்வளவோ ஆபத்துக்கள் உண்டாகின் றன என்பதாம்.

11 'பூச்சை கண்ணுமூடி யால் லோக மொக்கெ இரு ட்டாணென்னு விசாரம்'

விளக்கம்: பூனை கண்மூடி னால் உலகமெல்லாம் இருட் டென்று நினைப்பு'

'தான் செய்யும் குற்றங் கங்கள் மற்றவர்களுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொள்வார்கள் சிலர்'

12 'சங்ஙாதி நன்னுயால் கண்ணாடி வேண்ட'

விளக்கம்: நண்பன் நல்ல வனாக இருந்தால் கண்ணாடி எதற்கு'

13 'ஒரு கல்லில் ரண்டு மாஙா'

விளக்கம்: ஒரு கல்லில் இரண்டு மாங்காய்.

'எப்பொழுதும் தனக்கும் பிறருக்கும் நன்மைதரும் காரியத்தையே செய்ய வேண்டும்' என்பதாம்.

14 அப்பம் தின்னவேணோ? குழி எண்ணவேணோ?

விளக்கம்: 'அப்பம் தின்ன வேண்டுமா? குழி எண்ண வேண்டுமா?

'அப்பம் தின்னுவதற்குப் பதில் அப்பக் குழிகள் எத் தனை இருக்கிறது' என்று கேட்டாலும், குழி நான்கு இருந்தாலும் நீ, சாப்பிட வேண்டிய பத்து அப்பத் தைச் சுட்டுத்தின்னலாம் அல்லவா? அதைப்போலவே நமக்குக் காரியம் தான் பெரியதேதவிர, வீரியம் பெரியதல்ல என்பதாம்.

15 'நெய் யேறியால் அப் பம் கேடு வரில்லா'

விளக்கம்: நெய் அதிகமா னால் அப்பம் கெடாது'

உடலுக்கு உரம்கொடுப் பது நல்ல நெய் என்பதால் நீண்ட ஆயுள் கொடுக்கும் என்பதாகும்.

16 'கொற்றிக்கு வெச்சது கொள்ளக் கோழிக்கு'

கொக்குக்கு வைத்த (துப் பாக்கி) ரவைகுளக் கோழிக் குப்பட்டது

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நமது நூல் நிலையம்

**முல்லைக்காடு** (மூவர் காவியம்) கவிதை அஞ்சல்களும் கவிதைகளும். வெளியிடுவோர்: கலாபவனம், பருத்தித்துறை. பக்கம்: 96. விலை: ரூ. 1-50

குறுமண் வெளியில் இருக்கும் இரசிகையான திருமதி ஜீவா, கவிஞர் 'யாழ்ப்பாணன்' அவர்களின் கவிதைத் தொகுதியான 'கவிதைக்கன்னிக்கு' தனது பாராட்டுதலை அனுப்பும் அஞ்சலுடன், ஈழத்துக் கவிதைத்துறையில் ஒரு புது முயற்சி'யான இத்தொகுதி ஆரம்பமாகின்றது. பிற்பாடு 'யாழ்ப்பாணன்' ஜீவா ஆகியவர்களுக்கிடையில் நடைபெற்ற கவிதை அஞ்சல்களும், ஜீவாவின் கணவருன இராஜபாரதியின் கவிதைகளும் இறுதியில் சேர்க்கப்பட்டு முக்கூட்டு இரசம் போல முல்லைக்காடு அமைகின்றது.

இந்தத்தொகுதியின் மத்தியில் கடிதங்களும் இடம் பெற்றுள்ளன. இக்கடிதங்கள் கவிஞர் 'யாழ்ப்பாணனுக்கும்', 'ஜீவாவுக்கும்' இடையில் எழுதப்பட்டவைகளே. கடிதங்களில் ஆங்காங்கே சிற்சில பிரத்தியேக நட்புச்சுரிய விடயங்கள் இருந்தபோதிலும், இந்தத்தொகுதியின் தொகுப்பாசிரியரான கவிஞர் யாழ்ப்பாணன் அவைகளைத் துணிந்து பிரசுரித்து "அம்பலப்படுத்தியது" அவரது இலக்கியப் பண்பினை வெளியிடுவதாகவே அமைகின்றது. கடிதங்களின் வசனநடையில் கவித்துவம் மிளிர்கிறது.

'பன்னுளாய் சிந்தித்துப் பாடியவென் பைந்தமிழை
அண்ணாவின் பொற்கரத்தே அர்ப்பணித்தேன்-
பொன்னுகை
ஏற்றுப் பதிப்பித் திடு(கு) ஈழத்திலக்கியத்தின்,
ஆற்றைப் பெருக்கி யருள் வீர்'

என ஜீவா விண்ணப்பிக்கும் கவிதை, தொகுதிப்பிறப்பின் பிரணவ மந்திரத்தைவெளி விடுகின்றது.

ஜீவா இத்தொகுதி மூலம் 'யாழ்ப்பாணன்' அவர்களால் கைதூக்கிவிடப் படுகின்றார்கள். இளம்பெண் கவி. யாழ்ப்பாணனின் அறிமுகப் படலத்தால் ஈழத்து இலக்கிய உலகத்திற்குள் நுழைய முனைந்து வெற்றியும் கண்டவர். இதற்காக தனது கவிதை அஞ்சல்களில் வரிக்கு வரி (Personal Cult) யாழ்ப்பாணனை வீரவழிபாடு செய்யவேண்டிய அவசியத்தின் மர்மத்தைத்தான் புரிந்துகொள்ளமுடியவில்லை

இவரது 'கொழும்பு நகர்ப் புதினம்' எனத் தலைப்பு வைத்து எழுதப்பட்டுள்ள கவிதை கடிதத்தின் (Satire) கிண்டல் உணர்வு மிதமிஞ்சி இருப்பதைக் காணலாம்.

''-தொத்துப் பொருந்திய பின்னல்களை மயிர்
வைத்துத் திருகிய கொண்டைகளை
சத்தற்ற காகிதச் சோடினையைத் தமிழ்க்
கொலைகளைக் கண்டேனண்ணு!
மானத்தை மூடாத சட்டைகளும்-இள
மார்பைப் பெருக்கிடும் கட்டுகளும்
வானத்தை முட்டிடும் மாளிகைகள்-உள்ளே
வாழ்கின்ற சிரினைக் காட்டு மண்ணு!

இக்கவிதை அடிகள், ஒரு பெண்கவி தனது சகாப் பெண்களின் கேவலப்போக்கினை நையாண்டி செய்வது மிகைப்படுத்தப்பட்டதாகவும், சிறிதளவு விரசம் தலைநீட்டுவது போலவுமே தென்படுகின்றன.

ஜீவாவின் 'வீரத்தாலாட்டினில்' நாம் ஓரளவு தாயுள்ளத்தினைக் காணமுடிகின்றது. ஜீவாவின் முயற்சிதான் இந்த முல்லைக்காட்டுத்தொகுப்பின் மூலமந்திரம் என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

கவிஞர் 'ராஜபாரதி' தனக்குரிய நடையில் சில விடயங்களை மிகவும் அழகுறக் குறிப்பிடுகின்றார். உதாரணமாக,

''பிட்டவிக்கும் குழலி
!டையே பிசைந்த மாவை
பிணைத்திருக்கும்தேங்காய்ப் பூத்தூரல் போல
ஒட்டியொரு மொழிபேசி இந்து முஸ்லிம்
ஒருவயிற்றுச் சேய்களென வாழும் நாடு''

[மதிப்புரை வேண்டுவோர் ஒவ்வொரு புத்தகத்திலும் இரு பிரதிகள் அனுப்பவேண்டும்.]

என 'மட்டக்களப்பு' என்ற கவிதையில் குறிப்பிடுகின்றார். கவிஞர் இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு பிட்டையும் தேங்காய்த் துருவலையும் உதாரணமாக எடுத்துக்கொண்டதின் மர்மம் தான் மர்மமாக இருக்கின்றது.

இறுதியாக—

முல்லைக்காடு என்ற முக்கூட்டுத்தொகுதி மூன்று கவிஞர்களின் கவிதை-கவிதைஅஞ்சல்- வசன அஞ்சல் ஆகியனவற்றின் கலப்படமாக அமைகின்றது.

ஒரு 'புதிய முயற்சியாக இருக்கும்பொழுதிலும்- உண்மையில் தங்கள் குடும்பப்படங்களைக்கூட இலக்கிய ரசிகர்களுக்கு எனப்படைக்கப்படும் படைப்புக்களில் வெளியிடுமளவிக்—முற்போக்காக இருந்தபோதிலும், இதுவசன இலக்கியமாகவோ, கவிதை இலக்கியமாகவோ அமையாமல் அதுவும் இதுவுமாக ஏதேதோவாக எல்லாமாக தோற்றப் படுகிறது. நமக்கு!

—கே. ரி. இராஜசிங்கம்

★

**பண்டையஈழம்** (வரலாற்று விளக்கம்) ஆசிரியர்: வே. க. நடராசா. பதிப்பகத்தார்: சேது நூலகம், கேவலை, கரவெட்டி. விலை: ரூபா 3-50.

தமிழ் மொழியில் சரித்திர நூல்கள் எழுதப்படுவது வரவேற்கத்தக்கது. தமிழ்மாணவர்க்கு இந்நூல்கள் உதவி அளிக்கும் வகையில் அவை எழுதப்படுவது விரும்பத்தக்கது.

முன்னுள் யாழ்ப்பாண வரலாற்றுக் கழகச் செயலாளரும், கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் முதல்தரமான கல்லூரிகளில் படிப்பித்த அனுபவமுள்ளவருமான வரலாற்று ஆசிரியர் திரு வே. க. நடராசா அவர்கள் எழுதியுள்ள 'பண்டைய ஈழம்', ஆரியர் வருகைமுதல் 1505-ம் ஆண்டுவரையுள்ள ஈழச்சரித்திரத்தை மாணவர்கள் இலகுவில் படித்துணரும் வகையில் அமைந்துள்ளது.

மேலும், வினு-விடை முறையில் அத்தியாயங்கள் அமைக்கப்பட்டுள்ளமை, மாணவர்க்கும், பரீட்சகர்களுக்கும், ஆசிரியருக்கும் பெரும் உதவியாக இருக்குமென நம்பலாம்.

ஜி. சி. ஈ. உயர்நிலை, சாதாரணநிலை மாணவர்களுக்குப்பெரிதளவில் உதவக்கூடிய சரித்திரக் கைநூல் இதுவெனத் துணிந்து கூறலாம்.

நூலை அச்சிட்டு வெளியிட்ட சேது நூலகத்தாரின் முதல்வெளியீடு என்றமுறையில், அச்சுப்பிழை அதிகமின்றி, தெளிவான முறையில் நூல் வெளிவந்துள்ளமை அவர்களுக்குத் திருப்தி தருவது.

— மயில்

★

**கந்தபுராணம்- உற்பத்தி காண்டம் காமதகனம்,**

[க. பொ. த. (உயர்தரம்) தமிழ்ப் பாடச் செய்யுட் பகுதி 1967-68] உரைவிளக்கம்:- பண்டிதர் க. வீரகத்தி (இயக்குநனர், வாணிகலைக் கழகம்). கிடைக்குமிடம்:- ஆனந்தா அச்சகம் - புத்தகசாலை, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். விலை:- ரூ. 3-75.

கந்தனின் பெருமையை விரிக்கும் கந்தபுராணத்தை பெரியோர்கள் மட்டுமன்றி, இளைஞர்களும் கற்கவேண்டுமென்ற நோக்குடன் கந்தபுராணத்தின் ஒரு பகுதி ப.க.பு.வ. மாணவர்களுக்கு பாடப்பகுதியாக வைக்கப் பட்டுள்ளது.

அவர்களது பாடப்பகுதியாகிய 'காமதகனத்தை' பண்டிதர் க. வீரகத்திஉரை விளக்கம் செய்துள்ளார். பல்துறையிலும் தோய்ந்து திறமை மிக்கவர்களாக ஆசிரியர்கள் இருந்தால்மட்டும் போதாது. மாணவர்களின் உள்ளங்களேற்கும்வண்ணம் தன் அறிவைப்பயன்படுத்துபவரே நல்லாசிரியராவர். இந்நூல் உரையாசிரியர் மாணவர்கருத்துக்களைப்பரிசோதித்து அவர்களின் பக்குவத்திற்கேற்பத்தன் கருத்தைப் பதம் செய்துள்ளார். 'சுவையுணர்ச்சி மிகுதல் வேண்டும் -அதுகாரணமாக இலக்கியப் பிரியம் ஏற்பட வேண்டும். படிக்கும் இலக்கியத்தைத் திறனுய்ந்து படித்தல் வேண்டும் - ஒப்பிட்டு மதித்தல் வேண்டும்' என்ற நோக்கங்களுடன் வரையப்பட்டுள்ளதாக இவ்வுரைபற்றிகூறப்படுவதுஉள்ளேநுழைந்து பார்ப்போர்க்குப்பளிச்சிடும். இந்நூலின் பிற்சேர்க்கையாகக்கதைத் தொடர்புகள், தேர்வுவினுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன, காமதகன உரைவிளக்கம் பரீட்சையில் தேறுவதற்கு மட்டுமன்றி கந்தபுராண காவியத்தை ஆர்வமுடன் மாணவர்கள் கற்றிட ஒரு [illegible] இருக்கின்றது.

—செல்வி க. பூரணம்

---

# இ. போ. ச. பஸ்ஸில்

# ஒரு நெடுவழிப் பயணம்

—2—

**கி**ழக்கு மாகாணத்தின் ஒருபகுதியான திருக்கோணமலை யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் இருப்பதால் இவ்விரு ஊர்களுக்கும் நேரடியான பஸ் போக்கு-வரவு பலகாலமாக நடைபெற்றுவருகிறது. இரண்டாவது உலகயுத்தம் இவ்விரு ஊர்களையும் இன்னும் சமீபமாகக் கொண்டுவந்து விட்டது. இன்றெல்லாம் இ. போ. ச. வுடன்போட்டியிட்டுக்கொண்டு தனியார் வாடகை மோட்டார்களும் பிரயாண வாகனங்களும் பொதி சுமக்கும் கழுதைகளும்-மன்னிக்கவும், லொறிகளும் இராப்பகலாய் பறக்கின்றன. திருக்கோணமலைக்கூடாக மட்டக்களப்புக்குப் போவது சுருக்குவழி ஆனலும் நடுவே ஏழுஇடங்களில வண்டி ஓடம் ஏறி மாயவேண்டும். நவீன எக்ஸ்பிரஸ் ஓட்டத்துக்கு இதெல்லாம் சரிப்பட்டுவருமா? அதனுல்தான் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு பஸ் வடமத்திய மாகாணத்தை சுற்றி வளைத்து ஒரே இரவில் மூன்று மாகாணங்களை இணைத்துப் பிணைத்துக் கொண்டு ஓடத்தலைப்பட்டிருக்கிறது. இதென்னவேகம், இரண்டரை மணிநேரத்தில் எங்கள் நாட்டில் வடகோடி தென்கோடியாகவுள்ள மூன்று பெரிய மாகாணங்களையும் அதற்கும் மேல் கடல்கடந்த தேசங்களையும் கூட இணைத்துவிடும் இன்றைய ஆகாயப் பாய்ச்சல் சேவையை மறந்துவிட்டீரோ என்று கேட்கலாம். அது வேறுகதை நேயரே.

அநுராதபுரத்தைக் கடந்து பஸ் போய்க்கொண்டிருக்கையில் அன்றைய நிறைநிலாவின் மயக்கத்தில் அந்தப்பிரதேசத்தின் பழைய பொற்காலம் நமது அகப்புலனைத் தொடத்தான் செய்கிறது. வடமத்திய மாகாண காடுகளுக்கூடாகப் பேயிரைச்சலுடன்தூரத்

## — "காங்கேயன்" —

தைச் சாடி நடுநடுவே யானையின் பிளிற்ருெலி எழுப்பி காந்த கர்ச்சனை போட்டு பஸ் போய்க் கொண்டிருந்த போது, என் மனே வேகம் இன்னெருதிசையில் பஸ்ஸின் வேகத்தையும் முந்திக் கொண்டு அந்நாளில் காடு கெடுத்து நாடாக்கி குளம் தொட்டு வளம்பெருக்கிய மாமன்னர்களின் ஆட்சிக் காலத்தைச் சுற்றிச்சுழன்றது. எத்தனை குளங்கள், இராட்சத நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள்! மின்னேரியா, பொலநறுவை பராக்கிரமசமுத்திரம், கந்தளாய், இரணைமடு, கனகராயன் ஆறு, பொய்கை வேந்து...

''மழைநீரின் ஒரு சிறு துளியேனும் மனிததேவைக்குப் பயன்படுமுன் கடலில் கலப்பது பெரும் பாபம்'' என்று எண்ணி பொதுதர்மத்துக்குக் கட்டுப்பட்டு நின்றவர்கள் அக்கால மன்னர்கள். மகா பராக்கிரமபாகு 163 பெருங்குளங்களையும், 2367 சிறுகுளங்களையும், 3910 கால்வாய்களையும், 165அணைகளையும் தன் ஆயுட்காலத்தில்கட்டிமுடித்தானும். மகாசேனன் 4670 ஏக்கர் நிலப்பரப்பில் மின்னேரியாக்குளத்தையும் அதனுேடு வேறும் பல குளங்களையும் கட்டினும். ஏன் இப்படியெல்லாம் குளங்களாகவும், ஏரிகளாகவும் அணைக்கட்டுகளாகவும், கால்வாய்களுமாக கட்டிமாய்ந்தார்கள்? நீச்சலடித்து நீராடுவதற்காகவா? பிற்காலத்தவராகிய நாம் அவ்வளவு தண்ணீரையும் விழலுக்கு இறைத்து காடு வளர்த்து மரம்வெட்டி விறகுகாலைகள் வைப்போம் என்ரு? அல்லது நவம் நவமாக நாற்காலிகள்பண்ணிப் போட்டு சுகமாகவீற்றிருந்து கப்பல்கப்பலாக வந்திறங்கும் அரிசியை மூன்று வேளையும் சோருக்கி முழுங்குவோம் என்ரு?

தேக்கமரக் காட்டினூடே ஏறி இறங்கிப்போகும் சாலையில் பஸ் வழுக்கிக்கொண்டு ஓடுகிறது. இந்த இடத்துக்கு வாகனேரி என்று பெயரிட்டிருக்கிருர்கள், பஸ்ஸை நாம்தான் ஓட்டிச் செல்கிருேமா ஸ்டியரிங் சக்கரம் நம்வசப்பட்டுவிட்டதோ என்று ஓரோர் சமயம் எண்ணும்படி எதிரே நீளும் சாலை அழகிலும் அந்த வேளைச் சவாரியிலும் மனம் அப்படி லயித்துப்போகிறது. வாகனேரி தாண்டி வாழைச்சேனையில் கிழக்கு வெளுத்து உதய நங்கை இளமுறுவல் காட்டி வரவேற்கிருள். விடியாத இரவு இங்கு அற்புதமாக விடிந்து கிடக்கிறது. கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே வெளி, நமது பிரயாண அலுப்பும் சலிப்பும் நீங்கி, புதுமை எழுச்சி பெறுகிருேம். 'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால், அந்நேரபரியந்தம் நாம் பஸ்ஸில் செய்த தவத்தினுல், ஹட யோகத்தினுல் அல்லாமல் வேறு எதனுல்?

மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி, பாலை என பண்டைய இலக்கியங்கள் கூறும் ஐந்துவகை நிலங்களில், நான்கு திணைகளும் பெரும் பகுதியாய்ச் செழித்துக் கொழித்திருப்பது கிழக்கு மாகாணம். ஆறுகள் பாய்கின்றன. குளங்களில் தண்ணீர் குறையாமலிருக்கிறது. வயல்கள் அவைபாட்டில் மனம்போல் விளைகின்றன. தேக்கு, பாலை, வீரை, வேம்பு, மருது, ஆல், அரசு போன்ற பயன்தரு விருட்சங்கள் அடர்ந்த காடுகள் எங்கும் மண்டிக்கிடக்கின்றன. கடற்கரையோ எல்லையற்று ஒரே நீளத்துக்கு விரிந்துகிடக்கிறது. என்ன கவலை? கிழக்கு மாகாணத்தவர்கள் நம்மைவிட எவ்வளவோ பாக்கியசாலிகள். நகர இயல் எனப்படும் நாகரிகமோகம் நம்மத்தியில் புகுந்து கலகம் விளைவித்தது போல அவர்கள் நாட்டில் நடைபெறவில்லை. அதனுல், இன்னமும் இயற்கைத் தாயின் குழந்தைகளாக வாழ்கிருர்கள். புதிய எக்ஸ்பிரஸ் பஸ் அங்கிருந்து எதனை இங்கு கொண்டுவந்து சேர்க்குமோ, என்னத்தை இங்கிருந்து அங்கு கொண்டு போய்ச் சேர்க்கப்போகிறதோ? கடற்கரைப்பட்டினங்கள்தாம் நாகரிகத்தின் பிறப்பிடம் என்று சொல்வார்களே!

வடக்கையும் கிழக்கையும் அற்புதமாக இணைக்கும் ஈசான்ய மூலையாக நம்மூரில் ஓர் ஊர் இருக்கிறது. அது எந்த ஊர் சொல்லுங்கள் பார்க்கலாம். அவ்வூர் பருத்தித்துறை. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வட பாரிசம் அங்குதான் கிழக்கு நோக்கித் திரும்புகிறது. வல்லிபுரப் பெருமாள் தீர்த்தமாடச் செல்லும் கடற்கரைப் பகுதியை நினைத்துக்கொண்டீர்களானுல், இடம் சரியாகப் புலப்படும். இந்த வளைவில் திரும்பும் கடற்கரை அங்கிருந்து கிழக்கு நோக்கி நீண்டு நெடுத்துப்போகிறது. பருத்தித்துறையில் தோணிக்குப் பாய் விரித்தால் தங்குதடையில்லாமல் நேரே திருக்கோணமலையில் அல்லது அதற்கப்பால் மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில்வரை எங்காவது ஒரு தமிழ் ஊரில் இறங்கலாம். இந்தப் பாதையை பருத்தித்துறைப் பெருமக்கள் அநேகம் பேர் வெகுகாலம் முதலாகவே நன்கு பயன்படுத்தி வந்திருக்கிருர்கள். தொழில் வர்த்தகம் நிமித்தமாகச் சென்ற இவர்கள் அங்கங்கு நிலைபெற்று ஆதிக்கக்கொடி

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சாலைக் காற்று

செக். சிறுகதை

மூலம்: பொகூமில் ஹிறபால்
தமிழில்: 'கே. ரி. ஆர்.'

சிமிட்டித் தொழிற்சாலைக்கு அருகில் ஓர் ஆசனப் பலகைமீது சில வயோதிபர்கள் அமர்ந்திருந்து தங்களுக்குள்ளாக ஏதோ கத்தி சத்தம் போட்டு விவாதித்துக்கொண்டிருந்தார்கள்.

சிமிட்டித் தூசி அந்தத் தோட்டமெங்கும்போர்வை விரித்ததுபோல படர்ந்திருந்தது.

நான் அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்த சமயம், அங்கு தனிமையாக நின்ற அந்தப் பேரு மரத்திற்குக் கீழ், சிறிய உருவத்தினையுடைய மனிதன் ஒருவன் அரிவாளால் புல்அரிந்து கொண்டிருந்தான். அவனிடம் சென்று ''அந்த வாசலடியில் கத்திக் கொண்டிருக்கும் கிழங்கள் யார்?'' எனக் கேட்டேன்.

''அந்தப் பிரதான வாசலடியில் இருப்பவர்கள் தானே...? அவர்கள்தான் எங்களது ஒய்வு பெற்ற உழைப்பாளிகள்!'' என அந்த மனிதன் கூறிவிட்டு, தொடர்ந்து புல் அரிவதில் ஈடுபட்டான்.

''கொஞ்சம் வயது போனவர்கள்...!'' என்றேன் நான்.

''ஏன் என்னைப் பார்த்தாலும்கூட இன்னும் சில காலத்தில் அவர்களுடன் சேர்ந்துவிடுவேன்போல் இல்லையா..?'' அந்த மனிதன் வினவினான்.

''நீயும் அவர்களைப்போல அவ்வாறு ஒய்வு பெறுவதற்குத்தான் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறாய் போலும்?'' என்றேன்.

''நான் அதுமாதிரிச் சீவியத்தை சிறிதேனும் விரும்பவில்லை. இந்த இடம் உடலுக்கு மிகவும் சுவாத்தியமான பூமி... ஏன்... இங்கே சராசரி வயதே எழுபது தானே...!'' கைகளில் புல்லினை அரிந்து கொண்டே இருக்க அவன் சொன்னான். புல்லை அரிந்த பொழுது அதன் மேல் படிந்திருந்த சிமிட்டித் தூசிகள் கிளம்பின.

''என்னத்தைப்பற்றி அந்தக் கிழங்கள் இத்தனை ஆர்வத்துடன் கத்தித் தர்க்கிக்கின்றார்கள்?'' ஆவலுடன் வினவினேன்.

''இவர்களுக்கு எப்பவும் செடிகளைப்பற்றி சம்பாஷிக்கத்தான் விருப்பம். தாங்கள் இந்தத் தோட்டத்தினை இதைவிட நேர்த்தியாக நடாத்த முடியுமென எண்ணுகின்றார்கள்...... இப்பொழுது இப்படித் தொண்டைத் தண்ணீர்வற்றக்கத்துவதால், மாலை ஆக இவர்களுக்கு தீராத மதுவிடாய் ஏற்பட்டுவிடும். இவர்கள் முழுப்பேரும் முன்பு இங்குதான் வேலை செய்தார்கள். இவர்களது வாழ்க்கை இந்த இடத்தோடு பிணைக்கப்பட்டுவிட்டது. அதனால் இன்று இவர்கள் இன்னோர் இடம் சென்று வசிப்பது என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது...!''

''எங்கேயாவது சென்று காளான் பிடுங்கினாலும் இவர்களுக்கு ஏதும் நன்மை ஏற்படும். ஏன் இவர்கள் எங்கேயும் ஒரு காட்டுக்கு அருகில் போய் வசிக்கக்கூடாது? எல்லைப் பிரதேசம் சென்று குடியேறினால் ஒவ்வொருத்தருக்கும் சொந்தத்தில் ஒரு குடிசையும், தோட்டமும் இடைக்குமே...'' எனக் கூறிக்கொண்டே புறங்கையால் நாசியை அமுக்கினேன். கறுத்த நிறத்தில் கட்டித் திரவம் வெளியே வந்தது.

''உதுமாத்திரம் நடக்கவே நடக்காது'' என்றவன் மூச்சு விடுவதற்குச் சிறு அவகாசம் எடுத்துக்கொண்டு தொடர்ந்து சொன்னான்...'' மையார் செக் என்ற ஒய்வு பெற்ற ஒரு தொழிலாளி களாரோவி அருகில் உள்ள காட்டுப் பக்கமாகப்போய் குடியேறினான். அவன்போய் இரண்டு வாரம் ஆகவில்லை. அவனை அம்புலன்ஸ் வண்டியில் திரும்ப கொணர்ந்தார்கள் அங்குவீசியசுத்தக்காற்று அவனுக்கு தொய்வு நோயைக் கொணர்ந்துவிட்டது! இங்கு வந்த சில நாட்களில் அவனுக்கு எல்லாம் சரியாகிவிட்டது. அங்கே அந்த வாசலண்டை பலமாகச் சத்தமிட்டுப் பேசிக்கொண்டிருக்கிறானே...... அவன்தான்...! இங்கே வீசும் காற்று சகலருக்கும் பயித்தம் சூப்பினைப்போல ஆகிவிட்டது''

''எனக்கு பயித்தம் சூப்பில் பிரியமில்லை...'' எனக் கூறிக்கொண்டே ''ஜேர்க்கா பேர்க்கான்ஸின் இருப்பிடம் எங்கே உள்ளது?'' எனக் கேட்டேன். எனது கேள்விக்கு பதில் கூறாமலே அவன் புல் அரிந்துகொண்டிருந்தான். அவன் அரிந்து கொண்டிருந்த அரிவாள் வரம்பில் தட்டுப்படவே தோட்டத்தினைச் சுற்றிச் சுற்றி... ''குளவி...!'' எனக் கூந்திக்கொண்டு பின்னிட்டு ஓடினான். ஓடும்போது அரிவாளை தலையைச்சுற்றி வீசிக்கொண்டே ஓடினான்.

ஓடுகின்றவனை நான் இழுத்து நிறுத்திப்பிடித்தவாறே... ''ஹேய்...ஜேர்க்கா பேர்க்கன்ஸின் வீடு எங்கிருக்கிறது?'' எனக் கேட்டேன்.

''நான்தான் ஜேர்க்காவினுடைய தந்தை'' எனக் கூறியவாறே அரிவாளால் குளவியைவிரட்டிக்கொண்டு திமிறித் தன்னை விடுவித்துக்கொண்டு ஓடினான்

''நான் ஜேர்க்காவின் நண்பன். உங்களைச் சந்தித்ததில் மிகவும் சந்தோஷம்'' என உரத்த சத்தமிட்டுக் கூறி என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன்.

''அப்படியா? உன்னை அவன் கண்டால் மிகவும் சந்தோஷப்படுவான். உன் வருகைக்காகக் காத்துக்கொண்டிருக்கிறான்...!'' இன்னமும் சுருதி குறைக்காத அதே மேல் குரலில் இவ்வாறு கத்திக் கூறிக்கொண்டே எனதருகில் வந்தான்.

அவன் குளவியை அரிவாளால் விரட்டும்பொழுது அரிவாள் நுனி தலையில் செருகிக்கொண்டது. அதை அவன் பொருட்படுத்தாமலே என்னை அணுகினான். தொப்பியில் செருகிய இறகு போல அரிவாள் தலையைக் குத்திக்கொண்டிருந்தது. இக்கோலத்தில் இருவரும் வீட்டு வாசலை நெருங்கிப் போய் விட்டோம். திரு. பேர்க்கான் அவ்வளவு நேரமும் கண் இமைகளை ஒருமுறையாவது மூடித் திறக்கவேயில்லை...! இரத்தம் சிற்றாறு போல அரிவாள் குத்திய இடத்திலிருந்து வழிந்து, காதடியில் தேங்கி சொட்டுச் சொட்டாக நாடியை நோக்கி கோடிட்டு வழிந்துகொண்டேயிருந்தது.

வீட்டு வாசலுக்கு ஒரு தடித்த பருத்த பெண்மணி வந்தாள். அ[illegible] கையளவு நீ[illegible] சட்டை முழங்கைக்கு மேல் அசட்டையாக சுருக்கிவிடப்பட்டிருந்தது. அப்பொழுதுதான் சமையல் கட்டில் இறைச்சி அறுத்து வைத்துவிட்டு வெளியே வந்தவள் போல அவளது கைமுழுவதும் ஊத்தைக் கொழுப்புப் பிசுக்கு துலாம்பரமாகத் துலங்கிற்று. கண் இமை ஒன்று, மற்றதிலும் பார்க்க சற்றுத் தாழ்வாக அமைந்திருந்தது. அவளது கீழுதடும் சோர்ந்து தூங்கிற்று.

''இவள்தான் எனது மனைவி'' திரு. பேர்க்கான் அவளை எனக்கு அறிமுகம் செய்துவைத்தார். அவளும், ''நீ வருவதை நான் கண்டேன்...; உன் வரவு நல்வரவாகட்டும்'' எனக் கூறிக்கொண்டே அந்த அழுக்குப் பிசுக்கு ஏறிய கரத்தினால் என் கைகளைப்பற்றிப் பிசைந்தாள்.

எனது நண்பன் ஜேர்க்காவும் வெளியே ஓடிவந்து, என் கைகளைப் பற்றிக் குலுக்கியவாறே, மறு கையால் நாம் நின்ற இடத்தின் சுற்றுடலைச் சுட்டிக்காட்டி...''எப்படி... இந்தக் காட்சிகள்? நான் பொய்யா சொன்னேன்...? பாரீ, என்ன அழகிய வர்ணங்கள்...! என்ன சோலை...! ஹா.. மனதை அள்ளும் காட்சிகளாக இல்லையா இவை?''

''உண்மையில் அழகான காட்சிகள்தாம்...! மனதுக்கு இரம்மியமானதுதான்...! ஒப்புக்கொள்கின்றேன் ...! ஆனால், முதலில் உன் தந்தைக்கு என்ன நிகழ்ந்திருக்கிறது என்று கவனி..'', என்றேன்.

''..,எ...ன்...ன..!'' ஜேர்க்கா கத்திக்கொண்டே புரியாதவனைப்போல சுற்றுமுற்றும் பார்த்தான்.

''என்னவா..,? இதுதான்..'' எனக்கூறிக்கொண்டே திரு.பேர்க்கானின் தலையில்துருத்துக்கொண்டிருந்த அரிவாளைக் காட்டினேன்.

''ஓ...ஹ்...!..' இதுவா!'' நண்பன் அசிரத்தையுடன் நிர்ச்சிந்தையாகக் கூறிக்கொண்டே ''ஏதோ....இழவில் மாட்டிக்கொண்டுவிட்டார் என நினைத்தேன். அம்மா...இங்கே பாரேன்... ஐயா...பிறகும் குளவி பிடிக்க வெளிக்கிட்டிருக்கின்றார் போலேயிருக்கு... ஐயோ... ஐயா...!'' என அவன் கூறி முடிக்கும்பொழுது அவன் வதனத்தில் கப்பியிருந்த கலவரத்தின் சாயல் மறைந்து நிம்மதியான புன்சிரிப்பு மலர்ந்து தவழ்ந்தது. ''எப்பவும் இப்படியான சின்னச் சின்ன முசுப்பாத்திகள் இங்கே நிகழ்ந்துகொண்டேயிருக்கும் ஒருமுறை இருந்தாப்போலே நாங்கள்வளர்த்த முயல்கள் சில களவுபோகத் தொடங்கின. என் தந்தைக்கு இருக்கும் விஞ்ஞான மூளையிருக்கே, அது அவருடைய வரப்பிரசாதம். உடனே அவர் ஒரு பலகை எடுத்து முயல்கூட்டுக்கு அருகில் இருந்த இறைகுளத்துடன் பொருத்திப் பொறிபோல ஒன்றை உருவாக்கினார். அந்தப்பொறிப்பலகையில் மெதுவாக யாராவது இரவில்காலினை வைத்தமாத்திரத்தே நேரே இறைகுளத்துக்குள்தான் விழவேண்டும். ஆனால் கள்ளனைப் பிடிக்க வைத்த பொறியில் இவரே அகப்பட்டு, ஒருநாள் காலை [illegible] இறைகுளத்துக்குள் நின்றுகொண்டிருந்தார்...'' என்றான் ஜேர்க்கா.

''நல்லவேளையாக... இறைகுளம் அவ்வளவு ஆழமில்லை'' என்றார் திரு. பேர்க்கான்.

''எவ்வளவு ஆழமிருந்திருக்கும்?'' ஜேர்க்கா கேட்டான்.

''இவ்வளவு மட்டில்தான் இருந்தது...'' எனத் தன் கழுத்தினைக் காட்டியவாறே கூறினார் திரு பேர்க்கான்.

''ஆகஅவ்வளவுதானா...?'' என்ற ஜேர்க்கா, தொடர்ந்து... ''வேறு ஒருமுறை எனதுதந்தையார் சுகாதார ஆபீசர் விளையாட்டு விளையாடினார் ஒருநாள், நெருப்புத் தண்ணீர்வாளியைக் கக்கூசுக்குழிக்குள் ஊற்றிவிட்டு, வாயில் புகைந்துகொண்டிருந்த சுங்கானையும் அதற்குள் தட்டிக்கொட்டினார். நான் என்ன நடக்குது என்று பார்த்துக் கொண்டிருந்தேன். உடன், பீரங்கி வெடித்தது போன்ற ஓசையைத்தொடர்ந்து குழிக்குள் இருந்த சுமார் ஐந்து அந்தர் மலமும் வெளியே பறக்க, தந்தையார் இருபது அடி உயரத்துக்கு தூக்கி எறியப்பட்டு, குத்துக்கரணம்அடித்துக் கொண்டு வீழ்ந்தார் மலக்குழிக்குள்ளேயே நேரே போய்விழுந்தார்.'' என்றான்

''ஹா...ஹா...ஹா...வயிறு குலுங்கச்சிரித்தாள் திருமதி பேர்க்கான்.

''அது உண்மையில்லைத் தம்பி. உண்மையில் நான் இருபதடி உயரத்துக்குத் தூக்கிஎறியப்பட்டுப்பசளைக்குள் விழவேயில்லை'' என திரு. பேர்க்கான் கூறியபொழுது, அவரது காதடியில் உறைந்திருந்த இரத்தம் பிரகாசித்தது.

''அப்படியானால்எவ்வளவு தூரத்துக்கு?'' எனஜேர்க்கா கேட்டான்.

''ஆகக் கூடியது பதினைந்தடிதான் இருக்கும். மேலும்...அங்கே நாலு அந்தர் மலம் மட்டில்தான் இருந்திருக்கும்...'' எனக் கூறிக்கொண்டே திரு.பேர்க்கான் தொடர்ந்தார்...''எங்களுடைய பொடியன் ஒரு கலைஞன் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே? அதனால்தான் இவன் எல்லாவற்றையும் இப்படிமிகைப்படுத்தியே கூறுகின்றான்'' என்றார்.

''அவ்வளவுதானா...? ஆனால் நான் ஒன்று கூற விரும்புகின்றேன் ... உங்களுடைய தலையில் துருத்திக்கொண்டிருக்கும் அரிவாள் என்னைக் கலவரம் அடையச் செய்கின்றதே'' என்றேன்.

''ஓஹ்... அது ஒன்றும் செய்யாது...!'' எனத் திருமதி பேர்க்கான் கூறிக்கொண்டே, அரிவாள் கைப்பிடியைப் பிடித்து இழுத்து தலைக்குள் அமுங்கிக்கொண்டிருந்த அதன் கூர்முனையை வெளியே எடுத்தாள்.

''திரு. பேர்க்கானுக்கு ஏற்புவலி ஏதும் ஏற்படமாட்டாதா...!'' கலவரத்துடன் கேட்டேன்.

திருமதி பேர்க்கான் தன் கையால் பேர்க்கானின் நெற்றிப் பிறையில் தட்டியவாறே...''அப்படி ஒன்றும் நேர்ந்துவிடாது தம்பி. இங்கே நாங்கள்எல்லோரும் நோய்நொடிகளை சுத்தமான காற்றினால்தான் மாற்றுகின்றோம்'' என விமர்சித்தவாறே ஜேர்க்காவை பார்த்து... ''காலையிலே கொப்பருக்கு நல்ல பொஸ்தார்தான் கொடுக்கவேண்டும்...வர...வர இவர்மிச்சம் குழப்படிக்காரப் பையனாகிக்கொண்டே வருகின்றார்'' என்று கூறியவள், தனதுகணவனின்நெற்றியில் வந்து விழுந்திருந்த மயிர்க்கற்றையில் பிடித்து ஆளை இழுத்துக் கொண்டுபோய், முற்றத்தினைக்கடந்து, தண்ணீர்க்குழாயடிக்குக்கீழ்நிற்க வைத்து, மறுகையினால் குழாயினைத் திறந்தாள்.

''நண்பா...உனக்குத் தெரியாது எனது தந்தை மிகவும் பயங்கரமானவர்! இந்த வருட விடுமுறையின் பொழுது வீட்டின் நீர்க்கால்களை அடைப்பதில் ஈடுபட்டார். அப்பொழுது எல்லாம் அவர் பாதுகாப்புப் பட்டியினைக் கட்டிக்கொள்ளாமலே, கூரைத் தாழ்வாரம்வழியாக சிரித்துக்கொண்டே நடப்பார். அவர் கால்தவறி எக்கச்சக்கமாக விழுந்து விட்டால் அம்புலன்ஸ் வண்டிக்கு ஓடுவதற்காக சதாகாலமும் அவரையே கண்காணித்துக் கொண்டிருப்பாள் அம்மா. பதினைந்தாவதுநாள் தந்தையார் பாதுகாப்புப்பட்டியினைப் போல காலிலே ஒரு கயிற்றினைப் பொருத்தி வேலை மும்முரத்தில் ஈடுபட்டிருந்த பொழுது தவறி கீழே விழுந்து கயிற்றில் தூ[illegible]கினார். நான் யன்னலூடாக அவருக்கு குடிவகைகள் பரிமாறினேன் அவ[illegible] தொங்கிக் கொண்டிருந்த இடத்துக்குக்கீழே வீட்டில் உள்ள இறகுமெத்தைகளை எல்லாம் கொணர்ந்து தாயார் குவித்தார். பின்பு— நான் அவர் தொங்கிக் கொண்டிருந்த கால் கயிற்றினை அறுத்து விட்டேன். என்ன நடந்தது தெரியுமா...? தலை குத்துக்கரணமாக இறகுமெத்தைக்குள்யலுக்கு அருகில்...சிமிட்டித் தரைமீது தொபுகடீர் என வீழ்ந்தார்.

''ஹா ... ஹா... ஹா ...'' எனக் கேலிச்சிரிப்புச் சிரித்தவாறே திருமதி பேர்க்கான் ...தன் கணவன் தலையில் தண்ணீரை ஊற்றினாள். அவர் தலையை நிமிர்த்தவே ...குழாய் அவர் தலையில் இடித்துக்கொண்டது.

அருகில் இருந்த மலைஅடிவாரத்திலிருந்து கிளம்பிய மின்னல் பொறியினைத் தொடர்ந்து, பெரிய வெடியோசை ஒன்று எமதுசெவிப்பறையில் முட்டிமோதிற்று.

''பத்துமணியாகிவிட்டது...!'' என்றான் ஜேர்க்கான்.

''சண்டாளர்கள்...!'' என ஒரு மாதிரியான ஆதாரம் வார்த்தையில் சுரக்கக்கூறிக்கொண்டே மலைச்சாரல் பக்கம் பார்வையை செலுத்தினாள் திருமதி பேர்க்கான். அங்கே.. புகைப் படலம் மெதுவாக மேல் நோக்கி எழுந்து படர்ந்து கொண்டிருந்தது.

அந்த மலைமேலே இருந்த தூசிபடர்ந்த பைன் மரங்களுக்கு ஊடே சிலபோர்வீரர்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 1966 முதல் ஆறுமாதங்களில் எம்.ஜி. ஆர். முன்னணியில்!

## ஜெயலலிதா-விஜயா பலப்பரீட்சை!

1966-ல் முதல் ஆறுமாதங்களில் தமிழ் நாட்டில் திரையிடப்பட்டுள்ள படங்களில் எம் ஜி ராமச்சந்திரன் முன்னணியில் நிற்கிறார். கே. ஆர். விஜயாவுக்கும், ஜெயலலிதாவுக்கும் இடையே கடுமையான பலப்பரீட்சை நடக்கிறது!

1966-ல் ஜனவரி முதல் ஜூன் மாதம் முடிய 26 தமிழ்ப் படங்கள் திரையிடப்பட்டுள்ளன. இவற்றில் 19 நேரடித் தமிழ்ப் படங்களாகும். 7 வேறு மொழிகளில் இருந்து தமிழ்ப்படுத்தப்பட்ட 'டப்பிங்' படங்களாகும். சென்ற ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் வெளிவந்துள்ள தமிழ்ப்படங்களின் மொத்தத்தில் ஒரு படம் குறைவாக உள்ளது. இந்த ஆண்டில் (1965-ல் 26 படங்கள்) திரையிடப்பட்டுள்ள 26 படங்களும் வருமாறு:

### ஜனவரி!

சித்தி, அன்பேவா, பூஜாபலன், மோட்டார் சுந்தரம்பிள்ளை, மதுரை மன்னன்.

### பிப்ரவரி

நான் ஆணையிட்டால், முகராசி, இரு வல்லவர்கள்.

### மார்ச்

கொடிமலர், அண்ணாவின் ஆசை, அசகாய சூரன்.

### ஏப்ரல்

சாதுமிரண்டால், பெரிய மனிதன், யார் நீ, தேசத்துரோகிகள், நாடோடி, ராஜநீதி, அவன் பித்தனு, தாயின் மேல் ஆணை, (இந்தமாதம் தான் அதிகப் படங்கள் திரையிடப்பட்டது).

### மே

குமரிப்பெண், சந்திரோதயம், பாஞ்சாலி சபதம்.

### ஜூன்

ராமு, தட்டுங்கள் திறக்கப்படும், தேடிவந்த திருமகள், பாண்டவர் வனவாசம்.

இவற்றுடன் கன்னடத்தில் 12 படங்களும், தெலுங்கில் 21 படங்களும், மலையாளத்தில் 12 படங்களும், இந்தியில் 4 படங்களும், வங்காளத்தில் 1 படமும் தமிழ்நாட்டில் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டுள்ளன!

இந்த அரை ஆண்டில் மொத்தம் 76 படங்கள் தென்நாட்டில்திரையிடப்பட்டுள்ளன. இவை சென்ற ஆண்டை (1965) விட ஒருபடம் (75) அதிமாகும்.

அரை ஆண்டில் தமிழ்ப் படவுலக முன்னணி கதாநாயகனுக எம். ஜி. ராமச்சந்திரன் திகழ்கிருர். இவர் 'அன்பேவா, நான் ஆணையிட்டால், முகராசி, நாடோடி, சந்திரோதம்' ஆகிய ஐந்து படங்களில் நடித்திருக்கிருர்.

### சிவாஜி

சிவாஜிகணேசன்நடித்து வெளிவந்த ஒரே படம் மோட்டார் சுந்தரம் பிள்ளை ஜூலை மாதம் முதல், மாதம் ஒன்றுக்கு ஒருபடம் வீதம் சிவாஜி படம் திரைக்கு வடும் என்று தெரிகிறது. இவரின் 5-6 படங்கள் முடியும் நிலையில் இருக்கின்றன!

### போட்டி நடிகைகள்

நடிகைகளில் ஜெயலலிதாவுக்கும், கே. ஆர். விஜயாவுக்கும் பலப்பரீட்சை நடக்கிறது. இவர்கள் இருவரும் நடித்து தலா ஐந்து படங்கள் வெளிவந்துள்ளன. இனிமேல் வெளிவரப்போகும் படங்களிலும் பலத்த ேண்ணிக்கைப் போட்டி இருக்கும் அறிகுறி தெரிகிறது.

* 'படம் நினைச்ச மாதிரி
* வரல்லே! என்னமோ 'ப்ளான்'
* பண்ணினேன் என்னமோ
* ஆயிடுச்சு ...' என்று
* வேதனைப்படுகிருர் இந்த---

# மாடி வீட்டு ஏழை

''டைரக்ட் செய்வதற்கு தனித்திறமை வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அதிலும் ஒழுங்காகப் பின்னப்பட்டிருக்கும் ஒரு பெரிய கதையைஎளிதாகஎடுத்துவிடலாம். ஆனால் ஒரு சிறுகதையையோ, அல்லது இரண்டு மூன்று நிகழ்ச்சிகளையோ வைத்துக் கொண்டு, அதைச் சுவைப்படப்படம் எடுப்பதில்தான் டைரக்டரின் திறமையும், சாமர்த்தியமும் அடங்கியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் நான் நடிகனுகவும் இருப்பதால், நடிக, நடிகைகளின் திறமை என்ன, அதை எப்படி முழுமையாகப் பயன்படுத்துவது என்பதெல்லாம் எனக்குத் தெரியும். இது ரொம்ப முக்கியம் இல்லையா?''




டைரக்டர் சந்திரபாபு தான் இப்படி ஒரே மூச்சில் வெளுத்துவாங்கியிருக்கிருர். தமிழகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் தட்டுங்கள்; திறக்கப்படும் படசம்பந்தமாக அளித்த ஒரு பேட்டியில் இப்படியாகத்தெரிவித்துள்ளார்.

அந்தப்படத்தின் கதை, டைரக்ஷன், தயாரிப்பு ஆகிய பொறுப்புகளை செய்ததுடன் பாபு நகைச்சுவையல்லாத, முற்றிலும் வேறுபட்ட புதிய தொரு பாகத்தில் நடித்துமிருக்கிருர். ஊமையாக வருகிருர்.

ஆனாலும் பாபுவுக்குஒரு வருத்தம். தாம் ரொம்பவும் கஷ்டப்பட்டு எடுத்த சில காட்சிகள் சென்ஸருக்குள்ளாகி விட்டதென்பதே!

'படம் நான் நினைச்ச மாதிரி வரல்லே! என்னமோ 'ப்ளான்' பண்ணினேன், என்னமோ ஆயிடுச்சு...'—என்று அந்தக் காட்சிகள் வெட்டப்பட்

[12-ம் பக்கம் பார்க்க]

# இவர் எப்படி?

அறுபத்து நான்கு கலைகளில் ஒன்ருன நடனக் கலைக்குச் சிறப்புத் தேடிக் கொடுக்கப் பிறந்தவர்தான் குமாரி கமலா.

ஹிந்திப் படமான 'இம்மத்'தில் பேபி கமலா நடனமாடிக்கொண்டே தமிழ்ப் படவுலகில் புகுந்தார்.

இன்று சினிமாவிலும், மேடைதரப்பட்ட நிகழ்ச்சிகளிலும் எட்டுத் திக்கும் சதங்கை ஒலிக்க, தனிக் கொடி பறக்கவிட்டுக் கொண்டிருக்கிருர்.

### பேபியாக......

இவர் பேபி கமலாவாக 'ராமராஜ்யம்' 'ஜகதலப் பிரதாபன்' போன்ற படங்களில் நடனமாடியதுடன் 'என் மகன்', 'நாம் இருவர்' ஆகிய படங்களில் சிறுபாகங்கள் ஏற்று நடித்தார்.

### தலைவிதி!

வட நாட்டுப் படங்களில் இவர் பிரதம நடனக்காரியாக விளங்கிய போதுதான் லட்சுமணன் என்ற கேலிச் சித்திரம் (காட்டூனிஸ்ட்) வரைபவரை காதலித்து கரம் பிடித்தார். ஆனாலும் நெடுங்காலம் இணைந்து வாழவில்லை! பிரிந்துவிட்டனர். மீண்டும் குமாரியானுர்!

''பிரிந்து வாழ்வதற்கு காரணமென்ன?'' என்று பத்திரிகை நிருபர் ஒருவர் கமலாவிடம் கேட்டபோது, ''ஒவ்வொருவருக்கும் எழுதப்பட்ட தலைவிதி, யாராலும் மாற்ற முடியாது'' என்று பதிலளித்தார்.

வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வரும் அரசியல்வாதிகள், பிரதமர்கள் முன்னுல் நடனமாடிப் பரதநாட்டியத்தின் சிறப்பை புரியவைத்த பெருமை கமலாவுக்கு உண்டு வெளிநாடுகளுக்குச் சென்று ஆடற்கலைக்கு அழகு தேடிவைத்தார். 'மாலையிட்ட மங்கை'யில் இவரது நடனத்தைப் பார்த்தவர்கள் இவருக்கு 'ஆடவந்த தெய்வம்' என்ற பெயரைச் சூட்ட மறந்திருக்க மாட்டார்கள்.

### சலங்கையுடன் சங்கமம்

'பாவை விளக்'கில் சிவாஜியுடன் சேர்ந்து நடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெற்ருர். எம். வி. ராமன் தனது அரிய பெரிய தயாரிப்பான 'கொஞ்சும் சலங்கை'யில் கமலாவை சலங்கையுடன் சங்கமமாக்கினுர்.

தமிழ் சினிமா உலகில் நடனக் கலையை கைவரத் தேர்ந்த நடிகைகள் யாராவது இருக்கிருர்களென்ருல், ஒரே ஒருவரைத்தான் சொல்லலாம்! அது குமாரி கமலாதான்!

நிறையப் படங்களில் அவர் வந்துபோவதில்லையென்ருலும், கமலாவுக்கு என்றென்றும் ஒரே மாதிரியே புகழ் இருந்துகொண்டிருக்கிறது.

ஆடவந்த தெய்வமாம் குமாரி கமலா, கால்களில் சலங்கையும், கொஞ்சு நாதமும் இருக்கும்வரை ரசிகர்கள் உள்ளத்தில் 'கலீர், கலீர்' என ஒலித்துக்கொண்டிருப்பார்.

—மேகலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகமேடை

## உதைபந்தாட்டம் உலக கப்போட்டி

தற்போது இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் உலக உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி, கோடிக்கணக்கான ரசிகர்களைக் கவர்ந்திருக்கிறது. சென்ற 11-ம் திகதி ஆரம்பமான இப்போட்டிகளில், இறுதி சாம்பியன் யார் என்பது வருகிற 30-ம் திகதி தெரியவரும். அன்றுதான் இறுதிப் போட்டி இந்தப் போட்டி முடிவுகளைப் பற்றி அறிவிக்க உலகம் முழுதுமிருந்து 1600-க்கு மேற்பட்ட விளையாட்டு நிருபர்கள் லண்டன் வந்திருக்கிறார்கள். லண்டனிலுள்ள எல்லா ஹோட்டல்களிலும் தங்கியிருப்பவர்களில பாதிப் பேர் வெளிநாடுகளிலிருந்து இந்த விளையாட்டுக்களைப் பார்க்க வந்திருப்பவர்கள் என்பதிலிருந்தே, அவற்றின் மகத்துவத்தை அறியலாம்.

உதைபந்தாட்டம் பிறந்த நாடு
ஆனால் இ
எத்தனை ய
உதைபந்
முக்கிய தே
ட்டுகளாகக் கொண்டாடு க்கின்றன. உலக உதைபந்தாட்ட சாம்பியன் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறுகிறது. கடந்த இரு தடவைகளாக தென்அமெரிக்காவைச் சேர்ந்த பிரேஸில் உலக சாம்பியனாக விளங்கிவருகிறது.

இறுதிப் போட்டிகளில் இப்போது 16 நாடுகள் கலந்து கொள்கின்றன. பொதுவாக ஐரோப்பிய தென்அமெரிக்க நாடுகளே இத்தகைய இறுதிப் போட்டிகளில் இதுவரை கலந்து கொண்டிருக்கின்றன. விளையாட்டுத் திறமையின் அடிப்படையில் உலகிலேயே தலைசிறந்த உதைபந்தாட்டக் கோஷ்டிகள் அங்குதான் இருக்கின்றன என்பதே இதற்குக் காரணம். ஆனல் முதல் தடவையாக ஆசிய நாடான வடகொரியா இம்முறை கலந்து கொண்டிருக்கிறது.

இறுதிப் போட்டிக்கு வருவதற்காக கடந்த 2 ஆண்டுகளாக உலகெங்கும் சுற்றுப்போட்டிகள் நடைபெற்றன. இவற்றில் கடைந்தெடுத்த 16 கோஷ்டிகள் இப்போது இறுதிப் போட்டிக்கு வந்திருக்கிறன ஜூலை 30-ம் திகதி சாம்பியனாக வரும் கோஷ்டி அடுத்த 4 ஆண்டுகளுக்கு அந்தப் பட்டத்தை வகிக்கும். அடுத்த போட்டி 1970-ம் ஆண்டிலேயே நடக்கும்.

பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் இந்தப் போட்டிகளை முதல்நாள் ஆரம்பித்து வைத்தபோது 90,000-க்கு மேற்பட்ட ரசிகர்கள் இங்கிலாந்துக்கும் உருகுவேக்குமிடையே நடைபெற்ற விளையாட்டைக் கண்ணுற்றனர். மகாராணியும், அவரது கணவர் எடின்பரோ கோமகனும், மந்திரிகளும், ராஜதந்திரத் தூதுவர்களும் அவர்களில் அடங்குவர். உலகம் முழுவதும் டெலிவிஷனிலும், ரேடியோக்களிலும் இது அஞ்சசல் செய்யப்பட்டது.

ஏககாலத்தில் நான்கு இடங்களில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில், இறுதிசாம்பியன்ஷிப்விளையாட்டு வெம்பிளி ஸ்டேடியத்தில் நடைபெறும். சமீபத்தில் தி ப்பட்டு மீட்கப்பட்ட வண் பெறுமதிய க வெற்றிக் த சாம்பிய அப் போது ந்தக் கோப்பைை பிக் கிள்ஸ் என்ற ம முதல் நாள் ஆட்டத் த உயர் கட்டண ஆசனத்திலிருந்து கண்டு களித்தது என்பது குறிப்பிடத்தக்கது.)

முதல்நாள் ஆட்டத்தைப்பற்றிச் சில வார்த்தைகள் இங்கு குறிப்பிட வேண்டும். இங்கிலாந்துக்கும் உருகுவேக்குமிடையே நடைபெற்ற இந்த ஆட்டத்தில் எவரும் கோல் போடாதது, குறிப்பாக இங்கிலாந்து கோல் போடாதது பல கணிப்புகளை பிழையாக்கிவிட்டது. ஏனெனில் இந்தப் போட்டிகளில் இங்கிலாந்து இரண்டாவது ஸ்தானத்தைப் பெறும் எனப் பொதுவாகக் கணிக்கப் பட்டிருந்தது. ஆனல் உருகுவேயின் எஃகைப் போன்ற பாதுகாப்பை தொடர்ச்சியாக தாக்கிய இங்கிலாந்தினால்உடைக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1930, 1950 ஆகிய ஆண்டுகளில் உருகுவே உலகஉதைபந்தாட்டச் சாம்பியனாக இருந்தது. ஆனல் அதன்பின் அது சிறந்த ஓர்தற்பாதுகாப்பு கோஷ்டியாகவே செயல் பட்டுவருகிறது.

1958, 1962-ம் ஆண்டு போட்டிகளில் சாம்பியன் பட்டத்தை வென்ற பிரேஸில் இம்முறையும் தனது பட்டத்தைக் காத்துக் கொள்ளும் என எதிர் பார்க்கப்படுகிறது, உலகின் தலைசிறந்த உதைபந்தாட்ட வீரர் பேல் இந்தக் கோஷ்டியில்தான் இருக்கிறார். உதைபந்தாட்ட உலகில் பேல் என்றால் அவர் ஒரு கனவுலக நாயகன். ரசிகர்களுக்கு இளம்பேலைப் பற்றி பேசுவதே ஒரு அலாதி ஆனந்தம். அவர் ஒரு உலக நட்சத்திரம், கிட்டத்தட்ட அவரை போன்ற வீரரான கரிஞ்சாவும் பிரேஸில் கோஷ்டியில் இருக்கிறார். இதர கோஷ்டிகளில் பல உலக விளையாட்டு வீரர்கள் இருந்தபோதிலும், பிரேஸில் கோஷ்டியில் தான் அதிகமான சிறந்த உதைபந்தாட்டக் காரர்கள் இருக்கிறார்கள். ஆனல் 3 முக்கிய வீரர்கள் காயமடைந்திருப்பதால் இந்தப் போட்டிகளில் விளையாட முடியாதிருக்கிறார்கள். பிரேஸில் கோஷ்டியை இது ஓரளவு பாதிக்குமாயினும் மீண்டும் அதுதான் வெற்றி பெறுமென கணிக்கிறார்கள்.

அர்ஜண்டைனா, ஸ்பெயின் கோஷ்டிகளிலும் சில தலைசிறந்த உலக வீரர்கள் இடம்பெற்றிருக்கிறார்கள்.

இங்கிலாந்து ஸ்பெயின், ரஷ்யா, இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, போர்த்துக்கல், பல்கேரியா, சுவிட்ஸர்லாந்து, ஹங்கேரி, ஆகிய ஐரோப்பிய நாடுகளும், பிரேஸில், உருகுவே அர்ஜண்டைனா, மெக்ஸிகோ, சிலி ஆகிய லத்தின்அமெரிக்க நாடுகளும் ஆசியநாடான வடகொரியாவும் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

# சிறுகதை (7ம் பக்கத் தொடர்ச்சி)

(7-ம்பக்கத்தொடர்ச்சி)

கள் தென்பட்டார்கள். அப்பொழுது --- ஒரு கொடி அசைந்தவுடன் --- போர் வீரன் ஒருவன் --- மலையிலிருந்து சமவெளிக்கு இறங்கி கையில் வைத்திருந்த எறிவெடியின் திரிமுனையைத் திருகி தூர வெட்டையில் எறிந்துவிட்டு நிலத்தில் குப்புற வீழ்ந்து ப த்தான். உடன் வெடி ஓசையும், அதைத் தொடர்ந்து பால் போன்ற புகைப்படலமும் கிளம்பிற்று அந்தஓசையின் அதிர்ச்சியில் பள்ளத்தாக்கில் இருந்த கபிலச்செடிகளிலும்- சூரியகாந்திச்செடிகளிலும் ஒட்டிக்கொண்டிருந்த சிமிட்டித்தூசு எங்கும் பரவிற்று.

''சண்டாளர்கள்...!'' எனத் திருமதி பேர்க்கான் மெதுவாக முணுமுணுத்துக் கொண்டாள்.

ஃ ஃ ஃ

குகினிக்குள் டசின் கணக்கான ஓவியங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

திருமதி பேர்க்கான் ஒவ்வொரு ஓவியத்திற்குக்கீழும் ஓர் நாற்காலியை இழுத்துப் போட்டு மிகவும் சிரமப்பட்டு ஏறி, அழுக்கேறிய கந்தல்துணியினால் ஓவியங்களில் படர்ந்திருந்த தூசியைத்துடைத்தாள். துடைத்தவுடன் ஓவியங்களின் அழகான வர்ணச்சேர்க்கை பிரகாசித்தது.

பேர்க்கான் தனது அரிவாள் முனையினால் ஓவியங்களைச் சுட்டிக் காட்டியவாறே விளக்கம் தரத்தொடங்கினார்.

அதாவது தனது மகன் ஒவ்வொரு ஓவியத்தினையும் வரையும் பொழுது ஒரு விநோதமான அனுபவத்தை, அவஸ்தையை வரவழைத்துக் கொண்டே ஓவியங்களை வரைந்தான் என கூறினார்.

திருமதி பேர்க்கான்... ஐந்து நிமிடத்துக்கு ஒருக் கால் வெடி ஓசை கேட்ட பொழுதெல்லாம் உடனே அப்பக்கம் திரும்பிப்பார்த்து ''சண்டாளர்கள்'' எனமுணுமுணுத்துக்கொண்டாள்.

மதியநேரமாகிக்கொண்டிருந்தது. சிறிதுநேரம்ஆழ்ந்த அமைதிநிலவிற்று. ''ஆழ்ந்த உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கும் அழகான ஓவியங்கள் ...'' எனக் கூறி நானே அமைதியைக் கலைத்தேன். ''ஜெர்க்கான் அவைகளை வரையும் பொழுது பலஅனுபவங்களையும் அவஸ்தைகளையும் தானே வரவழைத்துக் கொண்டானா?'' என பேர்க்கானிடம் கேட்டேன்.

உடன் ஜேர்க்கானின்முகத்தில் செம்மை திட்டுத் திட்டாகப் படிந்துகொள்ள, அவன் பார்வையைத்தாழ்த்திக்கொண்டான்.

''உமக்கு நிச்சயமாக அது தெரியத்தான்வேண்டும்...'' எனத் திரு. பேர்க்கான் பீடிகை போட்டுக் கொண்டே கூறத்தொடங்கினார். ''இவன் எங்கடை பொடியன் சித்திரக் கல்லூரிக்குச் சென்று சித்திரக் கல்வி பயிலவேயில்லை. ஆகையால் தனது கல்வி அறிவுக் குறையைத் தீர்த்துக்கொள்ளவே அப்படி ஒவ்வொரு விநோதமான அநுபவங்களை ஏற்படுத்திக்கொள்கிறான். இதுசம்பந்தமாகக் கதைப்பதற்குத்தான் நாங்கள் உம்மை வரவழைத்தோம். இப்ப இவன் பிறேக்கில் உள்ள சித்திரக்கல்லூரியில் சித்திரக் கல்வி பயிலமுடியுமா?''

இச்சமயமாக, ஒரு போர் வீரன் பைன் மரங்களுக்கு வெளியே சமவெளிக்கு இறங்கிவந்து, எறிவெடித் திரியினை திருகி தூர எறிந்தவுடன், அது வெடித்து நிலமும் சேர்ந்து அதிர்ந்தது.

முதன் முறையாக திருமதி பேர்க்கான் ஒன்றும் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

''சண்டாளர்கள்...!'' என நான் கூறினேன். உடன் அவள் எனது கையைத் தனது கையால் எட்டிப் பிடித்து தாய்மை உணர்ச்சி ...ரைப்பளிக்க ''நீ ஒருகால ... அப்படிச் சொல்லக் ...ாது தம்பி. நாங்கள் ...டுமே அவ்வாறு முணுமுணுக்க அனுமதிக்கப்பட்டவர்கள். குடும்பத்துக்குள் குடும்ப அங்கத்தினர்கள் மட்டுமே ஒருவரை ஒருவர் ஏச்சுப்படலாம்... வேணுமாயின் ஜேர்க்காவும் நானும் மாத்திரம் திரு பேர்க்கானைக் கேலி செய்யலாம். வேறுயாரையும் அனுமதிக்க மாட்டோம்... பொறுக்கவும் மாட்டோம்...சரி...சரி புரிகின்றதா?'' எனக்கூறிவிட்டு மீண்டும் எதையோ நினைத்துக்கொண்டவளாய் ''நீ என்ன நினைக்கிறாய்...? எங்கள் மகன் பிறேக்குக்குப் போக வேண்டுமா? அங்கு சென்றால் இவன் செக் ஓவியக் கலையின் மேம்பாட்டுக்கு ஏதும் செய்யமுடியுமா?'' எனக்கேட்டாள்.

''பிறேக்கு, பிரசவ வைத்தியனின் குறடு போல... மேலும், ஜேர்க்காவினது ஓவியங்களும் வீணான கிறுக்கல்கள் அல்ல -- எனது எண்ணம் என்னவென்றால் இவன் புகழைத் தேடிப்போகத் தான்வேண்டும்'' என்றேன்.

''இதைப்பற்றி நாம் சாவகாசமாக ஆலோசிப்போம்'' எனத் திருமதி பேர்க்கான் சமாதானமுற்றாள்.

திரு.பேர்க்கான் பக்கத்து அறையைத்திறந்துகாட்டி... ''எங்கள் மகன் சிற்பவேலைகளும் செய்வதுண்டு. பார்த்தாயா... உண்மையில் இவனது ஈடுபாடு குறைவு ----- ... துவமானது!'' என்றார்.

''என்னமாதிரித்தான் நீங்களுக்கு இந்தக் கலைகளின் நெளிவு சுளிவுகள் எல்லாம் இவ்வளவு நன்றாகத் தெரிகின்றது. திரு. பேர்க்கான்?'' நான் கேட்டேன்.

''ஏன் நான் ஒரு பட்டணவாசிதானே...!'' எனக்கூறியவாறு அரிவாள் முனையால் தலையைச் சொறிந்து நிமிண்டிக்கொண்டே ''நீ ஷேக்ஸ்பியரின் ட்ரொயிலஸ்ஸாவையும் கிறிஸ்ஸிடாவையும் பார்த்திருக்கின்றாயா? கால் நூற்றாண்டுக்கு முன்பு விநோஹாடி மன்றத்தில் நான் அந்த நகைச்சுவை நாடகத்தில் ஒரு பாத்திரம் ஏற்று நடித்திருக்கிறேன். ஒரு சமயம், அதில் வரும் ஐந்தாவது காட்சிக்கு நாடகத்தயாரிப்பாளருக்கு சித்திரவேலைப்பாடு அமைந்த கம்பிஒன்றில் நிறுத்திவைக்க நிர்வாணச்சிலை இரண்டு தேவைப்பட்டன. நானும் ஒரு கன்னியும் மேல் முழுவதற்கு வர்ணம் பூசிக் கொண்டு அக்காட்சியின் பொழுது நிர்வாணமாக சித்திரவேலைப்பாடமைந்த கம்பியில் சிலைகளாக நின்றோம். ஒவ்வொரு காட்சியிலும் ஆடாமல் அசையாமல் உண்மைச்சிலைபோலவே இருந்தோம். நாடகம் முடிந்த பிற்பாடு நான் அந்தக்கன்னியை அணுகி நாடகத்தயாரிப்பாளருக்குக் கைகொடுத்துதவியதுபோலவே எனது வாழ்க்கைக்கும் கைகொடுத்துதவுமாறு கேட்டேன். அவளும் சம்மதித்தாள். அப்படியே ஆரம்பித்து கடந்த கால் நூற்றாண்டுகளாக கணவன் மனைவியாக வாழ்கின்றோம்...!''

''இங்கே உங்கள் மகன் வடித்திருக்கும் சிலைதானா அன்று நீங்கள் வர்ணம் பூசிக்கொண்டு சிலைமாதிரி நின்றதின்மாதிரி..?'' என நான் கேட்டேன்,

திரு. பேர்க்கான் சிரித்தவாறே தலை அசைத்தார்!

அப்பொழுது ''கொஞ்சம் காற்றுவரட்டும்'' என்று கூறிக்கொண்டே திருமதி பேர்க்கான் எழுந்து யன்னலைத்திறந்தாள்.

அறைக்கம்பளம் எங்கும் படர்ந்திருந்த சிமிட்டித் தூசி காற்றில் எழுந்து அறைமுழுவதும் பறந்தது.

''எப்பொழுதாவது உங்கள் உடல் சோர்வை ஆற்ற வேண்டும் எனக் கருதினால் எங்களுடன் வந்து ஒரு வாரம் தங்குங்கள்... எல்லாம் சரியாகிவிடும்'' எனத் திருமதி பேர்க்கான் கூறினாள்.

''ஆனல் இங்கே எல்லா நேரமும் எறிகுண்டினை வெடிப்பார்களோ?'' எனக் கேட்டேன்.

''இல்லையே... திங்கட்கிழமை தொடக்கம், சனிக்கிழமை மட்டும்தான். அது பத்துமணி காலை தொடங்கி மாலை மூன்று மணி மட்டும் தான். ஞாயிற்றுக்கிழமை எல்லாம் ஒரே அமைதியாக இருக்கும். அந்த அமைதி காதை அடைத்துவிடும். நாங்கள் அன்றைக்கு மட்டும் வானொலி கேட்போம். ஜேர்க்கான் அன்று முழுவதும் அக்கோடியன் கருவியில் இசை மீட்டிக்கொண்டேயிருப்பான்'' எனத் திருமதி பேர்க்கான் விளக்கினாள்.

''உண்மையில் நீங்கள் இருபேரும் நாடக மேடையில் சிலைபோல நிர்வாணமாகவா நின்றீர்கள்? புழுகு.. கிழுகு ஒன்றும் இல்லையே?''

''புழுகா..? அப்படி ஒன்றுமில்லை!'' எனத் திருமதி பேர்க்கான்கூறிக்கொண்டே கணவனை நோக்கி நடந்து ''நீங்கள் போய் இந்தத் தம்பி ஒய்வெடுத்துக்கொள்ளக்கட்டிலைச் சரிப்படுத்துங்கள்.. சண்டாளர்கள்'' என்பதையும் சேர்த்து மெதுவாகக் கூறியவறே வெடி ஓசை வந்த திசையினை மெதுவாகத் திரும்பிப்பார்த்துக் கொண்டாள்.

அங்கே வெள்ளை வெளேரெனப் புகைப்படலம் மேல் நோக்கிக் கிளம்பிக்கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனவந்தரும் ஏழை இராமுவும்

— சின்னமாமா —

ஓர் ஊரில் ஒரு தனவந்தர் இருந்தார். அவர் அந்த ஊரிலேயே பெரிய பணக்காரர் ஆவர். அந்த ஊர் மக்கள் எல்லோரும் அவருக்கு அதிக மதிப்புக் கொடுத்துவந்தனர். அவர் ஒருவனைப் பார்த்து ஒரு வேலையைப் பணித்தால், அவ்வேலையைச் செய்ய ஒன்பது பேர் கூடிவிடுவர். காலால் இட்ட வேலையை அவர்கள் தலையால் செய்வர். அத்தனை மரியாதை அவருக்கு.

அவரை எல்லோருக்கும் மிக நன்ருகத் தெரியும் சிறியவர்கள் தொடக்கம் பெரியவர்கள்வரை அவரைத் தெரியும். அவருக்கும் எல்லோரையும் மிக நன்ருகத் தெரியும். குழந்தை முதல் பெரியோர்வரை அவருக்குத் தெரியும். எல்லோரும் அவரை மதித்துவந்தனர்.

அந்த ஊரிலே இத்தனவந்தரின் வீட்டுக்கு அண்மையில் இராமு என்ெருரு மனிதர் இருந்தார். அவர் ஓர் ஏழை எனினும் அவர் மிக்க கண்ணியத்துடன் வாழ்ந்தார் தமது குடும்ப ஜீவனத்துக்கு அவர் பாடுபட்டு உழைத்தார். அவ்வுழைப்பில் அவரும் அவரது மனைவி மக்களும் சிறப்பாக வாழ்ந்தனர். அவர் யாரிடமும் கடன்பட்டதில்லை. கடன் படவும்மாட்டார். இரந்ததில்லை. இரக்கப்போவதுமில்லை.

தனவந்தரும் ஏழை இராமுவும் ஒத்த வயதினர். ஊரிலுள்ள அத்தனைபேரும் மதிக்கும் அத்தனவந்தரை ஏழை இராமுமட்டும் மதிக்கவில்லை. இவ்விஷயம் தனவந்தருக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது. [..]ரிடம் இதுபற்றிச் [சொ]ல்லி, இராமுவிடம் சொல்லும்படியாகச் சொல்லுவார். பலரும் இராமுவிடம் சென்று, தனவந்தரை மதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அப்பொழுதெல்லாம், 'நான் ஏன் அவரை மதிக்கவேணும்? இருவரும் ஒத்த வயதினராயிற்றே!' என்பார். 'என்ன இருந்தாலும் ஊரிலே ஒரு பெரிய மனிதராயிற்றே' என்று சமாதானம் சொன்னுல், 'உலோபிகள் எப்பொழுதும் கீழ்மக்களே' என்பார்.

தனவந்தர் உலோபி என்பது உண்மைதான். இத்தனை பெரிய பணக்காரர், எச்சில் கையால் காகம் துரத்தமாட்டார்.

ஏழை இராமுமீது தனவந்தருக்கு மிக்க கோபம். எப்படியும் இராமுவை மடக்கிவிடவேண்டுமெனக் கங்கணம் கட்டினுர்.

ஒரு நாள் இருவடும் நேர் நேராகச் சந்திக்க நேர்ந்தது இதுதான் தக்க சமயமெனத் தனவந்தர் எண்ணிக்கொண்டார். "என்ன இராமு, உன்னைக் காண்பதே இல்லையே! ஊரிலேதான் இருக்கிருயா— எப்படி, மனைவி மக்கள் யாவரும் சுகம் தானே" என்ருர் "ஆமாம், எல்லோருமே சுகம்" என்ருர் இராமு.

தனவந்தர் விடவில்லை. மேலும் பேசினுர். "இராமு, நீண்ட நாளாக உன்மீது எனக்கு ஒரு குறை உண்டு. அதாவது, ஊரிலுள்ள அத்தனை மக்களும் என்னை மதிக்கின்றனர். ஆனுல், நீமட்டும் மதிக்கின்ருயில்லை. தயவு செய்து நீயும் என்னை மதிக்கவேண்டும். இல்லை

(11-ம் பக்கம் பார்க்க)

## தெரிந்து கொள்ளுங்கள்

1941-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் திகதி ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லருடைய இராணுவம் யூகோஸ்லாவியாவைத் தாக்கிற்று. அப்பொழுது மன்னனுக இருந்த பெற்ருர் II நாட்டை எதிரியிடம் சிக்கவிட்டுவிட்டு தலைமறைவாக ஓடிவிட்டான். இராணுவத்தில் இருந்த ஐந்தாம் படையினரின் செல்வாக்கினுல் இராணுவம் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்க்கவில்லை. ஏப்ரல் 17ம் திகதி யூகோஸ்லாவியா சரண் அடைந்தது.

ஏப்ரல் யுத்தத்திற்குப்பிற்பாடு ஆக்கிரமிப்பாளர்களான ஜெர்மனி, இத்தாலி, ஹங்கேரி, பல்கேரியாஆகிய நாடுகளுக்கிடையில் யூகோஸ்லேவியா பங்குபோடப்பட்டது. குரோஷியாவுக்கு அண்டே பாவலிக்கின் தலைமையில் சுதந்திரம் வழங்கப்பட்டது. உடன், யூகோஸ்லாவியாவின் கம்யூனிஸ்ட் கட்சி ஓர் ஆயுதக்கலவரத்துக்கான ஏற்பாடுகளில் இறங்கிற்று.

1941-ம் ஆண்டு ஆனி மாதம் ஜெர்மனி சோவியத் யூனியனை ஆக்கிரமிக்கத் தொடங்க யூகோஸ்லேவியாவில் ஆயுதக்கலவரத்துக்கான சூழ்நிலை உருவாகிற்று. இதற்கான முதல்நடவடிக்கையாக 1941-ம் ஆண்டு ஜூலை நான்காம் திகதி ஜோசிப் புரொஸ் டிட்டோவின் தலைமையில் பாசிச எதிர்ப்பு மக்கள் விடுதலை இயக்கம் ஆரம்பமாகிற்று.

1941-ம் ஆண்டின் இறுதியில் இந்த விடுதலை இயக்கம் ஓர் இராணுவ அமைப்பாக உருமாறிற்று. இதனுடன் மக்கள் சபையும் அருகருகே வளர்ச்சியடையத் தொட

(11ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பூங்கா



## விடிவெள்ளி நினைவுக் கட்டுரைப்போட்டி முடிவுகள்

'எது வாழ்வு' என்றதலைப்பில் 'விடிவெள்ளி நினைவு மன்றம்' நடாத்திய கட்டுரைப்போட்டியில் நான்கு கட்டுரைகள் பரிசிலையும், எட்டுக்கட்டுரைகள் பாராட்டையும் பெறுகின்றன. போட்டிக்கு ஏராளமான கட்டுரைகள் வந்திருந்தன.

முதற்பரிசிலை செல்வன் த. மனேகரன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), இரண்டாம் பரிசிலை செல்வன் சி. தில்லை நடராஜன் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), ஆகியோரும் மூன்ருவதுபரிசிலை செல்வி மீனுட்சி பொன்னம்மா (உடுப்பிட்டி பெண்கள்கல்லூரி) செல்வன் சி. சுதந்திரராஜா (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரும் பெறுகின்றனர்.

மற்றும், செல்வி பூலோகநாயகி சின்னத்துரை (உடுப்

(11-ம் பக்கம் பார்க்க)

## பெரிய மேதை!

சொட்டுச் சொட்டுக் கைகளைத்
தூக்கி ஏன் அடிக்கிருள்
குட்டிக் குட்டிக் கால்களைக்
குத்தி ஏன் மடிக்கிருள்?

வட்ட வட்டக் கண்களைப்
பட்டுப் பந்துச் சொக்கினை
விட்டு விட்டுக் கசக்கிருள்
வில்லங் கத்திற் புரளுருள்!

அங்கு மிங்கும் பார்க்கிருள்
யாரைத் தேடி நெளிகிருள்
பொங்கி அழுது பொரிகிருள்
போதும் அன்னை வருகிருள்!

அள்ளி வாரி அணைக்கிருள்
ஆத்தை செல்வ மென்கிருள்
பிள்ளை கண்வ ளர்கிருள்
பெரிய மேதை யாகிருள்!

—வி. கந்தவனம்

# குடும்பச் சுடர்

## இளநரைக்கு ஒரு நிவாரணம்

### எப்படி நரை உண்டாகிறது?

நமது முடிக்கு வேண்டிய உணவுச்சத்து இரத்தத்திலிருந்து உச்சந்தலைத் தோலுக்கு அடியில் இருக்கும் நரம்புகளின் வழியாகக் கிடைக்கிறது. இந்தச் சத்துடன் ஒருவகைவர்ணப் பசையும் மயிருக்குச் செல்கிறது. இந்தப்பசை கறுப்பாக இருப்பதால் தலைமயிர் கறுப்பாகவே இருக்கிறது. இந்தப் பசை சிலருக்கு மாறுபட்டிருக்கும். இது மாறுபட்டிருந்தால் கூந்தலின் நிறமும் மாறுபட்டிருக்கும். தலைமயிர் கண்ணுடியைப்போல் வெள்ளையான நிறம்கொண்டது. கறுப்புவர்ணச்சத்துக் குறைந்துவிட்டால் தலைமயிர் வெளுக்க ஆரம்பிக்கிறது. வர்ணச்சத்து குறைவதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

உடல் ஆரோக்கியமாக இல்லாவிட்டாலும் உடலுக்கு வேண்டிய போதிய உணவுச்சத்துகிடைக்காவிட்டாலும், விட்டமின் 'பி' சத்து குறைந்தாலும் தலைமயிர் நரைத்துவிடும்.

இளநரை சிலருக்கு பரம்பரையாக வருவது உண்டு.

### நரைமயிருக்கு நிவாரணம்

விட்டமின் 'பி'சத்துள்ள மாத்திரைகளையோ, காய்கறிகளையோ தொடர்ந்து சாப்பிட வேண்டும். காற்ரோட்டமுள்ள இடங்களில் தேகப்பயிற்சி செய்யவேண்டும் தினமும் குளிர்ந்ததண்ணீரில் குளிக்க வேண்டும். விரல்களின் நுனியால் தலையை அழுத்தி தினமும் காலையிலும் மாலையிலும் தேய்க்க வேண்டும். மனத்தில் துன்பச்சுமையைஏற்றுக் கொள்ளாமல் வாழ்க்கையில் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

—ராஜு

அநேக பெற்ருேர் தங்கள் மக்களுடைய கல்யாணத்திற்கு திசைப்பொருத்தம், குலப்பொருத்தம், நாள்பொருத்தம் நட்சத்திரப்பொருத்தங்களையும், முகூர்த்தத்தில் இருமல் தடை, தும்மல் தடை, வாயுத்தடைகளையும், மிகுந்தஎச்சரிக்கையோடுகவலைப்பட்டுப்பார்க்கிருர்களேயொழிய, கலியாண வாழ்க்கையில் பிரவேசிக்கிற மாப்பிள்ளையும் பெண்ணும் ஒருவரையொருவர் முன்கண்டறிந்திருக்கிருர்களாவென்றும், அவர்கள் இருவரும் விட்டுப்பிரியாமல் வாழ்வதற்கு அவர்களுக்கு முழுமனச் சம்மதமிருக்கிறதாவென்றும், அவர்களுடைய சுபாவம், சுகம், உடல், பொருள் எப்படியிருக்கிறதென்றும், இந்த அவசரமான காரியங்களைக்கவலைப்பட்டுப் பார்க்கிறதற்கு மதியற்றுப்போகிருர்கள்.

—ம. பி. தாஸ்

நிலத்துக்கே யழகு நல்ல
நெல்வயல் கருப்பஞ்
சோலை
ஜலத்துக்கே யழகு நல்ல
தாமரைக் கொடிகள்
தாமே
கலத்துக்கே யழகு நல்ல
கனிகள் தேன் பால்
ரசங்கள்
குலத்துக்கே யழகு நல்ல
குணநிறை பெண்கள்
தாமே.

நாணலைப்போன்றவர்கள் பெண்கள். சிறு காற்று அடித்தாலும் வளைந்துகொடுப்பவர்கள். ஆனுல் புயல் அடித்தாலும் ஒடியமாட்டார்கள்.

—சார்ல்ஸ்.

## தேங்காய் மைசூர்ப்பாகு

வேண்டிய பொருட்கள்:

| | |
|---|---|
| முற்றிய தேங்காய் | — 1 |
| கடலை மா | — 1 சுண்டு |
| வெள்ளைச்சீனி | — 11/2 சுண்டு |
| பட்டர் | — 1/2 ருத் |
| முந்திரிப்பருப்பு | — 35 |
| ஏலக்காய் | — 20 |
| கேசரிபவுடர் | — சிறிதளவு |

செய்கைமுறை:

ஒரு சுண்டு தண்ணீரில் சீனியை இட்டுப் பாகு காய்ச்சி பதமாக வரும்பொழுது தேங்காய்ப் பூவைக் கொட்டி 1/4 ருத்தல் பட்டரையும் கடலைமாவையும் கொட்டிக்கிளறி வெளுப்பு நுரையாக வரும்பொழுது ஏலக்காய், பட்டரில் பொரித்த முந்திரியப் பருப்பு; கேசரிப்பவுடர் இவற்றுடன் மிகுதி பட்டரையும் இட்டுக் கிண்டி பதம்வரும் பொழுது நெய் தடவிய தட்டில் இட்டு ஆறியபின் விரும்பிய உருவத்தில் வெட்டவும்.

—ச சந்திராதேவி

## விளையாட்டுக் கருவிகள் விரிந்த பலனைக் கொடுக்கும்

— குமாரி அ…ணு உம்மன் எம். எஸ். —

சாதாரணமாக ஆரோக்கியமும், ஆனந்தமும் நிறைந்த எந்தக் குழந்தையும் ஒருநாளின் பெரும்பகுதியை விளையாட்டிலேயே கழிக்கிறது. இதனுல் குழந்தைப் பருவத்தின் முதற்பகுதியை 'வாழ்க்கையின் விளையாட்டுக்காலம்' என்று கூறலாம். குழந்தைக்கு விளையாட்டு என்பது அதன் முழுவளர்ச்சியையும் முன்னேறச் செய்யும் செயலாகும். ஒருவகையில் அது குழந்தையின் அறிவு வளர்ச்சிக்கான பயிற்சியும்கூட எனலாம். வளரும் உடம்பிற்கு உடற்பயிற்சி தேவைப்படுகிறது. விளையாட்டுக்கள் மூலம் தன் உடலுறுப்புகளை அடக்கியாளும் வன்மையைக் குழந்தை தன்னையே வெளிப்படுத்தவும், தன் திறமையை உருவாக்கிக்கொள்ளவும் விளையாட்டு துணைபுரிகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகள் தங்களை சுற்றியுள்ள உலகைப் பற்றியும் மனிதர்களைப் பற்றியும் அறிந்துகொள்கிருர்கள். மேலும் மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்து பழகுவதற்கும் தங்களுக்குள் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ளவும் உணர்ந்துகொள்ளுகிருர்கள். குழந்தைகள் தாங்களாகவே புது செய்திகளைக் கண்டுபிடிக்கவும், அவற்றைத் திறமையோடு கையாளவும் விளையாட்டு இடமளித்து உதவுகிறது.

## புளித்த மோரின் மகத்துவம்!

சாப்பிடக்கூடாத அளவு காடிபோல் புளித்துவிட்ட மோரைக்கூட வீணுக்காதே. அதைப் பாத்திரங்களின்மீது நன்ருய் தடவிச் சற்றுநேரம் ஊறவைத்துத் தண்ணீரில் கழுவி எடுத்தால் பளிச்சென்ருகிவிடும்.

★

அடுப்பிலிக்கும் வாணலியிலே, காரியம் முடிந்து சூடாக இருக்கும்பொழுதே கொஞ்சம் உப்பை அள்ளிப்போட்டு படபடவென்று வெடிக்கவிடு. கூடவே கொஞ்சம் புளித்த மோரையும் விட்டு இரும்புச் சட்டி பூராவும் தடவி, கழுவியெடுத்தால், அதிலிருக்கும் பிசுக்கு அனைத்தும் அப்பொழுதே பளிச்சென விட்டுவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இ. போ. ச. பஸ்ஸில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டியிருக்கிறார்கள். குறிப்பாக திருக்கோணமலையில் வடமராட்சியாரின் ஆட்சியும் செல்வாக்கும் மிகுதியாக உள. இங்கு, நகரசபை வட்டாரங்களில்ஒன்று முழுக்கவும் வடமராட்சி வாக்காளர்களையே பெரும் பகுதியாகக் கொண்டிருக்கிறது. தம்பசிட்டியார், ஏரம்பமூர்த்தியார், மார்க்கண்டு முதலாளி ஆகிய பெயர்கள் கிழக்கு மாகாணத்தை விலைக்கு வாங்கி விட்டதாக அவ்வூர்களில் புகழ்பெற்ற பெரும் புள்ளிகள். பின்னவர் வலிகாமம் மேற்கைச் சேர்ந்தவர். மட்டக்களப்புப் பகுதியில் ஏராளம் நிலபுலம் வாங்கி செல்வாக்குப் பெற்றவர். கதிர்காமத்தில் ஒரு மடமும் கீரிமலையில் வைத்திலிங்கத்தார் மடமும் இவருடையஉபயங்கள்.

ஏற்றுமதி இறக்குமதி கப்பல் வாணிபத் தொழிலில் மேலோங்கிய பருத்தித்துறை ஏரம்பமூர்த்தி குடும்பத்தினர் மாவிட்டபுரத்திலும் செல்வச் சந்நிதியிலும் தர்ம சத்திரங்கள் கட்டியுள்ளனர்.

—(தொடரும்)

## தெரிந்து கொள்ளுங்கள்

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ங்கி விடுதலை அடையும்பகுதிகளுக்கான அரசியல் அமைப்பு முறை வேலைகளில் ஈடுபடத் தொடங்கிற்று. 1942-ம் ஆண்டு பொஸானியாப் பிரதேசத்தில் உள்ள பிஹாக் பட்டணத்தில் பாசிச எதிர்ப்பு இயக்கத்தின் முதல் மகாநாடு நடைபெற்றது. 1943-ம் ஆண்டு நவம்பர் 29-ம் திகதி இதன் இரண்டாவது மகாநாடு ஜயகேயில் நடைபெற்றது. இந்த மகாநாட்டில்தான் நாட்டின் அரசியல் அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட தீர்மானங்கள் நிறைவேறின. அப்பொழுதுதான் சமஷ்டி முறை நிர்வாகம் அமைப்பதென முடிவுசெய்யப்பட்டது.

1944-ம் ஆண்டு ஜெர்மனியர் தோல்விப் புயலில் சிக்குண்டு தவித்தனர். செங்கொடி இராணுவத்தினரும் விடுதலை இயக்கத்தினருமாகச் சேர்ந்து முதலில் பெல்கிறேட்டினையும், சிறிதுசிறிதாக யூகோஸ்லாவியா முழுவதையுமே பாசிசக்கெடுபிடிகளில் இருந்து மீட்டனர். 1945-ம் ஆண்டு நவம்பர் 29-ம் திகதி யூகோஸ்லாவியாப்பாராளுமன்றம் யூகோஸ்லாவியாவினைச் சமஷ்டிக் குடியரசாகப் பிரகடனப் படுத்தியது.

1946-ம் ஆண்டு தை31-ம் திகதி அதிகார பூர்வமான அரசியல் ஷரத்துக்கள் அமுலுக்கு வந்தது.

— க. த. பா. இரகுநாதன்

## விடிவெள்ளி நினைவுக் கட்டுரைப்போட்டி

(10-ம்பக்கத் தொடர்ச்சி)

பிட்டி பெண்கள் கல்லூரி), செல்வன் க. செல்வராசா (அ. த. க. பாடசாலை, துன்னாலை தெற்கு), செல்வி க. இராஜேஸ்வரி (அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி), செல்வன்கள் அ. கனகசூரியர் (உடும்பிராய் இந்துக் கல்லூரி), ஏ. இருதயதாஸ் (கரவெட்டி திரு இருதயக் கல்லூரி), அ. யேசுதாசன் (குருநகர் சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்), செ. நாகேந்திரராசா (நல்லூர் சாதனாபாடசாலை), சி. சண்முகலிங்கம் (எம். எம். ரி. எம். பாடசாலை, திருக்கோணமலை) ஆகியோர் பாராட்டுக்குரிய கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

1-ம் பரிசு 15 ரூபாயும் 15 ரூபாய் பெறுமதியான நூல்களும்; இரண்டாம் பரிசு 10 ரூபாயும் 10 ரூபாய் பெறுமதியான நூல்களும்; மூன்றும் பரிசு 5 ரூபாயும் 5 ரூபாய் பெறுமதியான நூல்களும்.

பரிசளிப்பு யாழ்ப்பாணம் நாநகரசபை மண்டபத்தில் இம்மாதஇறுதிப் பகுதியில் நடைபெறும் இதுபற்றியவிபரங்கள் பரிசில் பெறுவோர்க்குப்பின்னர் அறிவிக்கப்படும்

கட்டுரைப் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும்; இப்போட்டியில் மத்தியட்சகர்ளாகக் கடமையாற்றிய 'ஈழநாடு' சிறுவர் பூங்கா ஆசிரியர், க. சி. குலரத்தினம், க. சிவராமலிங்கம் ஆகியோருக்கும்; பரிசுக்கான பணத்தையும் புத்தகங்களையும் உதவிய மூகாந்திரம் இ. பொ. இராசையா, டாக்டர் நந்தி, திரு. மு. வி. ஆசீர்வாதம், திரு. இ. மகாதேவன் (தேவன்) திருவாட்டிகள் ருத்திரா கந்தசாமி, பத்மா பாக்கியநாதன் ஆகியோருக்கும்; இப்போட்டியைத்திறம்பட நடாத்திஉதவிய 'ஈழநாடு' பத்திரிகைக்கும்விடிவெள்ளி நினைவு மன்றத்தின் நன்றி உரித்தாகும்.

பரிசு பெற்ற கட்டுரைகள் ஈழநாடு 'சிறுவர்பூங்கா' வில் வெளிவரும்.

க சொக்கலிங்கம்,
வி. நி. மன்றஅமைப்பாளர்.

# அயல் நாடுகளில் சைவம் -16

## ஜப்பான் தீவுகள்

### ந. சி. கந்தையாபிள்ளை

ஜப்பானியரின் பழைய மதம் சிண்டோ. சிண்டோ மதத்தினர் இலிங்கங்களை வழிபட்டார்கள் 1869-ல் சிண்டோ மதத்தினர் வழிபட்ட இலிங்கங்கள், அரச கட்டளையால் பொதுஇடங்களினின்றும் எடுக்கப்பட்டன. உள் நாடுகளில் இன்றும் இலிங்கவழிபாடு நடைபெற்றுவருகிறது1.

"கார்த்திகேயக் கடவுள் இந்தியரின் போர்த் தெய்வம். இது ஜப்பானியரின் போர்த் தெய்வமுமாகவுள்ளது. ஜப்பான் தீவுக்குப் பௌத்தமதம்பரவியபோது இந்தியரும் அங்கு சென்றார்கள். ஆகவே இத்தெய்வ வழிபாடு அங்கு காணப்படுவது அதிசயிக்கத்தக்கதன்று. இந்திய தெய்வங்களையும் புராணக்கதைகளையும் பற்றி ஆராய்ச்சி நடத்திய மேல்நாட்டவர் இந்தியத் தெய்வங்கள், ஜப்பான், சீனா, கொரியா முதலியநாடுகளில் இந்தியப் பெயர்களில் அல்லது வேறுபெயர்களில் வழிபடப்பட்டனவென்று சான்றுப் படுத்தியிருக்கின்றனர். மிகப்பழைய காலத்தில் நேபாளத்தினின்றும் வெளியேறிய மக்களே ஜப்பான் தீவுகளிற் குடியேறியிருந்தார்களெனவும் ஐதீகமுளது. ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் போக்குவரத்து நடைபெற்றபோது பிராமணர் அங்கு சென்றார்கள். அவர்களால் கொண்டுசெல்லப்பட்ட மகேசுவரர், காளி, சரஸ்வதி முதலிய தெய்வங்களின் உருவங்கள் அங்கு காணப்படுகின்றன2.

"பாலி, யாவா, சுமத்திரா, ஜப்பான், ஹாவே முதலியதீவுகளிலும் இந்துச் சீனாவிலும் இந்துசமயமும் இந்தியப்பண்பாடும் வேரூன்றியிருந்தன. ஜப்பானில் இன்றும் நூற்றுக்கணக்கான இந்தியத் தெய்வங்களின் உருவங்கள் இருக்கின்றன இந்தியாவில் எவ்விடத்திலாவது இத்தெய்வங்கள், ஜப்பானியர் வைத்திருப்பவை போலப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்க வில்லை ஜப்பானியரின் ஒருகோவிலில் ஆயிரம் தெய்வங்களும் இன்னொரு கோயிலில் பதினாயிரம் தெய்வங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன3.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் ஜப்பானில்இந்துத் தத்துவஞானக் கொள்கையுடைய ஒருபிரிவினர் இருந்தனர். அவர்கள் உயிர் இறுதியில் கடவுளோடு சேர்ந்து கொள்கிறதென்னும் கொள்கையுடையவர்களாக விருந்தார்கள் அவர்கள் புத்தரோடு பிறபல தெய்வங்களையும் வணங்கினார்கள். கணேசர், மண்டைஓடு, பாம்பு, புலித்தோல் முதலியவற்றோடு கூடிய சிவன், காளி, வீணையோடு கூடிய சரஸ்வதி, இலக்குமி முதலியன அத்தெய்வங்களுட்சில. 1820-ல் பிலிப்பைன் தீவுகளுள் ஒன்றில் தென்னிந்திய வணிகரால் கொண்டுசெல்லப்பட்ட வெண்கலச்சிவன் உருவம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது4.

ஜப்பானில் கொருசி (Horiuzi) கோயிலில் குருமாரால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நூல்கள் சில வங்காளி எழுத்துகளால்எழுதப்பட்டவை. அந்நூல்கள் கி. பி. 11-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை

### பிலிப்பைன்தீவுகள்

பிலிப்பைன்தீவுகளில்மிகப் பழங்காலத்தில் இந்தியமக்கள் குடியேறியிருந்தார்கள். பிலிப்பைன்தீவுகளில் வழங்கும் மொழியில் வழங்கும் எழுத்து தென்னிந்தியஎழுத்திலிருந்து தோன்றியது மலைகளில் வாழும்மக்களிடையே மும்மூர்த்திகள், வேதகாலத் தெய்வங்களின் வழிபாடு காணப்படுகின்றது. பிலிப்பைன் தீவுகளில் பொன், வெண்கலம், செம்பு முதலியவற்றால் செய்யப்பட்ட சிவன் திருவுருவங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன அங்கு வாழும் மக்களிற் பெரும் பாலோர், சிறப்பாக சாம்பலிசிங் (Zambales) வாழ்ந்தோர் தலையின் முன் பக்க மயிரைச்சிரைத்து உச்சியில் மயிரைக்கூட்டிக்கொண்டை முடிந்தார்கள் இவ்வழக்கம் இன்றும் ஒரிசாவிலும் தென்னிந்தியாவிலும் வழக்கிலுள்ளது சேரம் (Seram) தீவில் பொன்னால் செய்யப்பட்ட சிவனுருவமொன்று கண்டு பிடிக்கப்பட்டது. திமூர் (Timur) தீவில் தருதாஎன்னுமிடத்தில் பொன்னாற் செய்யப்பட்ட திருமூர்த்தி, காலன் உருவங்கள் கிடைத்தன. செலிபிசி (Celebes) தீவின் சிவவழிபாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன. அங்கு வழங்கும் மொழியும் இந்தியச் சார்புடைதாகவிருக்கின்றது. சம்பாத் (Samba) தீவிலுள்ளவர்கள் கற்சிலைகளை வணங்குகிறார்கள். நியுகின்னியிலும் சிவவழிபாட்டுச் சின்னங்கள் காணப்படுகின்றன பிலிப்பைன் தீவுகளில் ஒரு செம்பு இலிங்கமும் அட்டணைக் காலிட்டுக் கொண்டிருக்கும் பெண்தெய்வஉருவமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன4

போர்மோசாத் தீவுக்கு எதிரிலுள்ள ச்வான் சௌ (Ch-wan-Chow) என்னும் துறைமுகப்பட்டினத்திலுள்ள சீனரின் கோவிலில் தென்னிந்தியா தொடர்பான சிற்பங்கள் காணப்படுகின்றன இச் சிற்பங்கள் கசேந்திர மோட்சம், கண்ணன் உரலோடுகட்டப்பட்டிருத்தல் போன்றவை இவற்றின் காலம் கி பி 12 அல்லது 13-ம் நூற்றாண்டு இத்துறைமுகப் பட்டினத்தில் தென்னிந்திய வணிகர் குடியேறியிருந்திருக்கலாம்5.

பொலினீசியாவில் இந்து மதம் பரவியிருந்ததென்பதை அங்கு காணப்படும் இலிங்கங்களும் கோபுரத்தோடு கூடிய கோவில்களுமசான்றுப் படுத்துகின்றன. பொலினீசியாவுக்கும் தென்னிந்தியாவுக்கும் பழங்காலத்தில் தொடர்பிருந்தது. பொலினீசியர் பயன்படுத்தும் ஒருவகை வள்ளம் (குல்லாத் கோனி) இலங்கை, தென்னிந்தியா, கிழக்காபிரிக்கா, மடகாஸ்கர் ஆகிய இடங்களிலும் காணப்படுகிறது. (க. க.)

ஆதாரம்:

1. Shintosm the Indigenous religion of Japan-A. C. under wood.
2. Siva and Sakti-Dhirendra nath Lal.
3. Hindu America-chaman nal.
4. Hinduism outside India -swami Jagadiswarananda.
5. The Cholas-K. A. Nila kanta sastri.

# சிலப்பதிகாரம் ரஷ்ய மொழியில் வெளியிடப்படும்

இந்திய இலக்கியச் செல்வங்களை வெளியிடுதல், ரஷ்யாவிலுள்ள நௌகா பதிப்பக கீழ்த்திசை இலக்கியப் பிரிவின்முக்கிய பணியாகும். ஆண்டுதோறும் இன்றைய இலக்கிய நூல்களை வெளியிடுவதுடன், இலக்கியம், தத்துவம், சட்டம் பற்றிய பண்டைக்கருவூலங்களின் ரஷிய மொழிபெயர்ப்பையும், நௌகா பதிப்பகத்தின்கீழ்த்திசை ஆராய்ச்சி வல்லுநர்கள்வெளியிடுகின்றனர்.

ராமாயணமும், மகாபாரதமும் ஏற்கனவே அழகிய முறையில் வெளியிடப்பெற்றுள்ளன. சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளிலுள்ள தேவதைக்கதைகளும், 'நீதிபோதனைக் கதைகளும்' ஒரு நூலாக வந்துள்ளன. 'பஞ்சதந்திரம்', ஹிதோபதேசம்", சோமதேவர்எழுதிய 'கதைக்கடல்', இருபத்தைந்து வேதாளக்கதைகள்' 'விக்கிரமாதித்தன்கதை', "எழுபது கிளிக்கதைகள்', முப்பத்திரண்டுசந்நியாசிக்கதைகள்', ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன 'விக்கிரமாதித்தன் கதை', 'இருபத்தைந்து வேதாளக்கதைகள்', 'எழுபது கிளிக்கதைகள்', சுகசப்ததி' தண்டி எழுதிய 'பத்து அரச குமாரர்களின் வீரச் செயல்கள்' ஆகியவை தனி நூற்களாக வெளிவந்துள்ளன. இவை சில இரண்டாம் பதிப்புக்களாகவும்வெளிவந்துள்ளன.

கதைகளைத் தவிர ஆராய்ச்சி நூல்களையும் நௌகா, பதிப்பகம் வெளியிட்டிருக்கிறது. 'மனுநீதி', தம்மபதம்', 'புத்த ஜாதகக்கதைகள்', 'பிருஹதாரண்ய உபநிஷதம்' ஆகிய நூல்களும் வெளிவந்துள்ளன. 1965-ம் ஆண்டு முதல் இந்நூல்கள் [illegible] கள்' என்ற பெயரில் வெளிவருகின்றன, 1965-ல் 'சாந்தேக்ய உபநிஷதம்' என்னும் தலைசிறந்த தத்துவ நூல் பிரசுரமாயிற்று. 1964-ல் தொடங்கப்பெற்ற உபநிஷதப் பதிப்பு வேலை 1966-ல் முடிவடையும்.

### 1966-ல் 'காமசூத்திரம்'

இவ்வாண்டில் 'காவ்யாலங்காரம்' என்ற 6-ம் நூற்றாண்டு நூலும், வாத்ஸாயரின் 'காமசூத்திரம்' என்னும் 4-ம் நூற்றாண்டின் நூலும் வெளியிடப்பெறும். 'காவ்யாலங்காரம்', கவிதையின் அணி இலக்கணத்தைக் கூறும் தலையாய நூல், 'காமசூத்திரம்' மிகச்சுவையான பண்டை இலக்கிய நூலாகும். அது இந்தியாவில மட்டுமல்லாது, உலகிலேயே தன்னிகரற்ற கலைக்களஞ்சியமாகும்.

1966-ல் தொன்மை வாய்ந்த இந்திய நூல்களில் ஒன்றான 'ரிக்வேதம்' ரஷ்ய மொழியில் வெளியிடப்பெறும். அதன்பின் 'பண்டை இந்தியக் கவிதைகள்' என்னும் நூல்வெளிவரும். அமருஹாலா, பர்த்ருஹரி முதலிய கவிஞர்களின் படைப்புகளை இதில் காணலாம். அமரு எழுதிய நூறு கண்ணிகளும்' ஹாலா எழுதிய எழுநூறு கண்ணிகளும், பர்தரு ஹரியின் முன்னூறு ஸ்லோகங்களும் இதில் உள்ளன. காதல் பற்றியும், அறநெறி பற்றியும் இவைபேசுகின்றன.

9-ம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற 'தவன்யலோகா' என்னும் கவிதைத் தத்துவ நூலும்இவ்வாண்டில் வெளிவரும். இதுசோவியத் இலக்

(12ம் பக்கம் பார்க்க)

## தனவந்தரும் ஏழை இராமுவும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றால் எனது கௌரவம் குறையும்."

"ஒருக்காலும் முடியாது" என்றார் இராமு.

"உனக்கு நூறு ரூபாய் தருவேன், மதிப்பாயா?"

"அற்ப காசுக்காக உன்னை மதிக்கமாட்டேன்."

"இருநூறு தந்தால்?"

"மாட்டேன்"

"ஆயிரம் தருவேன்."

"முடியாது, முடியவே முடியாது,"

தனவந்தருக்கு என்ன செய்வது, என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவருக்கு ரோஷம் வந்தது.

"சரி, என் சொத்தில் பாதியை உனக்குத் தந்து விடுகிறேன். இராமு, நீ என்னை மதிக்கவேண்ணும்,"

"என் சொத்தில் பாதியை நீ தந்துவிட்டாயானால், உனக்கும் எனக்கும் சொத்துச் சமமாயிருக்கும். எனவே நானும் நீயும் சமம். பின்னர் நான் உன்னை ஏன் மதிக்கவேண்டும்?" என்றார் இராமு.

தனவந்தருக்கு ரோஷம் அளவுக்கு மீறிவிட்டது. அவர் சொன்னார்;

"இராமு, சொத்துக்கள் அனைத்தையுமே உன்னிடம் தந்து விடுவேன். நீ என்னை மதிக்கவேண்டும்"

இராமு சிரித்தபடியே சொன்னார்:

"உனது அவாவை நான் அறிவேன். ஒன்றை மட்டும் உனக்கு நினைவூட்டுகிறேன். உனது சொத்துக்கள் அனைத்தையும் நீ என்னிடம் விட்டாயானால், நான் தனவந்தனாகவும் நீ ஏழையாகவும் மாறிவிடுவோம். அப்பொழுது நான் உன்னை மதிக்கத் தேவையில்லையே!"

தனவந்தரின் முகத்தில் அசடுவழிந்தது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

எழுதுவது

சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[16-7-66—23-7-66]

**மேட இராசி**

நண்பர்- உறவினர்- அந்நியர் உதவி கிட்டல், எதிர்பாராத சங்கடங்கள் தோன்றிச் சஞ்சலம் தரல்-உடல் ரோகபீடை காட்டல்-நிலைமாற்றம்-பதவி அல்லது அதிகார அதிகரிப்பு-பெண்களால் இடையிடை தொல்லை.

**இடப இராசி**

நினைத்தவை தடைப்பட்டு ஏமாற்றம்-பொருள்பறிமுதலாதல்-புதிய நிலையேற்படல்-இனபந்துக்கள் வாக்குக் கலகம்-செய்காரியத் தடை-பூமிலாபம்-கமத்தொழில் விருத்தி-குடும்பப் பகை.

**மிதுன இராசி**

ரோகபீடை அதிகரிப்பு-கண்ணில்,வயிற்றில் ரோகம் காணல்-சத்துருக்களால் கஷ்டம்-ஆயுதபீடை- பிரயாண சங்கடம்- தொழிற்தடை-வித்தைக் குறைவு-பண முடையால் கடன்படல்.

**கடக இராசி**

ரோகபீடை-நெஞ்சில் ரோகம் காணல்-பெண்களால் அவமானம்-அலைச்சல் அதிகரிப்பு-குடும்பத்தில் சச்சரவு-செய்தொழில் ஏமாற்றம் வித்தைக்குறைவு-கடன்பயம்-உத்தியோகத்தில் சங்கடம்-பெண்களுக்கு தொல்லைகள்.

**சிங்க இராசி**

செய்தொழில் மத்திமபலிதம்-வாக்குவன்மையில் சித்தி-கல்விப் பேறு-இடையிடை ஏமாற்றம்-அதிக செலவு-கடன்படல்-பூமிபலிதம்-ஊழியர் தொல்லை-உத்தியோகத்தில் அலைச்சல்-பெண்களால் தொல்லைகள்.

**கன்னி இராசி**

சுகசீவனம்-இலட்சுமிகரம் -பொருட்பேறு-சயன, போசனசுகம் -பெண்களால் உதவி கிட்டல்-பூமிப்பலன்-வாக்குக்கலகம் காரணமாக பொருட்சேதம் - உத்தியோகச்சிறப்பு-தொழில்விருத்தி.

**துலா இராசி**

நிலைப்பிரிவு-செய்காரியானுகூலம்-பிரயாணத் தடை-களத்திரபுத்திரசுகம்-இடையிடை புத்திரரால் செலவு அதிகரித்தல்- உத்தியோகத்தில் அதிகாரவிருத்தி-பெண்களால் அவமானச் சொற்கேட்டல்-தொழில் சமசித்தி

**விருச்சிக இராசி**

வித்தை மேன்மை-கல்விச் சிறப்பு-கஷ்டங்கள் குறைதல்-ரோகபீடை குறைதல்-ஊழியர்உதவி- நிலைமாற்றம் -சத்துரு தொல்லைகள் குறைதல்-பெண்களால் அவமானம்-கடன் உபாதைகள் குறைதல்- உத்தியோகத்தில் மத்திம பலிதம்.

**தனு இராசி**

வீண்செலவு- ரோகபீடை அதிகரிப்பு குடும்பத்தில் சச்சரவு-புத்திரரால் தொல்லைகள்-வயிறு, கண்களில் நோய் காணல்-வாகனக் கஷ்டம்-பூமியால் செலவதிகரிப்பு-வாக்குக்கலகம்-போசன,சயனசுகக் குறைவு-பிரயாணக் கஷ்டம்.

**மகர இராசி**

களத்திரகஷ்டம்-பொருள் வளம்- சத்துருக்களால் தொல்லைகள்-மனச்சஞ்சலம் -ரோகபீடை-பொருள் நட்டம்-பந்துக்கள் விரோதம்-பெண்வழிக் கஷ்டம்-வயிற்றில் ரோகம்-அவமானம்-உடல் நலிவு-செய்காரிய சித்தி.

**கும்ப இராசி**

செய்காரிய சித்தி-சத்துருக்களால்தொல்லைகள்-இனபந்துக்களாலும், குடும்பத்தாலும் விரோதங்கள் அதிகரித்தல்-மனச்சஞ்சலம்-பொருள்வளக் குறைவு-நிலைகேடு-உத்தியோகத்தில் மத்திம பலிதம்-ஊழியர் உதவி

**மீன இராசி**

ரோகபீடை- பிணியால் வைத்தியச் செலவதிகரிப்பு -பெரும் நட்டம்-பந்துக்கள் விரோதம்-குடும்ப கலகம்-தொழிற் குறைவு-சித்தாகூலம்-அரசாங்க பயம்-வஸ்திர லாபம்.

# ரஷ்ய மொழியில் சிலப்பதிகாரம்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இய. மொழியியல் வல்லுனர்களுக்குப் பெரிதும் பயன்படும் நூலாகும்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில்பாலிமொழியில் எழுதப்பெற்ற'சுத்திநிபாதகா' என்னும் அரிய நூலையும் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பண்டை இந்திய பூகோளத்தையும், அரசியல், சமுதாயச் சூழ்நிலையையும் இந்நூல் விளக்குகிறது. பற்பல தென்கிழக்கு ஆசியநாடுகளில் இதுபோற்றப்படுகின்றது.

## இளங்கோவின் 'சிலப்பதிகாரம்'

இவ்வாண்டு இளங்கோவடிகளின் 'சிலப்பதிகார'மும் 'உதயணன்கதை'யும்'கதைக்கடலும்' ரஷிய மொழியில் வெளியிடப்பெறும். இந்திய நாட்டுப்பாடல்களும் கதைகளும் இவ்வாண்டில் வெளிவரும்.

1875-ல் ஐமினயேவ் தொகுத்த'குமரன் நாட்டுக்கதைகள்' என்ற நூல்வெளிவரும் சென்ற நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்து' இக்கதைகளை மொழி பெயர்த்தார் மினயேவ் என்னும் ரஷிய இந்திய இயலாளர்.

இதைத்தவிர 'மத்தியஇந்திய தேவதைக்கதைகள்' 'பண்டைஇந்தியப் புராணக் கதைகள்' ஆகிய நூல்களும் விரைவில் வெளியிடப்பெறும். 16—18-ம் நூற்றாண்டு இந்திய ஓவியங்கள் என்னும் நூலையும் இங்கு குறிப்பிட வேண்டும். லெனின்கிராட் சுவடிச் சாலையிலிருக்கும் பிரதிகளைக்கொண்டு இந்நூல் வெளியிடப்பெறும்.

லெனின்கிராட், மாஸ்கோ முதலிய நகரங்களிலுள்ள இந்திய இயலாளர்களின் உழைப்பில் ஒருபகுதியே இவை என்றுசோவியத் யூனியனில் பண்டை இந்திய இலக்கிய நூல்கள் ஒரு லட்சம். இரண்டு லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன.

## கலையரங்கம் தொடர்ச்சி

# மாடிவீட்டு ஏழை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டதையிட்டு பாபு வேதனைப்படுகிறார்.

மாடிப்படி ஏறினால் தான் இவரைப் பார்க்கலாம்! மாடியில்தான் பாபுவின் வாழ்க்கை! தனியன்தான்.

''இதோ இருக்கு பாருங்க, இதுதான் என் மனைவி'' என்று யார் போனாலும் தன்ரேடியோ கிராமை காட்டுவார். ''இது கெட்டுப் போச்சு, ரிப்பேர் செய்வதற்கு கையிலே பணமில்லே! கொஞ்ச நாளைக்கு முன்னால் ஒரு தயாரிப்பாளர் வந்து எண்பதினாயிரம் ரூபாய்தரலாம், நடிக்கும்படி கேட்டார். 'ரோல்' நல்லாயில்லே! மறுத்திட்டேன். நான் கலைஞன்! எனக்கு பிஸினஸே தெரியாது'' என்று கலைக்காகவே வாழும் தன் சுபாவத்தைக் காட்டிக்கொண்டார். மாடி வீட்டில்வசித்தாலும், இவர் ஒரு மாடி வீட்டு ஏழை. அதனால் தான் என்னமோ 'மாடி வீட்டு ஏழை' என்ற படத்தை பிடிக்கப்போகிறார்.

இந்த செப்டம்பரிலே 'மாடி வீட்டு ஏழை' ரிலீஸாகுமென்கிறார் இநத மாடி வீட்டு ஏழை பாபு. பொறுத்திருந்து பார்ப்போமே! ''படம் எடுக்கத் தொடங்கியபோது பலரு திட்டினாங்க!இவனெங்கே 'டயலுக்கு' படத்தை முடிக்கப் போகுதுன்னு! ஆறு மாதத்திலே படத்தை முடிச்சுக் காட்டினேன். இப்ப படம் வந்திட்டுது. எரிச்சல் உள்ளவர் பலமாதிரி திட்டுறான், திட்டட்டுமே!'' என்று பாபு வருத்தப்படுகிறார்.

நாடக விமர்சனம்

# கண்டி அரசன் ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன்

நேர்மை மிக்க, மக்களுக்காக உழைக்கும் மன்னனாக 'கண்டி அரசன் ஸ்ரீ விக்ரமராஜசிங்கன்' மேடையேற்றப்பட்டான் காமுகனை, கொடியவனாகவே இதுவரை காலமும் கண்டி அரசனைக் கண்டோம். ஆனால் இந்த நேர்மைமிக்க கண்டி அரசன் அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரியில் திரு. ஆர். ஜெகசோதியால் மேடைக்கு வந்தான்! சரித்திர ஆதாரங்களை வைத்த அவன் நேர்மையாளனாக்கப்பட்டிருந்தான்,

கண்டி அரசனை நடித்த ரி. ஜெரோம் மகா அதிகாரியைக் குற்றவாளியென நிரூபிக்கும் கட்டத்தில் அருமையாக நடித்தார் விக்ரமனைக்கொண்டு தனது திட்டத்தை நிறைவேற்ற வைக்கும் கட்டத்தில் பிலிமத்தலாவையின் நடிப்பு-சபாஷ்! பிலிமத்தலாவையாக வி. கணேஷ்வரன் தோன்றினார். குமாரி ஹாமியாக நடித்த செல்வி கமலா ராசரத்தினம் பரவாயில்லை.

பாடல்கள் இனிக்கின்றன. எம். கண்ணன் இசையமைத்துள்ளார்.

ஒளி, ஒலி, மேடையமைப்பு குறை சொல்ல முடியாதளவில் இருந்தன.

1803-ம் ஆண்டிலிருந்து 1815-ம் ஆண்டுவரை ஸ்ரீவிக்ரமனின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களைச் சரித்திர ஆதாரங்களுடன் தயாரித்துத் தந்திருக்கும் இந்த வரலாற்று நாடகம் சரித்திர ஆராய்ச்சியாளர், ஆசிரியர்கள், மாணவ மாணவிகளுக்கு மிகவும் பயன் தரக்கூடியவிதத்தில் அமைந்திருந்தது.

--அரசு

# கலைக்களஞ்சியம்

ஆங்கிலத்தில் சேமயர்ஸ் என்சைக்ளொப்பீடியா வெளியிட 10 ஆண்டுகளும் என்சைக்ளொப்பீடியா பிரிட்டானிகாவின் 9-ம் பதிப்பைத் திருத்தி வெளியிட 15 ஆண்டுகளும் ஆகின. 10 தொகுதிகொண்ட ஜப்பான் மொழி கலைக்கழஞ்சியம் வெளியிட 12 ஆண்டுகளாயிற்று. இத்தாலி மொழிக்கலைக் கழஞ்சியம் 9 ஆண்டுகளில்வெளியாயிற்று. தமிழ்மொழியில்9தொகுதிகள் கொண்ட கலைக் கழஞ்சியம் வெளியிட 16 ஆண்டுகளாயிற்று.

# மொழிகள்

இந்திய மொழி (1951) ஆய்வின்படி இந்தியாவில் 179 மொழிகளும் 544 கிளை மொழிகளும் உள்ளன. ஆயினும் பெருமொழிகளில் சிலவே உள்ளன. இம் மொழிகள் எல்லாம் மூன்டா. திராவிட இந்தோ-ஆரிய, திபெத்தோ-சீன என்னும் நான்கு பகுதிகளுள் அடங்குவனவாம்.

# சிந்திக்கும் மனிதன்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆவியி லைந்தை
அபரத்தே வைத்தோதில்
ஆவியீ ரைந்தை
அகற்றலாம்—ஆவியீர்
ஐந்தறலாம் ஆவியீ
ரைந்துறலாம் ஆவியீர்
ஐந்திடலாம்
ஓரிரண்டோடாய்ந்து.

என்ன அற்புதமான செய்யுள்? எத்தனை ஆழமான செப்பொருள்கள்? ஆதலால் ஐந்தெழுத்தைச்சிந்திப்போமானால் துவர்கள் சிந்திப்போம்.

தனியிழையை எளிதில் அறுத்துவிடலாம். இருபத்தையாயிரம் இழைகளைக் கூட்டி முறுக்கிவிட்டால், அக்கயிற்றால் தேரை இழுத்துவிடலாம். அதுபோல் பல லட்சம்முறை மந்திரஜெபம் கூடுமானால் இறைவனைத் தரிசித்துவிடலாம்.

96கோடிராமமந்திரஜெபத்தால் தியாகராஜசுவாமிகள் ஸ்ரீராமரை நேரில் தரிசித்தார். அண்மையில் வாழ்ந்த உண்மைத் துறவியாகிய பாம்பனடிகள் 36 நாள் பாம்பன் வலசையில் மயானத்தில் குழிவெட்டிக்கொண்டு, அக்குழியிலிருந்து இடையறாது சடக்கரமந்திரத்தைச்செபித்து இளம்பூரணனை நேரில்கண்டு தரிசிக்கப் பெற்றார்.

இடையறாது கடைந்தால் பாலிலிருந்து வெண்ணெய் வெளிப்படுவதுபோல், இடையறாது தியானஞ்செய்தால் எப்பெருமான் வெளிப்படுவான்.

விறகிற் றீயினன்
பாலிற்படு நெய்போல்
மறையநின் றுளன்
மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட்
டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக்
கடைய முன் னிற்குமே
— அப்பர் பெருமான்

உடம்பை உயிர் செலுத்துகின்றது; உயிரை இறைவன் செலுத்துகின்றான்.

காரைடிரைவர் செலுத்துகின்றான். டிரைவரை எஜமான் செலுத்துகின்றான் என்பது போல் உணர்க.

உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை; டயருக்குள் ட்யூப்; ட்யூப்புக்குள் காற்று.

இறைவனுடைய உதவிகளை நாம் ஆழமாக எண்ணினால் உள்ளம் உருகும்; அன்பினால் என்பும் உருகும். முடிவில் உயிர் உருகும்; உயிர் உருகினால் உயிரில் உள்ள சிவம் உயிருடன் ஒன்றிவிடும்.

அரக்கின் இடையில் தங்கம்; தங்கத்தின் இடையில் இரத்னமணி.

அரக்கு உருகினால் தங்கம் உருகும்; தங்கம் உருகினால் மணி அதில் பதிந்து விடும். அதுபோல் உள்ளம் உருகி, உயிர் உருகி சிவத்துடன் ஒன்றுபடவேண்டும்.

நம் உள்ளமே உருகவில்லையானால் உயிர் எவ்வாறு உருகும்? இறையுடன் எவ்வாறு ஒன்றுபடமுடியும்?

ஆதலால், அன்பைப் பெருக்கி உள்ளத்தையும் உணர்வையும் உயிரையும் உருக்கி, இறையுடன்கலந்து இன்புறுவதுவே சைவசித்தாந்தத்தின் முடிந்த முடிபாம்.

முருகன் குமரன்
குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந்
துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும்
புவியும் பரவும்
குரு புங்கவஎண்
குணபஞ் சரனே

என்று அநுபூதி இதனை நமக்கு உணர்த்துகின்றது.

உணவு தேடுகின்ற நாம் உணர்வுந் தேடவேண்டும். நித்த அநித்த வேறுபாடுகளை உணர்வதுதான் உணர்வுடைமைக்கு அழகாகும்.

நேற்றிருந்தார் இன்று இல்லை.

மகாபாரதத்தில் [illegible] பிரச்சனை என் [illegible] உளது. அது மிக மிக அருமையானது. யட்சமூர்த்தி தருமரைப் பார்த்து வினவுகின்றார். ''தருமா! உலகிலே மிகவும் ஆச்சர்யமானது எது? தருமர் ''தினந்தோறும் இறக்கின்றவர்களைக் கண்டும் தனக்கு மரணம் இல்லையென்று எண்ணுகின்றானே! அதுதான் பெரிய ஆச்சர்யம்'' என்றார்.

இறப்பெனும் மெய்ம்
மையை இம்மையாவர்க்கும்
மறப்பெனும் அதனின்
மேல் கேடுமற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே
துணை செய்யாவிடில்
பிறப்பெனும் பெருங்
கடல் பிழைக்க லாகுமோ

என்று தயரதர் கூறுகின்றார்.

ஆதலால் மரணம் வருமுன் இறைவன் சரணத்தை வழிபட்டு நலம்பெறவேண்டும்.

இதுகாறும் கூறியவற்றால் முப்பொருள் உண்மையும், இறைவன்தந்த அரிய பிறப்பு மனிதப்பிறப்பு என்பதும், இப்பிறப்பினால் இனியொருபிறப்பு எடுக்காதவகையில் நாம் இறைவனுடன் ஒன்றி சிவாத்துவிதம் பெறவேண்டும் என்பதும், அதற்குரியநெறி அன்பினால் உருகுவது என்பதும் ஐந்தெழுத்தை ஓதி உய்யவேண்டும் என்பது மரணம் நேரும்முன்கரணம் பெறவேண்டும் என்பதும், தெரியப்பெறுகிறோம்.

தென்னாடுடைய சிவனே போற்றி.

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.

— தூத்துக்குடி சைவசித்தாந்த மகாசபையில் திரு. கிருபானந்தவாரியார் நிகழ்த்திய தலைமை உரை—மாதகல் நுணசை முருகமூர்த்தி விழாமலர்.

# கேரள ஆதி வாசிகள்

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

சுட்டது கொக்கை விழுந்தது குளக்கோழி (நீர்க்கோழி)

கவிதை: அடுத்து முயன் [illegible] தொடுத்த உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம் பருவத்தால் அன்றிப் பழா'

'நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று எல்லாம் அவன் செயல்' என்பதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

**வியாபார ஸ்தாபனம்**

சாவகச்சேரி-கண்டி வீதியில் தெய்வேந்திரா தியேட்டருக்கு முன்பாக, வசதியான பெரிய பலசரக்கு வியாபார ஸ்தாபனம் சகல தளபாடங்களுடனும் கமிஷனுக்கு அல்லது விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: ச. நவரத்தினம், தேநீர்க்கடை, பஸ் ஸ்டாண்ட், கொடிகாமம். 761

பசு

(Red Paul) கொம்பில்லா பால் பசு விற்பனைக்கு உண்டு. செல்லையா, 18/3, சாமியார் வீதி, கொழும்புத்துறை. 766

எஸ்டேட்:

கல்குடாவில் 18 ஏக்கர் கவனிக்கப்படாத தென்னந்தோட்டம் ஏக்கர் 350 ரூபாபடியும் இருபாலை கோப்பாயில் 20 பரப்பு தென்னந்தோட்டமும் விற்பனைக்குண்டு. எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். 39/4 சோமதேவி பிளேஸ், கிருலாபொன, கொழும்பு—5. 749

கைத்தொழில் ஸ்தாபனம்

ஓர் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்- பெறுமதியுள்ள லைசென்சுடன். தொழில் தொடர்ந்துநடைபெறுகிறது. போட்டியே இல்லாத தொழில். விபரங்களுக்கு விளம்பர இல: 762, ஈழநாடு மே/பா என்றவிலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 762

எஞ்ஜின்

57 குதிரைப் பவர் லிஸ்ரர் என்சின் 3 பேஸ், ரேடியேற்றர் கூல், செல்வ்ஸ்ராட், 48 கிலோ உவாற் ஜெனரேற்றர் செற், சுவிச்போட்டுடன் சோமசிறீ 7-ம் நம்பர் கல்லர் புதியது. பெனன்சூலர் இன்டஸ்ரியல் கம்பனி லிமிட்டெட், மந்திகை, பருத்தித்துறை. 763

வீடும் வளவும்

யாழ்ப்பாண நகரத்தில் நாலுபரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. மனுச்செய்யவும். 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7113 764

காணி

யாழ்ப்பாணம்-நாவற்குழி கண்டி வீதியில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மனுச்செய்யவும் 383, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7113. 795

## விற்பனைக்கு

கார்

EN பேஜோ 403 (Pergeot 403) அண்மையில் சம்பூரணமாகத் திருத்தப்பட்டது. யாழ்ப்பாண உதவி மதுவரி அதிபர் காரியாலயத்தில் பார்வையிடலாம். 759

மெசீன் வண்டிகள்

10'' உயரமும் 2'' கனமுங் கொண்டறபர்ரையர் சில்லுகள் பொருத்தப்பட்ட தண்ணீர் இறைக்கும் மெசீன் வண்டிகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வேலமுகன் தொழிற்சாலை, சுன்னுகம். ஒன்றின் விலை ரூபா 150/- 760

## கல்வி

வகுப்புகள்

கலை/ விஞ்ஞானம்/ வர்த்தகம்/3 மாத, 6 மாத, 1வருட சுருக்கெழுத்து - தட்டச்சு (தமிழ்/ஆங்கிலம்) க. பொ. த. (சாதாரணம் / உயர்தரம்) வகுப்புக்கள் நடக்கின்றன. சேர்ந்து படிக்கவும். (1) வர்த்தக கல்லூரி, பருத்தித்துறை (2) வர்த்தகக் கல்லூரி, வதிரி, கரவெட்டி. 750

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு நீரந்தி முதலிய வை கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்ற லோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

தையல் தெரிந்தவர்

தையல் பழகியதற்கான சான்றிதழுள்ள ஒருவர் தேவை. சொந்தத்தில் மெஷின் உள்ளவராக இருக்கவேண்டும். தையல், பின்னல் மற்றும் கைவேலைகளுக்கும் இங்கே பயிற்சி அளிக்கப்படும். திருமதி கனகா உலகசேகரம், திரு. வி. இராமசாமி மே. பா., தொண்டைமானாறு. 757

## கூட்டுறவாளர் தினவிழா

குரும்பசிட்டி, வெள்ளி

வலி-வடக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாஜத்தினரின் ஆதரவில் தெல்லிப்பழையூனியன் கல்லூரி மண்டபத்தில் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா கொண்டாடப்படவிருக்கிறது. இவ்விழா இம்மாதத்தில் நடாத்தப்படும் எனத்தெரியவருகிறது.


# ஜெனரல் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களைப் புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான

தற்காலிக கட்டட தளபாடங்கள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன் தொர்புகொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் ரேட், யாழ்ப்பாணம்.

போன்: 7024


கணிபிடுங்கும் நடனப் போட்டி

# வேம்படி மகளிர் கல்லூரி இரண்டாம் இடம்!

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற களைபிடுங்குவது போன்ற நடனப்போட்டிகளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர்கல்லூரி இரண்டாம் பரிசைத் தட்டிக்கொண்டது கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இதற்கான பரிசுகள் வழங்கப்பட்டன. பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

சுமார் 50,000க்கு மேற்பட்ட பாடசாலை மாணவ மாணவியர் நேற்று சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற இவ்விழாவில் கலந்துகொண்டனர். களைபிடுங்குவதில் ஈடுபட்ட பாடசாலைமாணவ மாணவியருக்கு நன்றி தெரிவிக்குமுகமாக இந்த விழா நடந்தது.

### பிரதமர் பெருமிதம்

''களைபிடுங்குவதன் மூலம் பெரியதோர் தேசிய சேவையை இந்நாட்டின் பாடசாலைச் சிறுவர் சிறுமியர் செய்திருக்கின்றனர். மாணவர்கள் இந்தக் களைபிடுங்கும் இயக்கத்தில் ஈடுபடுவதன் மூலம் விவசாயிகளுக்கு உதவிசெய்வதோடு மட்டுமல்லாது இந்நாட்டின் தேசிய பொருளாதாரத்தை வளமாக்குவதற்கு வகை செய்வதாகவும் இருக்கும். இது மற்ற நாடுகளுக்கெல்லாம் ஓர் உதாரணமாகவும் விளங்கும்'' என்றும் பிரதமர் தமது பேச்சின்போது குறிப்பிட்டார்.

களைபிடுங்குவது போன்ற நடனப்போட்டியில்கேகாலை மகாவித்தியாலயம் முதலாமிடத்தை பெற்றுக்கொண்டது. மூன்றாமிடத்தைக் கொறணை ஸ்ரீபாளி மகாவித்தியாலயத்துக்குக் கிடைத்துள்ளது.

## கமத்தொழில் விளக்க கூட்டம்

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் விவசாயிகள் கழக கமத்தொழில் விளக்கக் கூட்டம் கரணவாய் அரசினர் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. உணவுற்பத்தி மேற்பார்வையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை பேசுகையில் "விவசாயிகள் புகையிலையை மட்டும் உற்பத்தி பண்ணுவதினால் அதிக உற்பத்தியை எதிர்பார்க்கமுடியாது. அந்நிலத்தில் காலத்துக்காலம் வேறு பயிர்களையும் பயிரிடவேண்டும்'' என்று கூறினர்.

மற்றும் பலரும் பேசினர்.

## மந்திரி சில்வா பார்வையிடுவார்

வவனியா, வெள்ளி

வவனியா மாவட்டத்திலுள்ள முத்தையன் கட்டு குடியேற்றத் திட்டத்தை உத்தியோகபூர்வமாக காணி நீர்ப்பாசன மந்திரி திரு. பி டி சில்வா இம்மாதம் 23ம் திகதி பார்வையிட இருக்கிறார் மந்திரியை வரவேற்று ஒரு பொதுக் கூட்டம் வவனியா எம் பி தலைமையில் நடைபெறும்

## இடமாற்றம்

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தலைமைக் காரியாலயத்தில் கடமையாற்றிய திரு. க. லம்போதரன் கொழும்பு அரச விமானப் படை தலைமைக் காரியாலயத்துக்கு இம்மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வலி-கிழக்கு கூட்டுறவு விழா

நீர்வேலி வெள்ளி

வலி-கிழக்குபலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமைமாலை3 மணிக்கு சர்வதேச கூட்டுறவாளர் தினக் கொண்டாட்டம் ஆரம்பமாகும். பிரதம பேச்சாளர்களாக திருவாளர்கள் எஸ். ஸ்ரீனிவாசன், என். வேதாரணியசேயோன், கே. எஸ். பொன்னுத்துரை, கே. நேசையா, எஸ். கதிரவேற்பிள்ளை செல்வி புஷ்பா செல்வநாயகம் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். கலை நிகழ்ச்சிகளும்இடம்பெறும்.

## மாணவர் மீது நடவடிக்கை

குரும்பசிட்டி, வெள்ளி.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைச்சேர்ந்தஜி. ஸி. ஈ உயர்தர வகுப்பு மாணவர்களில் சுமார் பத்து மாணவர்கள் கல்லூரியிலிருந்து அதிபரினால் விலக்கப்பட்டுள்ளதாகதெரியவருகிறது. பாடசாலை நேரத்தில் வகுப்பு அறைகளில் இம்மாணவர்கள் ஒழுங்கீனமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டின் பேரிலேயே இம்மாணவர்கள் பாடசாலையிலிருந்துநீக்கம்செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

## தாயகம் திரும்பினர்

குரும்பசிட்டி, வெள்ளி

பேராதனை பல்கலைக்கழக புவிஇயற்துறைப் பேராசிரியர் கலாநிதி திரு. கே. குலரத்தினம் காணி, நீர்ப்பாசன அமைச்சு அளித்த உபகாரத் திட்டத்தின் கீழ் இஸ்ரேல் நாட்டிற்கு விஜயம் செய்து, அங்கு நீர்த்தட்டுப்பாடு வரட்சி ஆகியவற்றைத் தீர்த்துக் கொள்ள மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை நேரில் கண்டு அறிந்து தாயகம்திரும்பியுள்ளார். இவர் இலங்கையில் நிலவும் தண்ணீர்ப்பிரச்னைகளைத் தீர்த்துவைக்கநிறுவப்பட்டுள்ள சபையாருடன் கலந்துகொண்டு வேண்டிய ஆலோசனைகளை அளித்துவருவார்.

# விளம்பரம்

## அறிவித்தல்

வைமன் வீதி உபமின்சார நிலையத்தினால் பயனடையும் மின்சாரப் பாவனையாளர்கட்கு

வைமன் வீதி உபமின்சார நிலையத்திலும், அங்கு செல்லும் மின்சார லயின் கம்பிகளிலும் பராமரிப்பு-திருத்த வேலைகள் செய்ய விருப்பதால், 18-7-66ம்திகதியன்று காலை 8-30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின்சார விநியோகம் தடைப்படுமென யாழ்ப்பாண அரசாங்க மின்சாரப்பகுதியினர் அறிவித்துள்ளதைப் பொதுமக்களுக்கு இத்தால் தெரியப் படுத்துகின்றேன்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
15-7-66 671

## மயிலிட்டி கிராமசபையின் இறைமதிப்பு வரிசோலைவரி) அறிவித்தல்

மயிலிட்டிக் கிராம சபையின் எல்லைக்குள் இருக்கும் ஆதனங்களின் பெயரால் இக்கிராமசபைக்குச் செலுத்தப்படவேண்டிய இறைமதிப்புவரி (சோலைவரி) நிலுவைத் தொகைகளை, காணிச் சொந்தக்காரர்களோ, அன்றி குடியிருப்பவர்களோ, 31-7-66-ம் திகதிக்கு முன்னதாக இக்கிராம சபை அலுவலகத்தில் கட்டிப் பற்றுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வறிவித்தலின்படி சோலைவரி நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்கள் மீது, கிராமசபைச் சட்டத்தின் 52 (1) ம் பிரிவின்கீழ் அமைக்கப்பட்ட 19-ம், 20-ம், 21-ம் விதிகளுக்கமைய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டு, நிலுவைகளாகவுள்ள வரித்தொகைகளை இக்கிராம சபை அறவிடும் என்பதையும் இத்தால் தெரியப்படுத்தப்படுகின்றது.

சி. அருணாசலம்
தலைவர்,
கிராமசபை, மயிலிட்டி.

கிராமசபை அலுவலகம்,
மயிலிட்டி,
காங்கேசன்துறை,
10-7-66. 663

## அழைப்பு

அரசாங்கத்தினர் அண்மையில் சமாதான நீதவான் பட்டத்தை எமக்கு வழங்கிக் கௌரவித்ததின் பொருட்டு எமது இல்லத்தில் வருகிற சனிக்கிழமை (16-7'66) இரவு 7 மணி தொடக்கம் அன்பர்களை அழைத்து உபசரித்து அளவளாவ எண்ணியுள்ளோம்.

அவ்வமயம் எமது அன்பர்கள் குடும்ப சகிதமாய்ச் சமுகம் தந்து இக்கொண்டாட்டத்திற் பங்குபற்றுமாறு நானும் எனது பாரியாரும் அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
த. சிவலிங்கம்

'விமலஸ்தான்'
மயிலணி வீதி,
சுன்னுகம். 12-7-66

668


வடமாகாணத்தில்

இரவு - பகல் சேவை செய்யும்

ஒரே ஒரு ஸ்தாபனம்

# உவாட் அன் டேவி

( ஆங்கில மருந்துச்சாலை )

148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாணவருக்கு வழிகாட்டி தொழிற் கல்வியே"

## பழைய மாணவர் சங்க விழாவில் கல்லூரி அதிபர்

யாழ்ப்பாணம், சனி

"கடவுளினுல் ஆக்கப்பட்ட பிரபஞ்சத்தில் மனிதர்களினுல் செய்யப்படும் வேலைகள் எல்லாம் தொழில் என்ற முறையில் உயர்வு தாழ்வு இல்லாததாகும். இழிவான தொழில் என்றுகணிக்கப்படும் ஒரு தொழிலை உயர்ந்த உள்ளப்பாங்குடையவன் நோக்கும் போது அத்தொழிலே அவனுக்கு சிறந்த உயர்ந்ததொழிலாகவும், தாழ்ந்த மனப்பான்மையுடையவன் ஒருவன் நோக்கும்போது அது அவனுக்கு இழிவான தொழிலாகவும் தோற்றப்படும். இந்த உண்மைக்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஒரு பெரியார் மகாத்மாகாந்தியாகும். உயர்ந்த உள்ளங்கொண்டவர் என்று போற்றப்படும் காந்தியடிகள் கைராட்டையினுலே துணி நெய்தார்என்பதை தொழிற்கல்வி கற்கும் மாணவர்கள் மறந்துவிடக் கூடாது."

ஆசியன் பவுண்டேசன் ஸ்தாபனத்தின் ஆதரவில் இயங்கிவரும் வண்ணை தொழில் நுட்பக்கல்லூரியின் வருடாந்த பழைய மாணவர் விழா வைபவத்தில் அக்கல்லூரி அதிபர் திரு. எஸ். கே. அன்ரனி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வைபவத்துக்குத் தலைமைவகித்து சங்கத் தலைவர் திரு. எஸ். யூ. சோமசேகரம் பேசுகையில்; மாணவர்களுடைய தொழில் முன்னேற்றத்துக்கு தம்மாலான எந்த உதவியையும் செய்யக்காத்திருப்பதாகவும், ஒரு கல்லூரிமாணவன் படிப்புமுடிந்ததும் கல்லூரிக்கும் தனக்கும் உள்ள தொடர்பை முறித்துவிடக்கூடாதென்றும் பழைய மாணவன் என்ற முறையில் தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும் என்றும் கூறினுர்


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30 9-30'
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம் ஜி ஆர் — சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்



REGAL—JAFFNA
NOW SHOWING
JAMES STEWART
SANDRA DEE
in
Take Her She's Mine
(Cinemascope--Deluxe Color)



நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
நாகேஷ் - கே.ஆர். விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்


ஐக்கிய வியாபாரச் சங்கம்

## டாக்டர் மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாகஸ்தர்கள் கூட்டத்தில் டாக்டர் க. சி சண்முகரத்தினத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் முன்னேற்றத்தில் டாக்டர் அவர்கள் மிகவும் பங்கு கொண்டிருந்தாரென கூட்டத்தில் டாக்டர் சண்முகரத்தினத்தின் பிரிவு குறித்து நிறைவேற்றப்பட்ட அனுதாபத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய வியாபாரச் சங்க முன்னேற்றத்துக்கு 1953-ம் ஆண்டிலிருந்து டாக்டர் சண்முகரத்தினம் அதிகமாக உழைத்து வந்தாரென்றும் அவரின் அயராத சேவையின்மூலம் சங்கம் பல நன்மைகள் பெற்றதென்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

## தெற்கையும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு இராசதுரை தமது சொற்பொழிவின்போது மேலும் கூறியதாவது:-

தமிழ் வாலிபர்கள் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர் ஆனையிறவுக்கு அப்பால் தெற்கிலும் கிழக்கிலுமுள்ள இயற்கைச் செல்வம் மலிந்ததுமான பிரதேசங்களை வளம்படுத்தவும் தங்கள் சொந்த இடமாக்கிக்கொள்ளவும் இக்காலத்து வாலிபர்கள் நான் நீ என்று முன்னுக்கு வரவேண்டும். இன்று அவர்கள் செய்யும் இந்த நற்பணி நாளை வரும் எமது தமிழ் சமூகத்திற்கு வளமும் உரிமையும் வழங்கி ஒரு சொந்த தமிழ் நாட்டை உருவாக்க உதவியளிப்பதுமாகும்.

இவ்விழாவில் நல்லூர் எம். பி டாக்டர் நாகநாதன் காங்கேசன்துறை எம் பி திரு செல்வநாயகம், வட்டுக்கோட்டை எம் பி திரு அமிர்தலிங்கம், செனட்டர் எல் நடராசா ஆகியோரும் பேசினர்

## சட்ட விரோத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரோதக் குடியேற்ற தடுப்புக் காரியாலயத்திற்கு விஜயம் செய்யவிருக்கும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், பொறுப்பதிகாரி திரு. லயன் சேனநாயக்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதுடன் இதுவரையிலும் தடுப்புமுகாம் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் பார்வையிடுவார். அரசாங்க அதிபர் பொலிஸ் சுப்பிரின்டன் ஆகியோருடனும் இவர் ஒரு மகாநாடு கூட்டுவார் எனவும் கூறப்படுகிறது.

சுமார் இரண்டு வருடகாலமாக காங்கேசன்துறையில் இயங்கிவரும் சட்டவிரோதக் குடியேற்றத் தடுப்பு முகாம் அதிகாரிகள் இதுவரை 545 சட்டவிரோதக் குடியேற்றக்காரரைக் கைது செய்துள்ளனர். இவர்களில் விசா காலவதியாகி நாட்டில் தொடர்ந்து இருந்ததாகக் காணப்பட்ட 59 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளனர் சுமார் 218 பேர் வரையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளனர்.

# நெடுந்தீவு கோரச் சம்பவம்

## விசாரணை தொ[illegible]ருகிறது

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற கோரச் சம்பவம் குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெறுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சதாசிவம் கந்தையா (85 வயது), மயில்வாகனம் கனகசபை (26 வயது), கதிர்காமர் கந்தையா (27 வயது) ஆகிய மூவருக்குச் சொந்தமான சடலங்கள் நேற்று பிரேத பரிசோதனை செய்யப்பட்டன. டாக்டர்வேதநாயகம் பரிசோதனை செய்தார்

இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ள கந்தையா பொடிசிங்கம், வயிரவநாதர் ஐயம்பிள்ளை, ஐயம்பிள்ளை சுப்பிரமணியம், செபமாலை சேவியர், இராஜேந்திரம் ஆகிய ஐவரும் நேற்று மாலை சம்பவம் நடந்த இடத்துக்கு விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்டனர். மாஜிஸ்டிரேட் தொடர்ந்து விசாரணைநடாத்துகிறுர்.

இந்தத்துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சூடுபட்டு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்ட கந்தையா கனகசபை தற்போது யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகிறுர். சந்தேகநபர்களான கந்தையா சதாசிவம், வயிரவநாதர் செல்லப்பா ஆகியோர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. அண்மையில் நெடுந்தீவுக் கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த நான்குசிறுவர்கள் காணுமல் போனுர்களல்லவா? அந்தச் சிறுவர்களின் தமையனுன மயில்வாகனம் கனகசபையும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவர்களில் ஒருவராவார்.

இந்தக்கோர சம்பவத்துக்குப் பிறகுநெடுந்தீவுப்பகுதியில் பொதுமக்களிடையே பெருத்தபீதியும் கலக்கமும் ஏற்பட்டுள்ளது. இரவு ஆறு மணிக்குமேல் வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்துள்ளது. பொலிசார் ரோந்து சுற்றுகின்றனர். நெடுந்தீவுக் காரியாதிகாரி விசாரணை ஒழுங்காக நடைபெறவும், நிலைமையைச்சீர்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுவருகிறுர்.

## சுவீப் முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 17 F 0828 | 11 N 0977 |
| 04 O 0657 | 05 G 0338 |
| 18 F 0647 | 03 S 0828 |
| 12 S 0723 | 16 H 0931 |
| 11 X 0324 | 17 G 0837 |
| 17 C 0982 | 08 C 0928 |
| 07 X 0495 | 16 H 0746 |
| 11 F 0273 | 08 R 0681 |
| 16 Y 0413 | 05 T 0782 |
| 13 K 0263 | 17 W 0633 |
| 20 B 0882 | 15 O 0575 |
| 03 Z 0368 | 15 M 0735 |
| 03 Q 0591 | 10 T 0946 |
| 05 F 0165 | 10 C 0487 |
| 05 D 0650 | 11 L 0591 |
| 06 X 0001 | 07 Y 0011 |
| 11 L 0813 | 20 C 0991 |
| 16 S 0847 | 06 P 0977 |
| 03 C 0498 | 19 D 0158 |
| 01 J 0376 | 13 A 0978 |
| 01 R 0756 | 18 R 0992 |
| 09 H 0872 | 01 C 0495 |
| 01 O 0646 | 02 S 0430 |
| 16 Y 0086 | 06 O 0940 |
| 08 A 0830 | 12 C 0158 |
| 06 R 0983 | 20 L 0293 |
| 05 X 0422 | 17 V 0627 |
| 16 P 0278 | 03 L 0205 |
| 16 N 0472 | 01 K 0342 |
| 08 P 0740 | 17 E 0044 |
| 10 S 0905 | 08 Q 0558 |
| 14 U 0330 | 08 K 0958 |
| 02 V 0244 | 03 W 0351 |
| 02 B 0548 | 11 R 0184 |
| 17 G 0353 | 07 Y 0886 |
| 02 F 0726 | 14 N 0903 |
| 09 L 0079 | 02 D 0020 |
| 07 Z 0207 | 15 O 0387 |
| 20 D 0964 | 18 S 0747 |
| 03 V 0993 | 13 A 0103 |
| 17 Q 0966 | 18 S 0345 |
| 04 Z 0937 | 12 X 0558 |
| 13 U 0471 | 02 J 0863 |
| 11 F 0305 | 14 P 0726 |
| 12 A 0579 | 19 Z 0884 |
| 03 Q 0793 | 18 O 0505 |
| 18 W 0251 | 05 V 0017 |
| 18 M 0262 | 07 E 0987 |

## சப்பரத்திருவிழா

யாழ்ப்பாணம், சனி

வண்ணை வைத்திஸ்வரன் கோவிலில் இன்று சப்பரத் திருவிழா நடைபெறுகிறது. மாலை 6 மணிக்கு திரு வி. ஆறுமுகம் திருவிளையாடல் கதாப்பிரசங்கத் தொடரில் கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.


3-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 3, 6, 9-30 மணி
ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனுல் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.
மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்
ஆடலழகி ஜெயலலிதா,
புதுமுகம் ஸ்ரீகாந்த்
நிர்மலா, மூர்த்தி, ஆஷா
மற்றும் பலர் நடித்த
சித்திராலயா அளிக்கும்
ஸ்ரீதரின்
"வெண்ணிற ஆடை"
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


## கேள்விப்பத்திர அறிவித்தல்

கற்கிடங்கில் மடம் கட்டுவதற்கு (ரூபா 10,000-க்குப் பதிவுசெய்யப்பட்ட) கொந்தருத்துக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களை அக்கிராசனரிடம் இருந்து முற்பணமாக ரூபா 25/-ம் பத்திரப் பணமாக ரூபா 10/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளவேண்டும். (பத்திரப்பணம் ரூபா 10/-ம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது) விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் அக்கிராசனருக்கு 27-7-66 காலை 10 மணிக்கு முன் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும், அதே நேரத்தில் விண்ணப்பப்பத்திரங்கள் உ. ஆ. உ. அதிபர் (வவுனியா) விற்கும் அனுப்பிவைக்கப்படவேண்டும் விபரங்கள் யாவும் கிராமசபை அலுவலகத்திலும் உ. ஆ. உ. அதிபர் அலுவலகத்திலும், அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

(ஒப்பம்) வே. பொன்னையா
அக்கிராசனர்
[illegible]
[illegible]
ஒலுமடு, மாங்குளம்
670


அழுத்தப்பட்ட (Compressed)
ஹார்ட்போர்ட்
★ துளைவுகள் உள்ள வீட்டுகள்
★ சாதாரண வீட்டுகள்
கிடைக்குமிடம்:
ஓட்டோஸ் லிமிட்டெட்,
யாழ்ப்பாணம்.


## கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### அறிவித்தல்

விற்பனைப் பகுதி உட்பட. இக் கூட்டுத்தாபனத்தின் வர்த்தகப்பகுதி 18-7-66 தொடங்கி கொழும்பு 2இல் உள்ள 356 யூனியன் பிளேசில் இயங்கும். வியாபார நிமித்தம் நேரடியாகதொடர்புகொள்ள விரும்புபவர்கள் வர்த்தகப் பகுதியுடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். ஆயினும், கடிதங்களானது தொடர்ந்து இக் கந்தோர் விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும்.

70, யோர்க் வீதி, கொழும்பு-1, 12-7-1966.

பொது முகாமையாளர், கிழக்குப் பகுதிக் கடதாசிஆலைக் கூட்டுத்தாபனம்.

665

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible]தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி [illegible] இலத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org